திருக்கோயில்

OFFICE OF THE STATE EDITOR
111/Gm/72
12 OCT 1972
GAZETTEER UNIT, MADRAS

160

மாலை 14] பரிதாபி — புரட்டாசி. ஐப்பசி — அக்டோபர், 1972 [மணி 13

திங்கள் வெளியீடு

சேலம் மாவட்டம், இராசிபுரம் வட்டம், திருஅத்தனூர் அம்மன் ஆலயத்தில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்கள், பக்தர்கள் தங்கும் விடுதிக்கு அடிக்கல் நாட்டுதல் (16-4-72).

பொருளடக்கம்

1. "பென்மான் இவன் அன்றே"
2. சக்தியும் சிவமும்
3. "பேரறிஞர் அண்ணா போல் உண்டோ பிறர்?"
4. இறையுணர்வு
5. வள்ளலார் கண்ட நால்வர்
6. திருவிடை மருதூர்த் திருமுறைக் கருத்தரங்கப் பேருரை
7. நலம் அந்தம் இல்லதோர் நாடு
8. வண்ணக் கலியனும் வகுளச் செல்வனும்
9. திருவிடை மருதூர்த் திருமுறைக் கருத்தரங்கச் சிறப்புரை (தொடர்ச்சி)
10. மதிப்புரை.

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூபா பத்து மட்டும் | தனிப்பிரதி விலை ரூ. ஒன்று மட்டும்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புவர்கள் " திரு ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34 " என்னும் முகவரிக்கு ரூபாய் பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்துக்கொள்ளலாம்.

அல்லது, அவ்வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்வதற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்



OFFICE OF THE STATE EDI...
12 OCT 1972

மாலை 14] பரிதாபி — புரட்டாசி, ஐப்பசி — அக்டோபர், 1972 [மணி 13

"பெம்மான் இவன் அன்றே"

[ந. ரா. முருகவேள், M.A., M.O.L.]

முன்னுரை :

''பெம்மான் இவன் அன்றே'' என்னும் தொடர், சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள், திருஞானசம்பந்தர் அருளிய முதல் மூன்று திருமுறைகளுள், முதற் திருமுறையின் முதற்றிருப்பதிகத்தின் பாடல்கள் ஒவ்வொன்றின் ஈற்றிலும் அமைந்து வரும் ஓர் அழகிய இனிய தொடர் ஆகும். சங்க காலச் செய்யுட்களில் ஆங்காங்கே அமைந்து வரும் அழகிய சொற்றொடர்களை நம் முன்னோர்கள் ஆராய்ந்தெடுத்துப் போற்றி வழங்குவர். 'பதிற்றுப்பத்து' என்னும் பழந்தமிழ்ச் சங்க நூலின் பாடல்களுக்கு, அவற்றில் பயின்றுவரும் அழகிய பொருள் பொதிந்த சிறந்த சொற்றொடர்களே, பெயர்களாகத் தேர்ந்தெடுத்து அமைக்கப் பெற்றிருக்கின்றன. அந்நெறியினைப் பின் பற்றி, நமது சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் முதல் திருமுறையின் முதல் திருப்பதிகம் ஆக விளங்கும் ''தோடுடைய செவியன்'' என்னும் திருப்பதிகம் பற்றிப் பேசுதற்குப் பணிக்கும் குறிப்பிலேயே 'பெம்மான் இவன் அன்றே' என்னும் செம்மை நலஞ்சான்ற இந்தச் சீரிய இனிய செழுந் தொடர், இங்குத் தலைப்பாகத் தரப்பெற்று இருக்கின்றது.

''பெம்மான் இவன் அன்றே'' :

சீர்காழியிற் பிரமதீர்த்தக் கரையில், சிவ பெருமானும் உமாதேவியும் தோன்றி ஞானப் பால் அளிக்க, அதனை உண்டு மகிழ்ந்திருந்த

திருமயிலைக் கபாலீசுவரர் கோயிலில், மேலவைத் துணைத்தலைவர்—சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞானம், M.L.C. அவர்கள் துவக்கி வைத்த பன்னிரு திருமுறை விழாவில் நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவியது (8.8.72)

— ஆசிரியர்.

148702 600 008

திருஞானசம்பந்தர், "எச்சில் மயங்கிட நினக்கு இப்பாலைக் கொடுத்தவர் யாவர்?" என்று, தமது தந்தையாகிய சிவபாத இருதயர், கைச் சிறியதொரு கோல்கொண்டு அச்சுறுத்திக் கடிந்து வினவியபொழுது, 'எம்மை இது செய்த பிரான் இவன்தான்' எனக் கையினுற் சுட்டிக் காட்டியும், அடையாளங்களுடன் சாற்றியும், "பெம்மான் இவன் அன்றே" என அருளிச் செய்த மறு மொழியே, 'தோடுடைய செவியன்' எனத் தொடங்கும் திருப்பதிகம் ஆகும்.

மெய்ம்மை மொழித் திருப்பதிகம் :

இற்றைக்குச் சற்றேறத்தாழ 1000 ஆண்டுகளுக்கு முன்னர் விளங்கியிருந்த பட்டினத்தடிகளும், நம்பியாண்டார் நம்பிகளும், இத்திருப்பதிகத்தினைத் தம் நூல்களில் வியந்து புகழ்ந்து போற்றியிருக்கின்றனர். "தோலு டுடைய செவியன் என்றும், பீலி டுடைய பெம்மான் என்றும், கையிற் சுட்டிக் காட்ட, ஐயநீ வெளிப்பட்டு அருளினை ஆங்கே" என்பது பட்டினத்தடிகள் அருளிய திருக்கழுமல மும் மணிக்கோவை.

"தோடுஅணி காதினன் என்று,
தொல்அமரர்க்கு எஞ்ஞான்றும்
தேடரிய பராபரனைச்
செழுமறையின் அகன்பொருளை
அந்திச்செம் மேனியனை
அடையாளம் பலசொல்லி
உந்தைக்குக் காணஅரன்
உவனும்என் றுரைத்தனையே"

என்பது நம்பியாண்டார் நம்பிகள் பாடியருளிய ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம். இங்ஙனமே, ஆசிரியர் சேக்கிழார் பெருமானும், "செம்மை பெற எடுத்த திருத் தோடுடைய செவியன் எனும் மெய்ம்மை மொழித் திருப் பதிகம்" என்று இதனைப் பெரிதும் சிறப்பித்துப் புகழ்ந்திருக்கக் காண்கின்றோம்.

பொருள் நுட்பங்கள் :

"ஒரு சிறந்த கவிதையானது, தொட்டனைத்தூறும் மணற்கேணி போல, ஆராயுந்தோறும் அரிய பல நுண்பொருட் குறிப்புக்களையுணர்த்த வல்லதாகத் திகழும். கவிதையின் சிறப்பினை யுணர்வதற்கு அதுவே ஓர் அடையாளம்" என அறிஞர்கள் கூறுவர் (1). அதனை ஒட்டி, இத்திருப்பாடலின்கண் அமைந்துள்ள ஒரு சில பொருள் நுட்பங்களை மட்டும் ஈண்டுக் காண்போம்.

(1) தேவாரம் தமிழ் வேதம். சம்பந்தர் தமிழ் வேதத்தினை அருளிச் செய்ய முதன் முதலாகத் தலைப்படுகின்றார். வேதம் ஓதத் தலைப்படுவோர், ஓம் என்னும் பிரணவ மந்திரத்தினைக் கூறியே தொடங்குவர்.

"ஓம் என்று மறை பயில்வார்
உறைகின்ற பிரமபுரம்"

எனச் சம்பந்தரே பிறிதோர் இடத்திற் குறிப்பிடுகின்றார். ஆதலின் ஓங்கார மந்திர ஒலி முதற்கண் அமையத் தமிழ் வேதத்தினைத் தொடங்கியருள்கின்றார் சம்பந்தர்.

(2) உயிரும் மெய்யும் சேர்ந்ததே உலகம். உயிராகிய சிவமும், மெய்யாகிய சத்தியும் சேர்ந்து இயைந்து நின்ற வழியே, உலகம் இயங்கத் தலைப்படும். ஆதலின் சாந்தோக்கியம் முதலிய உபநிடதங்களில் பிரமப் பொருளையும், காயத்திரி மந்திரங்களில் சிவ சத்தியின் உண்மை நிலையையும் குறிப்பதாக வழங்கி வரும் 'த்' என்னும் மெய்யெழுத்துடன், ஓங்காரமந்திர ஒலியைச் சேர்த்து, த்+ஓ=தோ எனத் தமிழ் வேதம் இப் பாடலினுல் தொடங்கப் பெற்றது. இந் நுண் பொருட் குறிப்பினை,

"எல்லையிலா மறைமுதல், மெய்யுடன்
எடுத்த எழுதும்மறை,
மல்லல்நெடுந் தமிழால்இம்
மாநிலத்தோர்க்கு உரைசிறப்ப"

---

(1) "The proof of the purest poetry is that its meaning is inexhaustible. .... About the best poetry, and not only the best, there floats an atmosphere of infinite suggestion. The poet speaks to us of one thing, but in this one thing there seems to lurk the secret of all. He said what he meant, but his meaning seems to beckon away beyond itself, or rather to expand into something boundless which is only focussed in it".

— Professor A. C. Bradley,
Oxford Lectures on Poetry.

எனச் சேக்கிழார் சுவாமிகள் விளக்கியருளி யிருத்தல் காணலாம்.

(3) தாம் அருளிச் செய்யத் தலைப்படும் தமிழ் வேதம் ஆகிய தேவாரத்தினை இறைவன், தன் இரு செவிகளாலும் கேட்டு இனிது உவந்து ஏற்றுக் கொண்டு அருள்புரிதல் வேண்டும் எனக் கொண்டு, அவனது திருவடிகள் முதலிய பிற உறுப்புக்களைக் குறிப் பிடாமல், திருச் செவிகளையே முதற்கண் சிறப்பித்துச் 'செவியன்' என்று சுட்டி யருளினார் சம்பந்தர்.

(4) இறைவனின் இரு செவிகளிலும் முறையே அசுவதரன் கம்பளன் என்னும் கந்தருவர்கள் இருவர் தோடும் குழையுமாக இருந்து இசைபாட, அதனை ஏற்று இறைவன் மகிழ்வுறுகின்றான் என்பது வரலாறு. அம் முறையில் தமிழ் வேதம் ஆகிய தம்முடைய பாடல்களையும் இறைவன் ஏற்றுக் கொண்டு அருளுதல் வேண்டும் என்னும் விண்ணப்பக் குறிப்பும் உணர்த்த, வறிதே 'செவியன்' என்று கூறியமையாமல் "தோடுடைய செவியன்" என்று சிறப்பித்துக் கூறினார். இதனை,

" பல்லுயிரும் களிகூரத்
தம்பாடல் பரமர்பாற்
செல்லும்முறை பெறுவதற்குத்
திருசசெவியைச் சிறப்பித்தார் "

எனவரும் பெரிய புராணப் பாடற் பகுதி கொண்டு தெளியலாம்

(5) "உரைநடையில் சொற்களின் முதன்மையான வேலை, செய்தி கூறுதல். கவிதைகளில் செய்தி கூறுதல் மட்டுமேயன்றி, ஒரு சில சமயங்களில் முதன்மையாகப் பல நுட்பக் குறிப்புக்களைப் புலப்படுத்திக் கொண்டு நிற்றலும் ஆகும்" (2) என்று ஆராய்ச்சி யாளர்கள் கூறுவர். அம்முறையில் 'தோடுடைய செவியன்' என்னும் இப்பாடலில் வேறு பல நுட்பக் குறிப்புகளும் அமைந்துள்ளன.

முதலில் தாயை அறிந்து கொண்டு, பின்னர் அவள் வாயிலாகவே நாம் தந்தையை உணர்தல் வேண்டும். அம்பிகையின் அருள் பெற்ற பின்னரே, இறைவனின் அருள் இனிது எய்தும். பெண்களின் காதணி ஆகிய 'தோடு' குறிக்கப் பெற்றதனால்; தாயின் வாயிலாகத் தந்தையை உணர்தலும், அம்பிகையின் அருள்பெற்று ஆண்டவன் அருளில் தலைப்படுதலும் ஆகிய உண்மைகள் உணர்த்தப்பட்டன.

(6) பெண்களின் காதணி ஆகிய "தோடு" பற்றிக் குறித்தும், 'தோடுடைய செவியன்" என அன் ஈற்றில் ஆண் பாலாகக் கூறியமை, இறைவன் தன்னியல்பில் ஆணுருவமும் பெண்ணுருவமும் ஒருங்கே கலந்த அர்த்த நாரீசுவரத் திருமேனியுடையனு தலையும், அத்தகைய அருளுருவத் திருமேனி கொண்டுபோந்தே தமக்குக் காட்சி நல்கி ஆண்டு கொண்டருளினனு தலையும், உணர்த்துதற் பொருட்டாகும். இதுபற்றியே சீர்காழிப் பதிகங்களின் பாடல்களிற் பெரும் பாலும் அம்மையாரையும் உடன் சுட்டியே இறைவனைச் சம்பந்தர் பாடியருளியிருக் கின்றார்.

(7) இப் பாடற்கண் இறைவன் இயற்றும் ஐந்தொழில்கள் பற்றிய குறிப்புக்களும் உள்ளன. 'விடை ஏறி' என்பது படைப்பைக் குறிக்கும்; ஊழி முடிவில் உலகுயிர்கள் யாவும் அழிந்தொழியவும், அறக் கடவுள் அழியாது இறைவன்பால் விடையாய் நின்று மீளவும் உலகப் படைப்பில் உளதாதலால். 'தூ வெண் மதிசூடி' என்பது காத்தலை யுணர்த்தும்; தக்கனின் சாபத்தால் அழிந்து படாமல் இறைவன் சந்திரனைக் காத்தருள் புரிந்ததனால், 'காடுடைய சுடலைப் பொடிபூசி' என்பது அழித்தலைக் குறிக்கும்; ஊழி முடிவில் உலகங் களெல்லாம் முடிந்து அழிவு எய்திச் சுடுகாடாகி நிற்க, அங்கேயுளதாகும் சாம்பற் பொடியினைத் தன் திருமேனியிற் பூசிக் கொண்டு மகிழ்தலால். 'உள்ளங்கவர் கள்வன்' என்பது மறைத்தலையுணர்த்தும்; மறைத்தல் கள்வனுக்கு உரிய செயலும் இய லும் ஆதலால். 'பணிந்தேத்த அருள் செய்த' என்பது அருளலைச் சுட்டும்.

(8) இறைவனின் எட்டுக் குணங்களும்

---

(2) "The business of words in prose is primarily to state; in poetry, not only to state, but also, and sometimes primarily, to suggest."

—John Livingston Lowes,
Convention and Revolt in Poetry.

இப் பாடற்கண் சுட்டப்பெற்றுள்ளன என்பதும் ஒரு கருத்து. 'தோடுடைய செவி' பேரருளுடைமை. விடையேறி, தன்வயத்தனுதல், தூ யவுடல். 'ம தி சூ டி' முற்றறிவுடைமை. 'பொடிபூசி' வ ர ம் பி லி ன் ப மு டை மை. 'உள்ளங்கவர் கள்வன்' இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், இயற்கையுணர்வு. 'பிரமாபுரம்' அளவிலாற்றலுடைமை.

(9) இறைவனை அருவம் என்று சில சமயங்கள் கூறும்; உருவம் என்று சில சமயங்கள் கூறும். ஆனுல் சைவ சித்தாந்தம் இறைவனை உருவம் அருவம் அருவுருவம் என்னும் மூன்று திருமேனிகளை யுடையவனுகக் குறிப்பிடும். அக் குறிப்பும் இப் பாடலின்கண் அமைந்துள்ளது. விடையேறி, ம தி சூ டி என்பன உருவம். பொடி பூசி, பிரமாபுரம் என்பன அருவுருவம். உள்ளங்கவர் கள்வன் என்பது அருவம் என மூன்றும் காண்க.

(10) இப்பாடலில் செவியன்-விடையேறி-மதிசூடி-பொடிபூசி-கள்வன்-பெம்மான் என்னும் ஆறு பெயர்களைக் கூறி, அவற்றிற்கெல்லாம் முடிக்குஞ் சொல்லாக இவன் என்பதனைக் கூறியமை, இறைவன் அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய் விரவி நின்றே, அவற்றின் வேருய் மேம்பட்டு நிற்கும் சிறப்பியல்பை உணர்த்தும் என்பதும் ஒரு கருத்து. வேதங்கள் 'அது' என்றும் 'அவன்' என்றும் சேய்மைச் சுட்டாற் கூறும் இறைவனை 'இவன்' என அண்மைச் சுட்டினுற் கூறியதும், ஒரு பெருஞ் சிறப்பாகும்.

(11) இப்பாடல் தோடு முதலிய 36 சொற்களால் அமைந்துள்ளதனுல் 36 தத்துவங்களும்; நான்கு அடிகளாக இயன்றதனுல் சரியை, கிரியை, யோகம் ஞானம் என்னும் நான்குவகை நெறிகளும்; அடிதோறும் ஐந்து சீர்கள் கொண்டிருத்தலால், திருவைந்தெழுத்து-இறைவனின் ஐந்து தொழில்கள்-ஐந்து சத்திகள்-ஐந்து மலங்கள் முதலியனவும்; ஒற்று நீக்கி 18 எழுத்துக்களே அடிதோறும் எண்ணி வருதலால், பதினெண்வித்தைகளின் இயல்பும் உணர்த்தப் பெறுகின்றன எ ன வு ம், அறிஞர்கள் நுனித்தாய்ந்து கூறுவர்.

உள்ளம் கவர் கள்வன் :

இனி, வேறு சில கருத்துக்களையும் இத் திருப்பதிகத்தையொட்டி நாம் ஆராய்ந்துணர்தல் கூடும். இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும் அமைந்துவரும் மற்றொரு சிறந்த, மாட்சிமை மிக்க தொடர், 'உள்ளங்கவர் கள்வன்' என்பதாகும். சிறு சொற்றொடரும் கூட மிகவும் சுவை நிறைந்ததாக இருப்பின் ஒரு சிறந்த கவிதை எனப்படும். இதனை ''வாக்யம் ரசாத்மகம் காவ்யம்'' என்பர். அதன்படி, இத்தொடர் கவிதை நலஞ்சான்ற, கவின்மிக்க, பொருள் பொதிந்த தொடர் ஆகும். இறைவனின் அருள் நலச் சிறப்பினையும், எல்லையற்ற பிறபெரு நலங்களையும், இத்தொடர் இனிதுணர்த்த வல்லதாக உள்ளது.

'உள்ளங்கவர் செல்வன்' என்னுமல் 'கள்வன்' என்றது நுனித்தாய்ந்து உணரத்தக்க நுட்பமுடையதாகும். திருடர்களுக்குத் தலைவனே போற்றி என்னும் கருத்துடைய ''தஸ்கராணும் பதயேநம:'' என்னும் வேதத்தொடரின் பொருளை அறிவுறுத்தும் வகையில், இஃது அழகுற அமைந்திருக்கின்றது. உலகத்துக் கள்வர்கள் புறப்பொருள்களையே கவர்வர். ஆனுல் இறைவனே உள்ளத்தையே கவர்கின்ருன். எல்லாவற்றையும் அறிய வல்ல உள்ளம், அக்கள்ளத்தை அறிதல் இயலாது. கள்வர்கள் பொருளைக் கவர்ந்து கொண்டு அகன்ருேடி ஒளிவர். ஆனுல் இறைவனே உள்ளத்தைக் கவர்ந்து கொண்டு, அங்கேயே நிலைபெறுகின்ருன். பிற கள்வரால் தீங்கே நிகழும். ஆனுல் இறைவனுகிய கள்வனுல் நலமே விளைகின்றது. பிறபொருள்களைக் களவு கொள்வார்மாட்டு எவரும் விருப்பம் கொள்ளார். ஆனுல் உள்ளத்தைக் களவு கொள்ளும் இறைவனிடம் பெரு விருப்பும் காதலுமே நிகழ்கின்றன. கள்வரைக் காதலித்துப் புகலடைவார் இல்லை. ஆனுல் இறைவனுகிய கள்வனைக் காதலித்துப் புகலடைதலுக்கு அடியவர் அனைவரும் ஏக்கற்று நிற்பர். 'உள்ளங்கவர் கள்வன்' என்னும் தொடர் 'புலிகொல்யானை' என்பது போல இரட்டுற மொழிதலாய், உள்ளம் கள்வனைக் கவர்ந்தது எனவும், கள்வன் உள்ளத்தைக்

---

* Even a short phrase, representing a charming idea, is poetry. "A single beautiful line has wrought the world more good than all the masterpieces of mechanism"

— Anatole France.

கவர்ந்தான் எனவும் இருவகையிற், பொருள் பட நிற்கின்றது. கடவுளின் பெருங்கருணைத் திறத்தினை, இத்தொடர் நினைத்தொறும் வியப்புறும் வகையில் செவ்விதின் விளக்கிக் கொண்டு திகழ்கின்றதெனச் சுருங்கக் கூறலாம். பக்தியுணர்வின் மிக மேலான உச்சநிலையில் நிகழ்கின்ற "ஆத்தும நிவேதனம்" என்னும் பெருஞ் செயலை, இத்தொடர் குறிக்கின்றது எனலாம்.

நாயகநாயகி பாவம் :

தவமுதல்வராகிய சம்பந்தர், சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம், பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம், உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம் ஆகியவற்றைப் பெற்ற நிலையிற் பாடிய பதிகம் இது! ஞானத்தின் முதிர்ச்சியே பக்தியாகத் தழைக்கின்றது. "ஞானம் கனிந்த நலம்" பக்தி எனப்படும். ஞானத்தின் பெருவிளைவே பக்தி. ஞானத்தின் மிகுதியே பக்தியாகப் பரிணமிக்கின்றது. "ஞானம் ஈசன் பால் அன்பே என்றனர் ஞானம் உண்டார்" என்பது பெரியபுராணம். ஞானத்தின் முதிர்ச்சியான பக்தியின் உச்சநிலை, பெண்மையாக மாறுகின்றது. ஞானத்தில் சிறந்த நம்மாழ்வாரும், திருமங்கையாழ்வாரும், ஞானத்தின் முதிர்ச்சியாகிய பக்தியுணர்வின் மேலீட்டாற் பெண்மைநிலை எய்தி, முறையே பராங்குச நாயகி எனவும், பரகாலநாயகி எனவும் பெயர் வழங்கும்படி, தமது பாடல்கள் பலவற்றைப் பாடியிருத்தல் இவ்வுண்மையை வலியுறுத்தும்.

ஞானத்தின் முதிர்ச்சியாகிய பக்தியுணர்வின் மேலீட்டாலேயே, மாணிக்கவாசகர் பெண்மை நிலை எய்தி, "நாயகநாயகி பாவம்" பொங்கித் ததும்புகின்ற திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் அருட்பொருள் அமைந்த அகப்பொருள் நூலைப் பாடியருளினர் என்பது யாவரும் அறிந்தது. இவ்வுண்மைகளையெல்லாம் விளக்கும் வகையிலேயே "ஏர் பரந்த இனவெள்வளைசோர என் உள்ளங்கவர் கள்வன் (3)", "இறைகலந்த இனவெள்வளை சோர என் உள்ளங்கவர் கள்வன் (6)" எனவரும் அழகிய அடிகள் இத்திருப்பதிகத்தில் அமைந்துள்ளன.

குருவருள் :

'தோடுடைய செவியன்' எனத் தொடங்கும் இத்திருப்பதிகத்தைக் குருவருள் என்னும் தலைப்பில், அகத்தியர் தேவாரத் திரட்டு என்னும் நூல், தொகுத்துள்ளது. ஞானசம்பந்தர் குருவருள் பெற்ற நிலையில் பாடிய பதிகம் என்றும், ஞானசம்பந்தர் குருவாக விளங்கி நம்மனோர்மாட்டுத் தாம் கொண்ட அருளாற்பாடிய பதிகம் என்றும், இருவகையில் கருத்துக்கொள்ள இங்கு இடமுள்ளது. பிற தலங்களில் சிவபெருமான் பெரும்பாலும் இலிங்க வடிவமாக மட்டும் காட்சி தருவர். ஆனால் 'பீடுடைய' சீர்காழியிலோ, சிவபெருமான் இலிங்கம் குரு சங்கமம் என்னும் மூவகை நிலையிலும் திகழ்கின்றார். கருவறையிலுள்ள பிரமபுரீசுவரர் இலிங்கம்; கட்டுமலைமேலுள்ள விமானத்தில் வீற்றிருக்கும் தோணியப்பர் குரு; அதற்கும் மேலேயுள்ள சட்டைநாதர் சங்கமர். தோணியப்பராகிய குரு அளித்த ஞானப்பாலாகிய அருளை உண்டு பாடிய இப்பதிகம், குருவருள் எனப்பெயர் பெறுவது பொருத்தமேயாகும். தாம்பெற்ற அருள்ஞான அநுபவப் பயன்களை நமக்கும் உணர்த்தும் வகையில், நமக்குக் குருவாக விளங்கிநின்று, "பதிகம் என்பது பல்வகைப் பொருளைத் தொகுதியாகச் சொல்லுதல் தானே" என்றபடி, சம்பந்தர் பற்பல கருத்துகளை உள்ளடக்கிப் பாடியருளிய காரணத்தாலும், இத்திருப்பதிகம் குருவருள் எனப் புகழ்ந்து போற்றப் பெறுதற்குரியதேயாகும் என்பது திண்ணம்.

தமிழ் வீரர் :

'குரு' என்னும் சொல்லுக்கு, இருளை அருளால் போக்குபவர் என்பது பொருள். மக்களின் அறியாமை இருளைப்போக்கி, அறிவொளியை வழங்கி உலகை உய்விக்க வந்தவர் ஞானசம்பந்தர்.

> "ஞானிகளாய் உள்ளார்கள் நான்மறையை
> முழுதுணர்ந்து ஐம்புலன்கள் செற்று,
> மோனிகளாய் முனிச்செல்வர் தனித்திருந்து
> தவம்புரியும் முதுகுன்றமே"

என்றபடி, தனித்திருந்து தவம் புரிதலே சமயம் என்றிருந்த நிலையை மாற்றி, மக்களுடன் கலந்திருந்து நலம் புரிதலே சமயம் என்று வழி காட்டிய பெருமைக்குரியவர், ஞானசம்பந்தரேயாவர்! தமிழக வரலாற்றில் மூதன்முதல் ஒரு

பெரும் மக்கள் இயக்கத்தைத் தோற்றுவித்த வர் ஞானசம்பந்தரே எனத் துணிந்து கூற லாம். சம்பந்தரை விட்டு நீங்காமற் சூழ்ந்து கொண்டு பற்பல ஆயிரம் தொண்டர்கள் எப் போதும் இருந்துவந்ததாகப் பெரியபுராணம் கூறுகின்றது. தனிநிலைச் சமயம் (Individual Religion) என்பதனைச் சமுதாயநிலைச் சமயம் (Social Religion) ஆக்கித் தமிழகத்திற் பல துறைகளிற் பெரும்புரட்சிகள் நிகழுமாறு செய்த மாபெருந் தலைவர் (Revolutionary Leader) ஞானசம்பந்தரே எனலாம். அவர் தமிழகத்தின் மூலை முடுக்கர்களுக் கெல்லாம் சென்று மக்கள் எழுச்சியைத் தோற்று வித்தார்; "பல்வேறு கொள்கைகளாலும் சூழ் நிலைகளாலும் சிதறுண்டு கிடக்கும், ஒரு நாட்டின் மக்களை அவர்கள் பேசும் தாய் மொழியின் வாயிலாகவே ஒன்று படுத்திக் கிளர்ந்தெழச் செய்யமுடியும்" என்னும் அரும்பெறல் உண்மையினை அறிந்து. அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல்வழக் கின் துறைவெல்லத் தமிழ் பரப்பும்வீரர் (The Champion of Tamil) எனத் திகழ்ந்தார்! "கூடலான் முதுகூன் அன்றுஓட, வாது உயர் வேதம் கூறும் நாவல! மேவு தமிழ்வீரா" என்பது அருணகிரிநாதர் திருப்புகழ்.

"சந்தம் ஆர்ந்து அழகாய தண்டமிழ்":

இசைப் பாடல்களை இயற்றி எங்கணும் பரப்புவதன் மூலமாகவே, ஒரு நாட்டிற் பல பெரு மாறுதல்களை விளைவித்துவிடலாம் (4). என்னும் உண்மையை உணர்ந்து, சம்பந்தர் "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பினர்"; "சந்தம் ஆர்ந்து அழகாய தண்டமிழ்" "பண் மலிந்த பாடல்கள்" பாடினர். இதற்கு முன்னரும் பின்னரும் இல்லாதவகையில் எத்தனையோ வகைவகையான பாடல்களையும், மாலைமாற்று ஏகபாதம் கோமூத்திரி மடக்கு யமகம் முதலிய சித்திர கவிகளையும் அருளிச் செய்து, தமிழுக்குப் புத்துயிர்ப்பும் புதுப் பொலிவும் புதுச்சிறப்புக்களும் உண்டாக்கியவர் ஞானசம்பந்தரே என்பது, தமிழர் அனைவரும் நன்றியுடன் உணர்ந்து போற்றுதற்குரியது. சம்பந்தர் பாடியருளிய பாடல்கள் பலவற்றின் நடையினைப் பிற்போந்த பெருங் கவிஞர்களும் முழுவதாகத் தழுவிப் பாட இயலவில்லை. 'வாக்கிற்கு அருணகிரி' எனப் புகழ்பெற்ற அருணகிரிநாதர், தாம் பாடுவதாயின் ஞான சம்பந்தரைப் போலப் பாடவேண்டும் என மிகப் பெரிதும் விரும்பி,

"புமியதனிற் பிரபுவான
புகலியில் வித்தகர் போல
அமிர்தகவித் தொடைபாட
அடிமைதனக்கு அருள்வாயே"

என்று முருகப் பெருமானிடம் வேண்டிக் கொள் கின்றார் எனின், ஞானசம்பந்தரின் கவிதை நலனையும் இசைச் சிறப்பையும் நம்மனோர் அளவிட்டுரைத்தல் இயலுமோ?

முறைபிறழா முப்பாடல்கள்:

சம்பந்தர் தம்முடைய காலச் சமுதாயத் தவரும், இக்காலத்தவரும் உணர்ந்து கொண்டு நல்வாழ்வு நடாத்துதற்குரிய உயரிய பல உண்மைக் கருத்துக்களை இடைவிடாது அறிவுறுத்திச் செல்கின்றார். ஞானசம்பந்தரின் பதிகங்களிலெல்லாம் 8-ஆம் பாட்டில் இராவணனைப் பற்றியும், 9-ஆம் பாட்டில் அயனும் அரியும் அடிமுடி தேடிய வரலாறு பற்றியும், 10-ஆம் பாட்டில் சமண பௌத்தர் களின் சழக்குகள் பற்றியும் குறிப்பிட்டுப்பாடிச் செல்கின்றார். ஒரு சில பதிகங்களைத் தவிரப் பெரும்பாலான பதிகங்கள் எல்லாவற்றிலும், இக்குறிப்புக்கள் முறை பிறழாமலும் சிறிதும் மாறுமலும் பாடப் பெற்றிருக்கும். பின்வரும் பதிகங்கள் எல்லாவற்றிற்கும் ஒருமுன்மாதிரி யாகவும், வரு பொருள் உரைத்தல் என்னும் மங்கல வாழ்த்துப் போலவும், தோடுடைய

---

(4) "In any social group, whatever its nature and however large it may be, language plays a role of primary importance. It is the strongest of the bonds uniting the members of the group, and is at the sametime the symbol and safeguard of their common life. What instrument can have greater efficacy than language in affirming the individuality of the group? It is their sign of recognition, and their badge of brotherhood."

— J. Vendryes,

(5) "Give me the making of the ballads of a nation and I care not who has the making of the laws"

— Fletcher of Saltom.

செவியன் என்னும் இம்முதற் திருப்பதிகத்தின் 8-9-10-ஆம் பாடல்களில் முற்கூறிய குறிப்புக்கள் முறை பிறழாமல் வந்திருக்கின்றன.

(1) மண்ணுலகில் வாழ்பவர்கள் பிழை செய்தாலும் தவறுணர்ந்து வருந்தித் தன்னைப் புகலடைந்தால் சிவபெருமான் அவர்களைத் தன் கருணையினால் கைவிடாது ஏற்றுக் காத்தருள்கின்றான் என்பதனை இராவணனின் வரலாறு அறிவிக்கும்: (2) தொழுவார்க்கே அருள் புரிவது சிவபெருமானது இயல்பு என்பதனையும், அறியாமையும் செருக்கும் உடையவர்கள் அவனை அறிதல் இயலாது என்னும் உண்மையினையும், அயனும் மாலும் அடிமுடி தேடிய வரலாறு உணர்த்தும்; (3) சிவபிரான் அருளிச் செய்த வேதாகமங்களுக்குப் புறம்பாகச் சமண பௌத்தர்கள் பரப்பி வருகின்ற கொள்கைகள், பிழையுடையன வாய்த் தீங்கு பயப்பனவேயாகும் என்னும் கருத்தினை 10 ஆம் பாடல் வலியுறுத்தும். ஞான சம்பந்தர் இக்கருத்துக்களைச் சிறிதும் சலியாமலும் முறை பிறழாமலும் தமது திருப்பதிகம் ஒவ்வொன்றிலும் வலியுறுத்திச் செல்லுகின்றார். இது குறித்துப் பெரிய புராணத்தில் சேக்கிழார் பாடியுள்ள மூன்று பாடல்கள் (சம்-77,78,79,) ஊன்று நோக்கி உணர்ந்து போற்றற்பாலன வாகும். இவ்வாற்றால் ஞானசம்பந்தர் சைவ சமயத் தலைவர் மட்டுமேயல்லர், தமிழகத்தின் மாபெரும் சமுதாயத் தலைவருமாவார் என்னும் உண்மையினை யாவரும் இனிது உணரலாம்.

பிரமபுரம் :

ஞானசம்பந்தர் தமக்கெனப் பல பெரும் தனிச் சிறப்புகள் உடையவர். ஒருவரின் மொழி நடையால் அவர்தம் குணநலத்தை அறியலாம், (The style is the man) என்பர் அறிஞர். அம்முறையில் சம்பந்தரின் பாடல்களில் அவர்தம் பண்பு நலங்கள் பல சுடர்விட்டு விளங்குகின்றன. அவர் நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும் மிக்கவர். தாம் தோன்றியருளிய சீர்காழியின்மீது அவர்கொண்டிருந்த அன்பும் ஆர்வமும் அளப்பரியன. அப்பதிக்கு அழகிய பெயர்கள் பன்னிரண்டு உண்டு. அப்பன்னிரண்டு பெயர்களின் சிறப்புக்களையும் வரலாறுகளையும் எடுத்துப் போற்றிப் பாடி விளக்குதலில், ஞானசம்பந்தர் மிகுந்த ஈடுபாடு உடையவராகத் திகழ்கின்றார். அவர் மிக்க கண்டிப்புக்காரர், சிறந்த கட்டுப்பாடுடையவர் (Strict Disciplinarian), ஆதலின் மறந்தும் ஓரிடத்திலேனும்கூட, அப்பன்னிரண்டு பெயர்களையும் அவர் சிறிதும் முறைமாறிக் குறிப்பிடுவதில்லை. சீர்காழி என்பது அப்பன்னிரண்டு பெயர்களின் வரிசையில் பத்தாவதும், பூந்தராய் என்பது ஆறுவதும் ஆகும். ஆதலின் அப்பெயர்களைக் குறிப்பிடும்போது அவ்வரிசை பிறழாமலேயே பாடல்களில் அமைத்துப் பாடுவர். சக்கரமாற்று கோமூத்திரி வழிமொழித் திருவிராகம் ஈரடி திருவியமகம் முதலிய திருப்பதிகங்கள் எல்லாவற்றிலும்கூட,. இவ்வரிசை முறை சிறிதும் மாறுமலே சம்பந்தர் பாடியிருக்கக் காணலாம். அந்நிலையில் பிரமபுரம் என்பது சீர்காழிக்குரிய பன்னிரண்டு பெயர்களுள் முதற் பெயர் ஆகும். தாம் முதன் முதலாகப் பாடிய திருப்பதிகத்திலும், அதனையே முதற்கண் அமைத்துப் "பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன்" என்றே பாடியிருப்பது, நினைத்துணர்ந்து போற்றி வியக்கத் தக்கதாகும்.

திருநெறிய தமிழ் :

ஞானசம்பந்தர் அருளிய இத்திருப்பதிகத்திற்குத் 'திருநெறிய தமிழ்' என்று பெயர். "தோடு செய்த திருநெறிய செந்தமிழ்" என்பர் உமாபதி சிவம். தமிழுக்கு இதற்கு முன்னர் இல்லாதவகையில் ஒரு பெரும் புத்துயிர்ப்பும் புதுப்பொலிவும் தெய்விகச் சிறப்பும் விளைவித்து, தமிழைத் தம் உயிரினும் விழுமியதாக வைத்துப் போற்றுபவராதலின், சம்பந்தர் தமிழைத் 'திருநெறிய தமிழ்' என வியந்து புகழ்ந்தார். ஆதலின் பின்வந்த சான்றோர் அனைவரும் அவ்வுண்மையை நன்கு போற்றி மகிழ்ந்தனர்.

"முன்புறு நிலையும் பின்புறு நிலையும்
முன்னிநின்று உளம்மயக் குறுங்கால்
அன்புறு நெறியால் திருநெறித் தமிழ்கொண்டு
ஐயம்நீத் தருளிய அரசே"

---

(6) "The religion of a community is not something unrelated to its secular activities any more than the religious experience of an individual is apart from his general mental development"

Margaretta Morris

என்று, இராமலிங்கர் திருவருட்பாவில் அருளிச் செய்திருத்தல் காணலாம்.

திருக்கடைக்காப்பு :

இத்திருப்பதிகத்திற்கே திருக்கடைக்காப்பு என்றும், வேறொரு பெயர் உண்டு. அப்பர் பாடல்களைத் தேவாரம் என்றும், சுந்தரர் பாடல் களைத் திருப்பாட்டு என்றும், சம்பந்தர் பாடல் களைத் திருக்கடைக்காப்பு என்றும் பெரியோர்கள் வழங்குவர். திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் தாம் இயற்றிய உரைநூல்களில் சம்பந்தரின் பாடல்களை மேற்கோள் காட்டும் போது. இம்மரபைப் போற்றித் திருக்கடைக் காப்பு என்றே குறிப்பிடுவர்.

" திருநெறியமெய்த் தமிழ்மறையாம்
திருக்கடைக்காப்பு அதனால்,
திருவுளம் காட்டிய நாளில்
தெரிந்திலன் இச்சிறியேன் ;
பெருநெறிஎன் உளத்திருந்து
காட்டியநாள் அறிந்தேன் ;
பிழைபடாத் தெய்வமறை
இதுஎனப் பின்பு உணர்ந்தேன் "

என இராமலிங்க அடிகளார், தமது திருவருட் பாவில் இனிதெடுத்துப் போற்றிக் குறிப்பிட்டுப் பாடியிருத்தலும், இதனை வலியுறுத்தும்.

பெயர் கிளத்தல் :

திருக்கடைக்காப்பு எனவரும் திருப்பாடல் கள், பலவகைகளில் மிகவும் சிறப்புடையவை. இதன்கண் இதனை அருளிச்செய்த ஆசிரியரின் பெயர் 'ஞானசம்பந்தன்' எனப் பலப்பல எழில் மிக்க தொடர்களாற் கிளந்து கூறப்பெற்றிருப் பதனைக் காணலாம். தமிழிலக்கியங்களுள், முதன் முதலாக ஞானசம்பந்தர் ஒருவர்தாம், தம்முடைய திருப்பதிகங்கள் ஒவ்வொன்றிலும் தவறாமல் தம்முடைய பெயரைக் குறிப்பிட்டுக் கொள்ளும் புதிய வழக்கத்தினை நடை முறைக்குக் கொணர்ந்தவராவர் எனலாம். பொதுவாகப் பண்டைய இந்திய தேச நூலாசிரி யர்கள் அனைவருமே, தங்கள் பெயரினையும் தனித்தன்மையினையும் தங்கள் நூல்களில் வெளிப்படுத்தாமல் மறைத்துக் கொள்ளும் இயல்பினராவர். அதனால் அந்நூல்களைப் பயில்பவர்களுக்கு நூலாசிரியரைப் பற்றியோ, நூலின் காலத்தைப் பற்றியோ, அது தோன்றிய சூழ்நிலைகளைப் பற்றியோ அறிந்துகொள்ளும் வாய்ப்புக்கள் இலவாயின. அவற்றால் விளைந்த கருத்துக் குழப்பங்களுக்கு அளவேயில்லை. (7) ஆதலின், தம்முடைய திருப்பதிகங்கள் தோறும் தவறாமல் திருஞானசம்பந்தர் தம்முடைய பெயரைக் குறிப்பிட்டுள்ளமை, இலக்கியத்துறையிலேயே ஒரு சிறந்த புதிய நெறி, ஒரு புதிய திருப்பம் என்று துணிந்து கூறலாம்.

பயன்கூறல் :

திருக்கடைக் காப்பு என்பதனைப் " பயன் கூறும் பாடல் " (பலச்ருதி) எனவும் கூறுவர். தமிழ் கற்பதற்கு மக்கள் அனைவரும் ஆர்வம் கொள்ளும்வகையில், தேவாரம் ஓதுவதால் வரும் பயன்களை 'வினைமாயும்–பிணிபோகும்–இடர்கெடும்-அல்லல்அறும்-அமருலகு ஆளலாம்' என்பன போன்ற 404 வகைகளால் வலியுறுத்திப் பாடியுள்ளார். ஐந்து இடங்களில் " ஆணை நமதே " என அறுதியிட்டும் உறுதி யாகக் குறிப்பிட்டுள்ளார். இங்ஙனம் மாணிக்க வாசகர் திருநாவுக்கரசர் ஆகியோர் ஏதும் குறிப்பிடாமை ஆய்ந்துணரத்தக்கது.

" காலம் கவிஞனைப் படைக்கின்றது ; கவிஞன் காலத்தைப் படைக்கின்றான் " (A great poet is the creator and creature of his age.) என அறிஞர்கள் கூறுவர். அம்முறையில் ஞானசம்பந்தர் தமிழகத்தில் தக்கதொரு காலத்தில் தோன்றியருளினர். " சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும், இனி எதிர்காலத்தின் சிறப்பும் இன்று எழுந்தருளப் பெற்ற பேறு இதனால் எற்றைக்கும் திருவருள் உடையோம் " என்னும்படி. அவர் தமிழகத் திற்குப் புதியதொரு பொற்காலத்தைத் தோற்று வித்து அருளினர். அவர் தோன்றிய சூழ் நிலையில், தமிழகம் பல துறைகளில் தாழ்ந்து இழிந்து தளர்ந்திருந்தது. அந்நிலையினை

---

(7) * Tamil writers, like Hindu writers, in general, hide their individuality in the shade of their writings, even the names of most of them are unknown ....The historical spirit, the antiquarian spirit, to a great degree even the critical spirit, are developments of modern times."

-Dr. Rt. Rev. Robert Caldwell,.
Comparative Grammar, P. 128

" If the authors systematically hide even their own individualities, what light are they likely to throw on the history of their times? On the other hand, for instance, every hymn of Sambanda uniformly closes with a benedictory verse, where his own name, his native place, and other particulars are given."

–Prof. P. Sundaram Pillai, M.A.,
The Age of Thirugnana Sambanda,
P. 29-30.

மாற்றித் தமிழகத்தினைப் பல்லாற்றானும் தலை நிமிர்ந்து நிற்கச் செய்தருளியவர், திருஞான சம்பந்தரேயாவர். உலகத்தில் தோன்றியருளிய அருளியற் பெருஞ்சான்றோர்கள் அனைவரும், தம்மைப் பலவகைகளில் தாழ்த்திப் பழித்து இழித்து இகழ்ந்துகொள்ளும் இயல்பினராகவே இருக்கக் காண்கின்றோம். இதனை ஒரு வகையில் "தூய அருளாளர்களின் சுகபோகம்" (The Luxury of the Saints) என அறிஞர்கள் குறிப்பிடுவதுண்டு. ஆனால் ஞானசம்பந்தரோ, தம்முடைய பாடல்களில் யாண்டும் தம்மை ஒருசிறிதாவது பிறர்போல இழித்துப் பழித்து இகழ்ந்து கொள்ளக்காண கின்றிலோம். மற்று அதற்கு மாறாகக் காழி நாடன்-கவுணியர்கோன்-தலை மகனாகி நின்ற தமிழ்ஞான சம்பந்தன் - என்றாற்போல, ஆங்காங்கு உயர்த்திப் புகழ்ந்துரைத்துக் கொள்ளுதலையே காண்கின்றோம். இது தற்புகழ்ச்சியோ, தன்முனைப்போ அன்று. தாழ்ந்து கிடக்கும் சமுதாயத்தைத் தலை நிமிர்ந்து நிற்கச் செய்தருளப் போந்த சம்பந்தர், தமிழ்ச் சமுதாயத்தினரின் அக்காலத்துத் தாழ்வு மனப்பான்மையை நீக்கிப் போக்கியருளக் கடைப்பிடித்து நின்று வழிகாட்டியருளிய மாட்சிமையேயாகும் என்பது, உன்னித்துணர்ந்து உவகை உறுதற்குரியது, மூலையிற்கிடந்த சமயநெறியினை, மக்கட் சமுதாய முற்றத்திற்குக் கொணர்ந்து, பரப்பியருளிய பெருமை சம்பந்தருக்கேயுரியதாகும். தமிழகத்திற் சமயத் துறையில் ஒரு வகையில் மக்களாட்சிநெறி (8) தழைத்தோங்குமாறு வழிவகுத்து அருளிய சமய-சமுதாயச் சீர்திருத்தநெறிச் செம்மல் (Social & Religious Reformer) சம்பந்தரே என்பதனைத் தமிழர் அனைவரும் உணர்ந்து போற்றும் கடப்பாடு உடையவர் ஆவர். தமிழைச் சிவமாகவும், சிவத்தைத் தமிழாகவும் கண்டு, 1300 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்பரப்பத் தமிழ் இயக்கம் கண்டருளிய தலையாய தமிழ்ப் பெருஞ் சான்றோர் சம்பந்தரே யாவர்.

முடிவுரை :

ஞானசம்பந்தருக்கேயுரிய இத்தகைய தனிப்பெரும் சிறப்புநலங்களையெல்லாம், 'தோடுடைய செவியன்' என்னும் திருப்பதிகம், செவ்விதின் விளக்கிக் கொண்டு திகழ்கின்றது. இங்ஙனமே ஞானசம்பந்தர் அருளிய எல்லாப் பதிகங்களும் விளங்குதல் காணலாம். அவற்றை யெல்லாம் ஆராய்ந்து கற்றுப் போற்றிப் பயன் கொள்ள முற்படுதல், தமிழர் அனைவருக்குமே தலையாய கடமையாகும். வாழ்க ஞான சம்பந்தர் புகழ்! வளர்க அவர்தம் திருநெறிய தமிழ்!!

— ஆசிரியர்

---

(8) "We may say that as we pass from the Upanishadic mysticism to the mysticism of the Middle Age, we see the spiritual life brought from the hidden **cloisters to the market place**. Thus arose a Democratic Mysticism which laid stress upon the vernacu--lars as the medium of Mystical teaching as opposed to the classical mysticism of ancient times, which has Sanskrit- as its language of comunication. It was a **democratisation** not merely in language, but also in the spirit of teaching, and we see how mysticism became the property of all"

— **Prof. R. D. Ranade,**
Mysticism in Maharashtra.

சக்தியும் சிவமும்

திரு. கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I.A.S.,
ஆணையர், அறநிலைய ஆட்சித்துறை.

உலகங்களையெல்லாம் படைத்துக் காத்து ஒடுக்கியருளும் ஒப்புயர்வற்ற பரம்பொருளைச் சிவம் என்றும், அதன் ஆற்றலைச் சக்தி என்றும் சான்றோர்கள் வழங்கினர். சிவம் வேறு, சக்தி வேறு அன்று. சிவம் அமைதி நிலை உடையது. சக்தி ஆற்றல் நிலை உடையது. இறைவனின் அருட்பண்பே சக்தி எனக் குறிப்பிடப் பெறுகின்றது. பண்பானது பொருட்குப் பின்தோன்றாது உடன் நிகழும் தன்மை. பொருளினின்று அதன் பண்பைத் தனியே பிரித்தல் இயலாது என்பது தருக்க நூல் கூறும் உண்மை. ஆதலின் சக்தியும் சிவமும், தம்முள் ஒன்றிஞென்று பிரிவில்லனவாகத் திகழும். சிவம் இன்றிச் சக்தியில்லை. சக்தியின்றிச் சிவம் இல்லை.

உலகப் பொருள்கள் அனைத்தும் சக்தி சிவமேயாகும். சக்தியும் சிவனும் உலகப் பொருள்கள் அனைத்திலும் யாண்டும் பிரிவற விரவி நிற்கின்றன. ''சக்தியும் சிவமும் ஆய தன்மை இவ்வுலகம் எல்லாம்'' என்பர் அருள் நந்திசிவம். பொன்னும் அதன் நிறமும், சூரியனும் அதன் ஒளியும், மரமும் அதன் வயிரமும் போல, சக்தி சிவத்தின்பால் பிரிவறத் தாதான்மியமாக இயைந்துநிற்கும். சக்தியின் இயக்கத்தினுலேயே இவ்வுலகங்களெல்லாம் தொழிற்படுகின்றன. அதனுலேயே ''அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கை எல்லாம்'', எனச் சிவஞான சித்தியார் தெளிவிக்கின்றது.

சிவம் சக்தியோடு கூடிய வழியே, எல்லாத் தொழில்களையும் செய்ய வல்லதாகின்றது. சக்தியோடு கூடாதபோது சிவம் எதனையும் செய்வதில்லை. ''உனக்கு இதனைச் செய்யச் சக்தி இல்லாவிட்டால், சிவனே என்று சும்மா கிட'' என்பது உலக வழக்கு. ''சிவம் எனும் பொருளும் ஆதிசக்தியொடு சேரின் எத்தொழிலும் வல்லதாம்: இவள் பிரிந்திடின் இயங்குதற்கும் அரிது அரிது எனு மறை இரைக்கும்'' என்பது சௌந்தரியலகரிச் செய்யுள்.

இவ்வுண்மையினையே, வங்காளப் பகுதியில் வழிபடப் பெறும் காளியின் திருவுருவச் சிலைகள் நமக்கு உணர்த்தி நிற்கின்றன. தமிழ் நாட்டில் நடராசப் பெருமானின் திருவுருவம் முயலகனை மிதித்துக் கொண்டு நிற்பது போலத் திகழ்தலையே நாம் அறிவோம். ஆனுல் வங்காளப் பகுதியில் சிவ பிரானை மிதித்துக் கொண்டு நிற்பது போலக் காளியின் திருவுருவங்கள் காணப்படும். நமக்கு அஃது, ஒரு சிறிது பொருந்தாதது போலத் தோன்றினும், அதுவும் ஒரு நுட்பத்தினை யுணர்த்துவதாக உள்ளது.

சிவபரம் பொருள், தனக்கென ஒரு செயலும் இன்றி அசைவற்ற இயல்பாகத் தன் நிலையில் திகழ்வது என்பதும்; அதனைப் பற்றுக்கோடும் அடிப்படையுமாகக் கொண்டே, அதன் ஆற்றலாகிய சக்தி இயக்கம் பெற்று ஐந்தொழில்களை நிகழ்த்துகின்றது என்பதுமே, அந்நுண்பொருட் கருத்தாகும்.

சிவமானது, தான் இயங்காமல் இருந்து தனது ஆற்றலாகிய சக்தியை இயங்குவித்து, படைத்தல் காத்தல் ஒடுக்கல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்து தொழில்களையும் நிகழ்த்துகின்றது. நாம் நம்முடைய கையினுல் பல்வேறு செயல்களைச் செய்தல் போலவே சிவமும், சக்தியின் துணை கொண்டு எல்லாச் செயல்களையும் நிகழச் செய்கின்றது. ''நம் கையினுல் நாம் அனைத்தும் செய்தாற் போல், நாடு அனைத்தும் நங்கை (சக்தி) யினுற் செய்தளிக்கும் நாயகன்'' என்னும் திருக்களிற்றுப் படியார் செய்யுள், இதனை இனிது உணர்த்தி நிற்கின்றது. சிவபிரான் கிரியாசத்தியாற் படைத்தலையும், ஞானசத்தியாற் காத்தலையும்,

இச்சாசத்தியால் ஒடுக்கலையும், ஆதிசக்தியால் மறைத்தலையும், பராசக்தியால் அருளலையும் புரிந்தருள்கின்றார் எனச் சமயஞான நூல்கள் சாற்றுகின்றன.

சிவபரம் பொருள் ஒன்றே, சத்தனும் சத்தியும் ஆக இருதிறப்பட்டு நின்று இங்ஙனம் பல்வேறு தொழில்களை நிகழ்த்தியருளும். இதனை,

'' சத்தியாய் விந்து சத்தியாய்
மனோன்மணி தான் ஆகி,
ஒத்துறும் மகேசை ஆகி,
உமைதிரு வாணி ஆகி,
வைத்துறும் சிவாதிக்கு இங்ஙன்
வரும்சத்தி ஒருத்தி ஆகும்;
எத்திறம் ஈசன் நின்றான்
அத்திறம் அவளும் நிற்பள் ''

என அருள்நந்திசிவம், தாம் இயற்றியருளிய சிவஞான சித்தியார் செய்யுளில் விளக்கியிருத்தல் கொண்டு தெளியலாம். துர்க்கை காளி விசயை வைஷ்ணவி குமுதை சண்டிகை கிருஷ்ணை மாதவி கன்னிகை மாயை நாராயணி ஈசானை சாரதை அம்பிகை பிராமி மகேசுவரி குமாரி வராகி மகேந்திரி சாமுண்டி எனச் சக்தியின் கூறுகளாக, எத்தனையோ மற்றும் பலப்பல தெய்வத் திருவுருவங்கள் வழிபடப் பெறுவது உண்டு. உருவங்களால் இவை பலவாயினும், பொருளால் இவையனைத்தும் சக்தி என்ற ஒன்றேயாகும்.

சக்தியையும் சிவத்தையும் உலகியல் நிலையில் உருவக முறையில், மனைவியும் கணவனும் போல வைத்து, நூல்கள் கூறும் நுட்பத்தினை யுணரமாட்டாமல், 'கடவுளுக்கும் மனைவியுண்டா' எனச் சிலர், ஏளனமாக வினா நிகழ்த்துவது உண்டு.

'' சிவம் சக்தி தன்னை ஈன்றும்
சக்திதான் சிவத்தை ஈன்றும்,
உவந்து இருவரும் புணர்ந்திங்கு
உலகுயிர் எல்லாம் ஈன்றும்,
பவன்பிரம சாரி ஆகும்;
பால்மொழி கன்னி ஆகும்;
தவம்தரு ஞானத் தோர்க்கு
இத்தன்மைதான் தெரியும் அன்றே''

என்பது சிவஞான சித்தியார் செய்யுள்! சக்தியும் சிவமும் மனைவியும் கணவனும் மட்டும் அல்லர். அவர்கள் உலகங்களை எல்லாம் ஈன்றெடுத்த தாயும் தந்தையும் கூட ஆவர்; இங்ஙனம் உலகங்களையும், உலகத்துயிர்களையும் எல்லாம் தாயும் தந்தையுமாகப் பெற்றெடுத்திருப்பினும், சிவபிரான் பிரமசாரியாகவே திகழ்கின்றார்; சக்தி கன்னியாகவே விளங்குகின்றாள். நுண்ணிய இச்சிறந்த உண்மையினையே மேலைச் சிவஞான சித்தியார் செய்யுள் அழகுற விளக்குகின்றது.

இங்ஙனமே திருமூலர், சக்தி சிவத்திற்குத் 'தாயும் மகளும் நல்தாரமும் ஆகும்' (1154) என்றும்; குமரகுருபரர் 'மனைவி தாய் தங்கை மகள் ஆவள்' (சி. செ. கோவை, 33) என்றும்; மாணிக்கவாசகர் சத்திக்குச் சிவபிரான் 'கேள்வன் மகன் தகப்பன் தமையன்' (பொற்சுண்ணம், 13) என்றும்; சுவையமையவும் நயம்பொலியவும் குறிப்பிட்டிருக்கும் சிறப்பு, சிந்தித்துத் தெளியற்பாலது.



"பேரறிஞர் அண்ணா போல் உண்டோ பிறர்?"

(பிறந்தநாள் விழா வாழ்த்து)

புலவர். ந. ரா. முருகவேள். M.A., M.O.L.,

'கல்வி நலனிற் கரையிலாக் காஞ்சி' என்று
சொல்லினர்முன் அப்பர் சுவாமிகள்தாம்! — ஒல்வகையில்
மற்றதனை இன்றுமிக வாய்மைஎனத் தேற்றியது;
பொற்புயர்நம் அண்ணா புகழ்! (1)

பெருமைஎலாம் சான்றுயர்ந்த பேரறிஞர் அண்ணா
அருமைநலப் பண்பெல்லாம் ஆய்ந்தால், — திருமெய்மிகு
நல்ல "தலை யாய மனிதர்" என நாவரசர்
சொல்வதிவர்க் கேஏற்கும் சூழ்ந்து. (2)

காட்சிக் கெளியர்! கவின்வடிவர்! இன்சொல்லர்!
ஆட்சித் திறன்கள் அமைந்தொளிர்ந்தோர்! — மாட்சிமிகு
பேரறிஞர் அண்ணா பெருமையெலாம் ஆய்ந்தளந்து,
யார்ஒருவர் கூறவல்லார் இங்கு? (3)

'இனிமை தமிழின் இயல்பு' என்றே கற்றோர்
நனிபுகழ்வர்; மற்றதுநம் அண்ணா — கனியனைய
செஞ்சொற்சீர்ப் பேச்சாலும், செம்மைஎழுத் தாலும், மிக
நெஞ்சுற்றோங் கிற்று நிலைத்து! (4)

அகம்புறம்வே றென்றுதமிழ் ஆய்ந்துரைப்பர், அண்ணா
உகந்துமிக என்றாலும்; ஒன்றாய் — அகம்புறம்
வேறாகா தென்றும் விளங்கிநின்றார்! அஃதன்றோ
மாறாச்சீர் நம்அண்ணா மாண்பு! (5)

'பேச்சிற் பயன் இல்லை' என்றுபலர் பேசுகிற்பர்;
ஆச்சரியம் அன்றோ? நம் அண்ணாவின் — பேச்சுகளால்
எத்தனை நன் மாற்றங்கள் எய்தியுள, நாட்டகத்தென்று
அத்தனையும் எண்ணியிடின் ஆய்ந்து. (6)

மடமையற்று மக்களெலாம் வாழ்க்கை நலம் எய்தக்
கடமையொடு கண்ணியம், கட்டுப்பா (டு) — உடைமை, எனும்
தாரகநன் மந்திரத்தைத் தந்துசென்ற அண்ணாபோற்
பேரறிஞர் உண்டோ? பிறர். (7)

'ஞானம்உண் டாக்கல் நலம்' நாட்டிற் கென்றே
மோனமிகு மூலர் மொழிந்துசென்றார்; — ஆனதனால்
'ஒன்றே குலம்ஒருவ னேதேவன்' என்று அண்ணா
நன்றே மொழிந்தார் நயந்து. (8)

தெய்வப் புலவர் திருவள் ளுவர்சிறப்பை
வையத்தோர் எல்லாம் மதித்துணர்ந்து — உய்வதற்கா,
ஏல்பல் கலைக்கழகத் திற்குறள்நூல் கற்பித்தார்;
சால்புயர் நம்அண்ணா தான். (9)

முன்னரும் என்றும் நிகழ்ந்ததில்லை; முன்னின் இனிப்
பின்னரும் இங்கு நிகழ்வரிதே: — என்னும்
நலம்அமைய, அண்ணா நடத்திவைத்தார், நன்றே
உலகத் தமிழ்மாநாடு ஊங்கு. (10)

'மக்களின் தொண்டே மகேசுவரன் தொண்டு' என்னும்
தக்கதொரு பேருண்மை தான்தெளிந்தே, — மிக்கன்பால்
நண்ணரும் போற்றுபல நற்பணிகள், பேரறிஞர்
அண்ணா அவர்கள்செய் தார்! (11)

'மாற்றானின் தோட்டத்து மல்லிகையே என்றாலும்,
ஏற்ற நறுமணம்கொண் டேஇருக்கும்; — தேற்றங்காண்!'
என்றுரைத்தே பேரறிஞர் அண்ணா, எவரையும்தான்
நன்கு மதித்தொழுகி னார். (12)

'கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிந்திடும்சொல்' வித்தகராய், — மாட்சிமிகப்
பேரறிஞர் அண்ணா பெரும்புகழ்தான் பெற்றொளிர்ந்து,
சீர்பெருக வாழ்ந்தார் சிறந்து. (13)

எழுத்தாலும், பேச்சாலும், இன்செய லாலும்,
வழுத்தகுநற் பண்பாலும், வாழ்நாள் — முழுத்துமே,
மக்கள் நலங்குறித்து மாண்பார் அறிஞர்அண்ணா
தக்கபெருந் தொண்டுகள் செய் தார்! (14)

ஆங்கிலத்தில் நற்புலமை ஆர்ந்துபெரு நாவலராய்
ஈங்கு மிகத்திகழ்ந்தார் என்றாலும், — ஓங்குபெருஞ்
செந்தமிழ்க்கே ஆர்வம் சிறந்து திகழ்ந்திருந்தார்!
நந்தம் அறிஞர்அண்ணா நன்கு. — ஆசிரியர் (15)

இறையுணர்வு

தமிழக உயர்நீதிமன்ற நீதிபதி,
மாட்சிமிகு திரு. மு.மு. இஸ்மாயில் அவர்கள்

மனிதன் தோன்றிய காலந்தொட்டு இன்று வரை வளர்ந்து கொண்டே வந்திருக்கின்றான்; இன்னும் வளர்ந்து கொண்டே போவான். வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைவது மாற்றம். மாற்றமில்லையெனில் வளர்ச்சி இல்லை. மிகச் சிறிதாகப் பிறக்கின்றசிசு தக்க வயதிலே பூரண வளர்ச்சியை அடைகின்றது. இந்த வளர்ச்சியின் போக்கில் சிசுவின் அமைப்பிலே மாற்றங்கள் பல தொடர்ந்து நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. சிசுவாக இருக்கும் பொழுது பார்த்த ஒருவரைப் பல ஆண்டுகளுக்குப் பிறகு பார்க்கும் பொழுது "அடையாளமே தெரியவில்லையே! இவ்வளவு பெரியவனாக வளர்ந்து விட்டாயே", என்று சொல்கிறோம். அடையாளம் தெரிந்து கொள்ள முடியாத அளவுக்கு வளர்ந்து விட்ட போதிலும் அடிப்படை அமைப்பில் மாற்றமில்லை. இரண்டு கைகளோடும் இரண்டு கால்களோடும் ஒரு தலையுடனும் அந்தத் தலையில் இரண்டு கண்கள், இரண்டு காதுகள், ஒரு மூக்கு, வாய் ஆகியவற்றுடன் தோன்றும் சிசு, அதே அவயவங்களுடன்தான் வளருகிறது. இது மனிதன் தோன்றிய காலந்தொட்டு நிகழ்வது.

மனிதனுடைய தேவைகள் பெருகிக் கொண்டே போகின்றன. அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் சாதனங்களும் வசதிகளும் புதிய புதிய தோற்றத்தில் புத்தம் புது சக்திகளுடன் பெருகிக் கொண்டே போகின்றன. குழந்தைகளுக்கு ஆச்சரியத்தையும் நூதனத்தையும் உண்டாக்குவதற்காக நாம் காட்டி வந்த நிலா, இன்று மனிதன் போய் இருந்து பூமிக்குத் திரும்பி வரக்கூடிய சந்திர மண்டலமாக ஆகிவிட்டது. கற்பனையில் கூட எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்குத் தன் அறிவைப் பெருக்கிக் கொண்டே மனிதன் அந்தச் சந்திர மண்டலத்துக்குச் சென்று திரும்பி வரக் கூடிய வழியையும் வசதியையும் இன்று செய்து கொண்டு விட்டான். இவ்வளவு வளர்ச்சிகளுக்கும் மாற்றங்களுக்கும் இடையே மனிதனுடைய அங்க அமைப்பு மட்டும் ஒரே மாதிரியாகவே இருக்கிறது. வாழ்க்கை வசதியிலும் விஞ்ஞானத் துறையிலும் ஆராய்ச்சி அரங்கிலும் மனிதன் எவ்வளவுக்கு முன்னேறினாலும் இந்த அடிப்படையில் மாத்திரம் மாற்றம் உண்டாகப் போவதில்லை.

இதைப் போலத்தான் மனிதனுடைய உணர்வு தளத்திலே மாறாமல் இருக்கக் கூடிய ஒன்றும் இடம் பெற்றிருக்கின்றது. அதுதான் இறை உணர்வு அல்லது இறை நம்பிக்கை என்பது. மனிதன் அடைந்திருக்கும் வளர்ச்சிக்கும் மாற்றங்களுக்குமிடையே இந்த இறையுணர்வு மாறாமல் நிரந்தரமாக இருந்து கொண்டே வந்திருக்கிறது. இந்த இறை உணர்வை அணுகும் விதத்தில், பற்பல மக்களிடையே வெவ்வேறுபட்ட காலத்தில் கருத்து வேறுபாடு உண்டாகியிருக்கிறது. ஆனால், இறையுணர்வு என்ற அடிப்படை அசைந்து கொடுக்கவேயில்லை. இப்பிரபஞ்சம் முழுவதும் தோன்றி இயங்குவதற்கும், அவற்றினிடையே காணப்படும் உயிர்களும் பொருட்களும் ஒரு வரம்புக்கு உட்பட்டுவாழ்ந்து, இருந்து, அழிந்து போவதற்கும் அடிப்படைக் காரணமாக ஒரு சக்தி இருந்துதான் ஆகவேண்டும் என்பதை சிந்தனைசக்தி உடையவர்கள் யாரும் மறுக்க மாட்டார்கள். ஆனால், சக்திக்குப் பெயர் இடுவதிலும், குணங்களைக் கொடுப்பதிலும் அந்தச் சக்திக்கும் பிறவற்றுக்குமுள்ள உறவின் தன்மையை நிர்ணயிப்பதிலும் கருத்து வேறுபாடுகள் நிரம்ப இருக்கின்றன. சிலர் அந்தச் சக்தியைக் கடவுள் என்கிறார்கள். வேறு சிலர் அதை இயற்கை என்கிறார்கள். பிரபஞ்சத்தின் அமைப்பு முறையை, அந்தச் சக்தியைக் கடவுளின் விருப்பம் என்கிறார்கள். அந்தச் சக்தியை இயற்கை என்பவர்கள் இயற்கை நியதி என்கிறார்கள்.

மக்கள் தங்களுடைய மனேபக்கு வத்துக்கும், அறிவியல் துறையிலே அவர்கள் அடைந்திருக்கும்முன்னேற்றத்திற்கும், சிந்தனை உலகில் அவர்கள் சென்றிருக்கும் தூரத்திற்கும் ஏற்ப, அந்தச் சக்திக்குச்சிலர் உருவம் கற்பிக்கி ருர்கள், குணங்களைக் கொடுக்கிருர்கள், செயல் களைச் சுமத்துகிருர்கள்; வேறு சிலர், அஃது உருவமற்றது, நிர்க்குணமானது, எங்கும் நீக்க மற நிறைந்திருப்பது என்று கொள்கிருர்கள்; வேறு சிலரோ, அந்தச் சக்தியையோ கடவுளை யோ நம்மால் காணமுடியவில்லையே; அப்படி இருக்கும்பொழுது அத்தகையது ஒன்று உண்டு என்று எப்படி ஏற்றுக் கொள்ள முடியும் என்று கேட்கிருர்கள். இவர்களுடைய இந்த வாதத்தை ஏற்றுக்கொள்வதாக இருந்தால் இருப்பதெல்லாம் காணமுடிந்ததாக அமைய வேண்டும். இவர்களோ, காணமுடியாத பல வற்றை இருப்பதாக ஏற்றுக் கொள்கிருர்கள். உதாரணமாக மின்சாரத்தைக் கண்ணுல் காண முடியுமென்று யாராலும் சொல்ல முடி யாது. அதன் காரணமாக மின்சாரம் என்ற ஒன்று இல்லை என்று இவர்களால் சொல்ல முடி யாது. பார்க்கப் போனுல், மின்சாரம் இல்லா விட்டால் இன்றைய வாழ்க்கையே இல்லை என்று கூடச் சொல்ல முடியும். வாழ்க்கையின் வசதிகட்கு மாத்திரம் இந்த மின்சாரம் உதவு கிறதென்பது இல்லாமல், மனிதன் இறந்து போனுல் அவன் உடலை எரிப்பதற்குக் கூட இந்த மின்சாரத்தை நாடுகிற நிலைமைக்கு அது வந்து விட்டது.

அதே போலத்தான் காற்றையும் யாரும் கண்ணுல் காண முடியாது. அதன் காரண மாகக் காற்று என்றஒன்று இல்லைஎன்று யாரும் சொல்வதில்லை. அதற்கு மாருக, காற்று எங்கும் இருக்கிறது என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்கிருர்கள். அஃது இருப்பதை நுகர்கிரும்; அஃதுஇடம் விட்டு இடம் நகருவதை உணர் கிரும். உண்மையில், சூருவளி ஒன்று ஏற்படும் போது அந்தக் காற்றினுடைய சக்தியை மிகமிக நன்ருகப் புரிந்து கொள்கிரும். எங்கும் நிறைந்து இருக்கிற இதே காற்றையே பற்பல பொருட்களில் அடைக்க முயலுகிரும். அப்பொழுது அந்தந்தப் பொருட்களின் அமைப்புக்கு ஏற்ப அந்தக்காற்று உருவெடுக் கிறது. பல்வேறு உருவங்களில் அமைந்திருக் கின்ற பலூன்களில் காற்றை அடைப்பது நாம் அன்ருடம் காணும் காட்சி. மோட்டார் கார், லாரி, சைக்கிள் ஆகியவற்றின் சக்கரங்களில் பொருத்தப்படும் டயர்களினுள்ளிருக்கும் ரப்பர் குழாய்களில் காற்றை அடைத்து உபயோகிக்கும் போது அந்தக் காற்றினுடைய சக்தியை நாம் உணர்ந்து கொண்டிருக்கிரும். எனவே கண்ணுல் காணத் தக்கவற்றையே இருப்பதாக ஏற்றுக் கொள்ள முடியும் என்ற வாதம் பொருளற்றதாக ஆகி விடுகிறது.

பார்வையாலும், நுகர்ச்சியினுலும், உணர்ச் சியினுலும், ஒலியினுலும், சுவையினுலும், ஐம் பொறிகள் பல பொருட்கள் இருப்பதை அறிவிக்கின்றன. ஆனுல், இந்த ஐம்புலன்களி லுல் இருப்பதாக ஏற்றுக் கொள்கின்ற எல்லாமே கண்ணுல் காணக் கூடியவை என்று சொல்லி விட முடியாது. உதாரணமாக ஒரு மலர் இருப்பதைக் கண்ணுல் காண முடியும். ஆனுல் அதற்கு மணமுண்டு என்பதை மூக்கினுல் நுகர முடியுமேயன்றிக் கண்ணுல் காண முடியாது. எனினும் அந்த மலருக்கு மணமுண்டு என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் செய்கிரும். அது போலத்தான், இந்த ஐம்புலன்களுக்கும் அப் பாற்பட்ட உள்ளுணர்வினுல் உணர்ந்து கொள் ளக் கூடிய சக்தி ஒன்று உண்டு என்பதைத் தர்க்கரீதியில் பார்த்தால் கூட ஏற்றுக் கொள் ளத்தான் வேண்டும். உண்மையில் பார்க்கப் போனுல் விஞ்ஞான வளர்ச்சியில், எந்த அள வுக்கு முன்னேறுகிருேமோ அந்த அளவுக்குக் கடவுள் ஒன்று உண்டு என்றநம்பிக்கையும் உணர்வும் ஆழமும் அழுத்தமும் பெற்றுக் கொண்டு வருகின்றன. இதனை விஞ்ஞானத் துறையில் மேதைகள் என்று உலகம் முழுவதி லும் அங்கீகரிக்கப்பட்டவர்களே தெளிவாகத், தங்களுடைய அனுபவத்தின் அடிப்படையில் எடுத்துக் கூறியிருக்கிருர்கள்.

உண்மையில் பார்க்கப் போனுல், ஒரு மரம் எவ்வளவுக்கெவ்வளவு பெரிதாக வளருகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதனுடைய ஆணிவேர் ஆழமாகவும் அழுத்தமாகவும் அமைய வேண்டும். இல்லாவிட்டால், மரம் வளர்வதற்கு வழியின்றி நசித்து விடும். அது போல வே, மனிதன் தனது வசதிகளையும் வாய்ப்புக் களையும் அறிவையும் பெருக்கிக் கொள்கின்ற அளவுக்கு இறை நம்பிக்கையை ஆழமான தாகவும் அழுத்தமானதாகவும் ஆக்கிக் கொள்ள வேண்டும். இல்லா விட்டால் வேரறு பட்ட மரத்தின் நிலைதான் மனிதனின் நிலையும் ஆகும்.

o-o-o

வள்ளலார் கண்ட நால்வர்

'சன்மார்க்கநெறிச் சான்றோர்'

பொள்ளாச்சி திரு. நா. மகாலிங்கம், B.Sc., M.I.E.,

சமரச சுத்த சன்மார்க்கம் கண்ட திருவருட் பிரகாச வள்ளலார் தனக்கு முந்தைய அருளாளர்களிடம் பரமபக்தி உடையவராய்த் திகழ்ந்தவர். 'வாழையடி வாழையென வந்த திருக்கூட்டத்தில் யான் ஒருவன் அன்றோ' என்று அவர் உருகிப் பாடுவதைக் காணும்போது முந்தையோர் பாடல்களை அவர் முறையாகப் போற்றியதை உணர்கிறோம். தேவார ஆசிரியர்களான முதல் மூவரையும், திருவாசகம் திருக்கோவை யார் தந்த மணிவாசகரையும் தனித்தனியே பத்துப் பத்துப் பாடல்களில் அவர் பாராட்டி உரைக்கிறார். நேரடியாக அவர்களைப் போற்று வது என்றும், அவர்கள் அருளிச்செயல் களையும், தொண்டுகளையும் பாராட்டுவது என்றும் வகுத்துக்கொண்டு அவர் போற்று கிறார். முதல் திருமுறையில் கணபதி முருகன் சிவன் முதலிய தெய்வங்களை முன்னோர்களைப் போலவே பாராட்டுகின்றார். திருவருட்பாவில் முதல் திருமுறையில் திருஞான சம்பந்தர் 'எலும்பைப் பெண்ணாக்கிய' அற்புதச் செயலையும், பெருமண நல்லூரில் திருமணம் காண வந்தவர்கள் அனைவருக்கும் முத்தி வழங்கியதையும், திருநாவுக்கரசருக்காகச் சிவ பெருமான் கட்டுச்சோறு கொடுத்த வரலாற் றையும், சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்காகத் திருமணத்தில் தடுத்தாட்கொண்ட செய்தியை யும் போற்றிப் பாடுகின்றார். மாணிக்கவாசக ருக்காகச் சிவபெருமான் எடுத்த குதிரைச் சேவகனுடைய வடிவத்தை என் கனவிலாயி னும் காட்டுக என்றும், பிட்டுக்கு மண்சுமந்த அன்று இறைவன் பிரம்படி பட்டபொழுது வாத வூரர் மனது என்ன பாடுபட்டதோ என்றும், அதனை இன்று கேட்ட போது தனது உள்ளம் இடிந்து போயிற்று என்றும் கூறி வருந்து கின்றார்.

ஒருமுறை என்னுடன் உரையாடிக் கொண்டிருந்தபோது, பள்ளியகரம் திரு. நீ. கந்தசாமிபிள்ளை அவர்கள் வள்ளலாரைப் பற்றிக் கூறியதை எங்கள் இராமலிங்கர் பணிமன்ற முத்திங்களிதழிலும் கட்டுரை வடிவில் எழுதியிருக்கிறார்.

திருவருட்பா என வழங்கும் வள்ளலார் அருளிய தெய்வீகப் பாடல்கள் அனைத்தும், அவருடைய தெய்வீகக் கையினால் எழுதப் பெற்றவையேயல்லாமல் திருவாய் மலர்ந்தவை யல்ல. அவருடைய பாட்டுக்களை அவர் பாடுவதேயில்லை. எப்போதும் திருமுறைப் பாடல்களையே பாடிக் கொண்டிருப்பார். சில சமயம் ஒரு அடியையே தொடர்ச்சியாகப் பல நாழிகை பாடிக்கொண்டிருப்பதும் உண்டு. அவ்வாறு பாடிக் கொண்டிருக்கும்போது, அக்கம்பக்கத்தில் என்ன நடக்கிறது என்பதும் தெரியாது. கண்ணீர் ஆறாகப் பெருகி ஆடையை நனைத்துவிட, அருகில் உள்ளவர்கள் மாற்றுடை உடுத்திவிடுவார்கள் இந்த நிலையிலிருந்து சிறிது உணர்ச்சி பெற்ற வுடனே திருமுறைப் பாடல்களைத் தொடர்ந்து பாடிக் கொண்டே தன்னுடைய பாடல்களை விரைவாகத் தாளில் எழுதுவார். இவ்வாறு எழுதும் பாடல்கள், திருமுறைகளில் தோய்ந்த திருவுள்ளத்தில் எழுகின்றவைகள் ஆன படியால் திருமுறைகளை ஓதுவதின் பயனை அளிக்க வல்லவையென அன்பர் கருதினார்கள்.

சைவ சமய குரவர்களாகிய நால்வரின் பெருமையைச்சிவப்பிரகாசசுவாமிகள், நால்வர் நான்மணிமாலையில் மிக உருக்கமாகப் பாடி யுள்ளார். அதேவகையில் நம் வள்ளலார் நான்காம் திருமுறையில் ஆளுடையபிள்ளை மாலை, ஆளுடைய அரசு மாலை, ஆளுடைய நம்பிமாலை, ஆளுடைய அடிகள் மாலை என்ற தலைப்பில் அற்புதமான பாடல்களை மனம் உருகப் பாடியுள்ளார். சைவ உலகம் உச்சி மேல் வைத்துக் கொண்டாடத்தக்க வழி

பாட்டுப் பாடல்களாக இவைகள் விளங்கு கின்றன.

வள்ளலார் தம் இளமையில் திருஞான சம்பந்தப் பெருமானை உபாசனா குருவாகக் கொண்டார்கள். 'ஞானசம்பந்தச் செல்வமே எனது சற்குருவே' என்று கூறுவதோடு, அருளுலகத்தில் ஞான அரசு நடத்திய முதல் துரை என்றும் அவரைக் குறிப்பிடுகிறார். சத்திய தருமச் சாலையில் குரு வாரமாகிய வியாழக்கிழமைகளில் சிறப்பு வழிபாடும் நடந்து வருகின்றது.

உயிர் அனுபவம் உற்றிடில் அதன் இடத்தே
ஓங்கு அருள் அனுபவம் உறும்அச்
செயிர் இல் நல் அனுபவத்திலே சுத்த
சிவ அனுபவம் உறும் என்றாய்

என்று கூறி, உயிர் அனுபவம், அருள் அனுபவம், சிவஅனுபவம் என்னும் மூன்று வகையான அனுபவங்களையும்சம்பந்தர் தனக்கு உணர்த்தியதாகக் குறிப்பிடுகின்றார். சுத்த சன்மார்க்க நெறியில் முன்புறுநிலை பின்புறு நிலை எதுவென்று மனம் தடுமாறிய போது, தம் தேவாரப் பாசுரத்தால் ஞானசம்பந்தர் விளக்கம் தந்ததாகவும் வள்ளலார் குறிப்பிடு கிறார்.

முன்பு உறுநிலையும் பின்பு உறுநிலையும்
முன்னி நின்று உளம் மயக்குறுங்கால்
அன்புறு நிலையால் திருநெறித் தமிழ்தொன்டு
ஐயம் நீத்து அருளிய அரசே.
— ஆளுடையபிள்ளையார் அருள்மாலை.

திருநாவுக்கரசுப் பெருமானை நினைக்கத் தொடங்கும்போதே அவருடைய அருமைத் தமக்கையாரின் அருளால்தான், நாவுக்கர சருக்கு ஞானவாழ்வு வந்தது என்பதைக் கருதி 'அருள்வழங்கு திலகவதி அம்மையார் பின் அவதரித்த மணியே' என்று பாடுகின்றார்.

திருநாவுக்கரசரைச் சமணர்கள் கல்லில் கட்டிக் கடலில் எறிந்தனர். நமசிவாயத்தை ஓதி அவர் கரையேறினார். அதுபோல மாயை யாகிய சமணர்கள் மனமாகிய கல்லைக் கட்டிப் பாவமாகிய கடலில் எறிகின்றனர். நானும் பஞ்சாட்சரத்தை ஓதி வருகின்றேன். என்னைக் கரையேற்றுவாயாக என்று வள்ளலார் உருகி வேண்டுகிறார்,

சுந்தரரின் தேனை செந்தமிழ்ப் பாடல் களைத் தினந்தோறும் வள்ளலார் பாடியிருக் கிறார்கள்.

தேன்படிக்கும் அமுதாம் உன் திருப்பாட்டைத்
தினந்தோறும்
நான்படிக்கும் போதென்னை நானறியேன்

என்று கூறுகிறார். சுந்தரர் திருமணத்தைச் சிவ பெருமான் தடுத்தாட்கொண்ட போது அடிமை ஓலையைக் காட்டினார். அப்போதும் சுந்தரர் மறுத்தார். நான் அடிமையாக மாட்டேன் என்று முதலில் கடுமையாக வாதமும்செய்தார். என்னை அப்படி ஆட்கொள்ள வருவதென்றால் சிவனே! ஓலையைக் காட்ட வேண்டாம். தொண்டன் நீ என்று சொன்னால் போதும், ஒரு பணியல்ல ஆயிரம் பணிகளானாலும் வெறுப் பில்லாமல் நான் செய்வேன் என்று, கொடி விண்ணப்பத்தில் வள்ளலார் குறிப்பிடக் காணலாம்.

திருவாசகம் வள்ளலாரின் ஞான நூலாகும். திருவாசகத்தை அனுபவிக்கும் ஞானனு பவத்தைத் தனக்கு மாணிக்கவாசகர் அருளு மாறு வேண்டுகிறார். அன்புருவம் பெற்று அதன் பின்னர் அருளுருவத்தை அடைந்து, முடிவில் இன்புருவத்தை மாணிக்கவாசகர் அடைந்தார் எனவும் வள்ளலார் குறிக்கின்றார். அவைகளைச் சுத்ததேகம். பிரணவதேகம், ஞானதேகம் என்று வள்ளலார் விளக்குகிறார். திருவாசகத் தில் வரும் ஒருவாசகம் கூடச் சிவனோடு தன்னைச் சேர்த்துவிடும் ஆற்றல் வாய்ந்த ஆசாரிய உபதேசமாகும் என்பதை,

''வருமொழி செய் மாணிக்க
வாசகநின் வாசகத்தில்
ஒருமொழியே என்னையும்என்
உடையனையும் ஒன்றுவித்துத்
தருமொழியாம்...''

என்கின்றார்.

திருமண வாழ்க்கையைத் தொடங்கிய முதல் நாளிலேயே திருவாசகத்தை மணந்தவ ராக வள்ளற்பெருமான் இருந்தாரென்பது நாட றிந்த உண்மையாகும்.

இருந்தாலும் சைவ உலகம் வள்ளற்பெரு மானின் கருத்துக்களை நன்கு உணர்ந்ததாகத் தெரியவில்லை. நால்வரைப் பற்றித் தெள்ளத் தெளிவாக வள்ளலாரைப்போல் யாரும் புரிந்து

கொண்டு போற்றியதில்லை. தனக்கு முன்னோடிகளான சமயகுரவர் நால்வரைப் போற்றிப் பழமையில் தான் வைத்திருக்கும் பற்றையும் அதன் அடிப்படையில் புதுமையை எப்படி வளர்த்திருக்கிறார் என்பதையும் பலர் அறிய முயலவேண்டும், நவீன விஞ்ஞானம் எவ்வாறு வளர்ந்து வருகிறதோ அந்த வளர்ச்சிக்கு இணையாகச் சமயக் கருத்துக்களும் மாற்றங்களோடு வளர வேண்டும். முறையான அந்த ஞான வளர்ச்சியை வள்ளற்பெருமானின் பாடல்களில் காணமுடிகிறது.

இவ்வாறு வள்ளலார் நால்வரையும் போற்றுகிற திறம், நாம் அறிந்து பின்பற்றத்தக்கதாகும். பெரியோர்களைப் பின்பற்றுவது ஒருவர் பெருமைக்கு மேலும் பெருமை சேர்ப்பதாகும். இவ்வாறு வள்ளலார் வாழையடி வாழை எனத் திருக்கூட்ட மரபைச் சேர்ந்த ஒருவராக அல்ல, பெரியராகச் சிறந்து விளங்கும் பெருஞானியாவார்.



திருச்செங்கோடு வட்டம், மல்லசமுத்திரம் திரு. பெரிய மாரியம்மன் ஆலயத் திருப்பணிக்கு, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்கள் அடிக்கல் நாட்டுதல். மதுரைத் துணை ஆணையர் திரு. எம். எ. முருகேசன் B. A. B. L., அவர்களும், கோவைத் துணை ஆணையர் திரு. எம். சூரியராஜ், B. A. B. L., அவர்களும், உடன் உள்ளனர். (14—5—72).

திருவிடை மருதூர்த்
திருமுறைக் கருத்தரங்கப் பேருரை

தமிழ்க் கடல் – சிவமணி – சிவம் பெருக்கும் சீலர் :

திரு. ராய. சொ. அவர்கள்,

(காரைக்குடி)

மெய்யன்பர்களே, இந்தத் திருமுறைக் கருத்தரங்கில் கலந்து கொள்ளும்படியான வாய்ப்பை அளித்ததற்குத் துறைசை ஆதீனத்தார்க்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். எனக்குப் பிடித்தமான ஒரு சபை இது. இங்கே பல ஊர்களினின்றும் வந்திருக்கின்ற என்னுடைய நண்பர்கள், சிவனடியார்கள் பலரையும் பார்க்கின்றேன். தேவாரம் ஓதுகின்ற தேவார மூர்த்திகள், அனைவரையும் பார்க்கின்றேன். எனவே மிக்க மகிழ்ச்சி.

திருமுறைகளைப் பற்றி உங்களுக்கு விரிவாக நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை. சென்ற ஆண்டு இங்கே திருமுறை மகாநாட்டை முதலாவதாக நடத்தினார்கள். இப்பொழுது இரண்டாவதாக நடத்துகின்றார்கள். இத்தகைய சைவ மடங்கள் திருமுறைகளை நடத்துவது வரவேற்கத்தக்கது. சைவ மடங்களுக்கு ஒரு கடமை உண்டு என்று சொன்னால், அது திருமுறைகளைப் பரப்புவது தானே, அந்த வகையிலே திருவாவடுதுறையார், சென்ற ஆண்டிலே சிறப்பாக நடத்தினார்கள். சென்ற ஆண்டிலே பரவலாகப் பார்த்தார்கள், பன்னிரு திருமுறைகளைப் பற்றியும். இப்பொழுது முதல் மூன்று திருமுறைகளை மட்டும் தனியாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பன்னிரு திருமுறைகள் என்ன என்று தெரியும் உங்களுக்கு. பன்னிரண்டும் சேர்ந்து மொத்த பாடல்கள் தொகை எவ்வளவு? பதினெண்ணாயிரத்துச் சில. இப் பன்னிரண்டு திருமுறைகளையும் பாடிய ஆசிரியர்கள் எண்ணிக்கை எத்தனை? இருபத்தேழு. இருபத்தேழு ஆசிரியர்கள் பாடினார்கள் பன்னிரண்டு திருமுறைகளையும். அவற்றுள் திரு ஞான சம்பந்தப் பெருமான் முதல் மூன்று திருமுறைகளைப் பாடினார். அவர் பாடிய பாடல்களின் எண்ணிக்கை நாலாயிரத்துக்கும் மேல். 4, 5, 6. திருமுறைகளை அப்பர் சுவாமிகள் பாடினார். அவை மூவாயிரம் பாடல்கள். ஏழாம் திருமுறை சுந்தர மூர்த்திகள். அவை ஆயிரம் பாடல்கள். எனவே, ஏழு திருமுறைகளும் சேர்ந்து தேவாரப் பாடல்கள் எண்ணாயிரம். அந்தத் தேவாரத்தைப் பாடிய ஆசிரியர்கள் மூன்று பேர். எட்டாந் திருமுறை திருவாசகம், திருக்கோவையார் என்ற இரு நூல்கள். அந்த இரு நூல்களையும் பாடிய பெரியார் மாணிக்க வாசக சுவாமிகள். திருவாசகம் 658 பாடல்கள், திருக்கோவையார் 400 பாடல்கள் ஆக 1058 பாடல்களை மாணிக்கவாசக சுவாமிகள் அருளினார். ஒன்பதாந் திருமுறைக்கு ஆசிரியர்கள் ஒன்பதின்மர். அந்த ஒரே திருமுறையைப் பாடியவர்கள் ஒன்பது பேர். கணக்கிலாவது பாடல்கள் அதிகமா என்று பார்த்தோமானால், 301 பாடல்களே. திருவிசைப்பா 288. திருப்பல்லாண்டு 13 ஆக 301 பாடல்கள் தாம். ஒன்பதாந் திருமுறை. பத்தாந்திருமுறை திரு மந்திரம். அதைப் பாடிய பெரியார் திருமூலர். பாடல் தொகை 3000. பதினோராந் திருமுறை பன்னிரண்டு ஆசிரியரைக் கொண்டது. இறையனார் பாடிய திருமுகப் பாசுரத்தை முதலாகக் கொண்டது பதினோராந் திருமுறை. சேக்கிழார் அடிகள் அருளியது பெரிய புராணம். அது 4200க்கும் மேற்பட்ட பாடல் கொண்டது.

திருமுறைகளைப் பாடிய ஆசிரியர்கள் இருபத்தெழுவர். அவர்களுள் முதல் மூன்று பேர் பாடியது தேவாரம் என்று பெயர் பெற்றது. ஒரு புலவர் பாடினார், திருமுறைக்கு மதிப்புரை மாதிரி. “மொழிக்கு மொழி தித்திக்க, மூவர்

அருள் தேவாரம் முதல் ஏழு'' என்று. "தேவரெலாம் தொழச் சிவந்த செந்தாள் முக்கண் செங்கரும்பே மொழிக்கு மொழி தித்திப்பாக மூவர் சொலும் தமிழ் கேட்கும் திருச்செவிக்கே மூடனேன் புலம்பிய சொல் முற்றுமோ தான்'' என்று தாயுமான சுவாமிகள் சொல்கிறார். மொழிக்கு மொழி தித்திக்க மூவர் பாடினார் தேவாரம். இங்கே சொன்னார் புலவர், "மொழிக்கு மொழி தித்திக்க மூவர் அருள் தேவாரம் முதல் ஏழு என்ப, வழித்துணையா உலகுய்ய வாதவூர் வள்ளல் அருளிய திருவாசகம், திருக்கோவை எட்டென்ப'' என்று. ஒன்பதாந் திருமுறையைப் பற்றி நான் உங்களுக்கு நிறையச் சொல்ல வேண்டும். ஒன்பதாந் திருமுறையிலே முதல் ஆசிரியர் திருமாளிகைக்தேவர். "திருமாளிகைத்தேவர் உள்ளிட்ட விழுப்புலவர் ஒன்பதின்மர் பிழிந்தளித்த விண்ணமுதை ஒன்பது என்ப'' என்றார் புலவர். ஒன்பதின்மரிலே ஒருவர் கருவூர்த் தேவர். அவர் 100 பாடல் பாடினார். ஒன்பது பேரும் பாடியவை 288. அதில் ஒருவர் பாடினது 100. கருவூர்த்தேவர் பாடல்கள் திருவாசகத்துக்கு இணை என்று சொல்லலாம்.

திருக்கோயில்களிலே பஞ்ச பாசுரம் படிக்கின்றோம். பஞ்ச பாசுரம் என்றால் ஐந்து பாடல் என்பது பொருள். பஞ்சபுராணம் அல்ல. பஞ்ச புராணம் என்று சொல்லுவார் சிலர். அது தவறு. ஐந்து பாசுரம் படிக்கின்றோம் திருக்கோயில்களிலே. இந்த ஐந்திலே ஒன்று தேவாரம், இரண்டாவது திருவாசகம், மூன்றாவது திருவிசைப்பா, நான்காவது திருப்பல்லாண்டு, ஐந்தாவது பெரியபுராணம். இப்படி ஐந்து பாடல்களை எடுத்தார்கள் சைவப் பெருமக்கள், திருக்கோயிலில் வழிபடும் போது சிறப்பாகப் பாடுவதற்கு. அதிலே எண்ணாயிரம் தொகை கொண்ட தேவாரத்துக்கு ஒரு பாடல், ஆயிரம் தொகை கொண்ட எட்டாந் திருமுறைக்கு ஒரு பாடல். முந்நூற்றொரு பாடல் கொண்ட திருவிசைப்பா, திருப்பல்லாண்டுக்கு இரண்டு பாடல்கள். பெரியபுராணம். நாலாயிரத்துக்கு ஒன்று என்று கொண்டார்கள் என்று சொன்னால், இதினின்று சைவர்கள் திருவிசைப் பாவையும் திருப்பல்லாண்டையும் எவ்வளவு மதித்தார்கள் என்று நாம் அறியலாம். திருவிசைப்பாவை நீங்கள் எல்லாம் தேவாரம், திருவாசகம் படிப்பதைப் போலப் படிக்க வேண்டும்.

"திருமூலர் திருமந்திரத்தைப் பத்தென்ப, திருவாலவாயார் செப்பும் ஒரு பாடல் முதலாகப் பன்னிருவர் உயர் தமிழைப் பதினொன்றென்ப.'' கடவுள் ஆலவாய் அண்ணல் பாடினார் ஒரு பாடல். அதை முதலாகக் கொண்டது அது. திருவாலவாயார் செப்பும் ஒரு பாடல் என்றால் ஒரே பாட்டு என்று பொருள்—ஒப்பற்ற பாட்டு. "பொருவரிய சிவனடியார் புகழ் பாடி உய்வதற்கே புவியில் வந்த, திருவுடைய சேக்கிழார் செய் பெரியபுராணத்தைப் பன்னிரண்டென்ப'' என்று சொன்னார் புலவர்.

திருமுறைகள் மிகச் சிறப்புடையன. திருமுறைகள் அவ்வளவையும் ஓதுவது கடுமையான காரியம். அந்தக் காலத்திலே தேவாரம் அருணாசலம் ஐயா இருந்தார். அவருக்கு அடங்கன்முறை அருணாசல ஐயா என்று பெயர். அவருக்கு எண்ணாயிரம் தேவாரமும் பாடம். காரைக்குடியிலே இருந்தார்.

இனி, சிறப்பாகத் திருஞானசம்பந்தருக்கு வருவோமானால், திருஞானசம்பந்தர் பன்னிரண்டு திருமுறைகளிலே முதல் மூன்று திருமுறைகளைச் செய்தவர். இவர் மூன்றாண்டிலே பாடினார் என்று சொன்னால், மூன்றாண்டிலே பாட முடியுமா என்ற வினாவை எல்லாம் நாம் எழுப்ப மாட்டோம். ஏன், பாடலாம், ஓராண்டிலே கூடப் பாடலாம். போன பிறவியிலே படித்திருந்தார் திருஞான சம்பந்தர். அதனாலே அவருடைய பாடல்களிலே யாப்புப் பிழையைக் காண முடியுமா? யாப்பிலக்கணம் கற்றவர்களுக்குத் தெரியும் இது. திருஞானசம்பந்தர் மூன்றாண்டிலே பாடினார். மூன்றாண்டிலே பாடிய காரணத்தினாலே, யாப்பருங்கலக்காரிகையை எல்லாம் கல்லாமலேதானே அவர் பாடினார். இராம கிருஷ்ணபரமஹம்சர் ஒன்றும் படியாமல் வேதங்களை எல்லாம் நமக்கு உதவியிருக்கிறார். நாமறிய வாழ்ந்தவர் இராமகிருஷ்ணபரம ஹம்சர். அவர் பள்ளிக்கூடத்துக்கே போகவில்லை. அவருடைய உபதேச மொழிகள் எல்லாம் வேதங்களின் சாரம் என்று நாம் அறிகின்றோம், பகவான் இராமகிருஷ்ணர் கருவிலே திருவுடையவர். போன ஜென்மத்திலே படித்திருந்தார். அது போலத் திருஞானசம்பந்தர் போன பிறவியிலே படித்திருந்தார். அதனால் தான் மூன்று ஆண்டிலே

பாடினார். சேக்கிழாரடிகள் சொல்லுவார், ''மூவாண்டில் உலகுய்ய நிகழ்ந்ததனை மொழிகின்றேன்'' என்று. ஞானசம்பந்தர் மூன்றாண்டிலே பாடினார். அருமையான பாடல்கள் பாடினார்.

ஒவ்வொரு பெரியவர்கள் பிறக்க வேண்டுமானால் அதற்குக் காரணம் இருக்க வேண்டும் என்று சொன்னார் ரெட்டியார் (நீதிபதி) அவர்கள். உண்டு காரணம், சேக்கிழார் சொல்லுவார், ஏன் பிறந்தார் திருஞானசம்பந்தர்? இந்த வினாவை எழுப்பி விடை தருகின்றார் சேக்கிழாரடிகள். ஐந்தாறு பாடல்களிலே ஒரேயொரு பாடல் மட்டும் நான் இங்கு சொல்கிறேன்.

'' அவம்பெருக்கும் புல்லறிவின்
அமண்முதலாம் பரசமயப்
பவம்பெருக்கும் புரை நெறிகள்
பாழ்படநல் லூழிதொறும்
தவம் பெருக்குஞ் சண்பையிலே
தாவில்சரா சரங்களெலாஞ்
சிவம்பெருக்கும் பிள்ளையார்
திருவவதாரஞ் செய்தார்''

என்று சேக்கிழார் சொல்லுவார்.

ஞானசம்பந்தர் திருவாதிரை நாளிலே பிறந்தாராம்—திருவாதிரை நட்சத்திரத்திலே. ''அருக்கன்முதற் கோளனைத்தும் அழகியவுச்சங்களிலே பெருக்கவலியுடனிற்கப் பேணிய நல்லோரையெழத் திருக்கிளரும் ஆதிரை நாள் திசை விளங்கப் பரசமயத் தருக்கொழியச் சைவமுதல் வைதிகமுந் தழைத்தோங்கப்'' பிறந்தார் சம்பந்தர். வைதிகம் தழைத்தோங்க ஞானசம்பந்தர் பிறந்தார் என்றார். ''திருக்கிளரும் ஆதிரை நாள் திசை விளங்க'' என்றாரே ஏன் தெரியுமா? சிவபெருமான் திருவாதிரையிலே பிறந்தார். சிவபெருமானுக்குப் பிறப்பு உண்டா? ''பிறவா யாக்கைப் பெரியோன்'' என்று இளங்கோவடிகளே சொன்னார். சிவபெருமானுக்குப் பிறப்பு இல்லை. ஆனால் அவர் பிறந்தார் என்று ஏன் சொல்லுகின்றோம்? அது உபசாரம். முத்தொள்ளாயிரம் ஆசிரியர் சொல்லுவார். கடவுள் தான் படைத்தார் எல்லாவற்றையும். நட்சத்திரங்களையும். அவர் படைத்த நட்சத்திரங்களிலே ஒன்று தானே திருவாதிரை. அதிலே எப்படி அவர் பிறந்தார் என்று நாம் கேட்போம் அல்லவா? இந்தநட்சத்திரங்கள் இருபத்தேழில். இரண்டு நட்சத்திரங்களுக்குத்தான் திரு அடை, ஒன்று திருவோணம். மற்றது திருவாதிரை. இந்த இரண்டிற்குத்தான் திரு அடை கொடுத்தார்கள். திருக்கார்த்திகைக்குக்கூடகார்த்திகை மாதத்திலே வருவதைத்தான் திருக்கார்த்திகை என்று கூறுவோம். மற்றைய மாதங்களில்வருவதைத் திரு அடை கொடுக்க மாட்டோம். நட்சத்திரங்களுள் இரண்டு தான் திரு அடை பெற்றவை. இதற்கு என்ன காரணம்? ஒன்று சிவபெருமான் பிறந்ததாகக் கொள்ளப்படுகின்றது. இன்னொன்று திருமால் பிறந்ததாகச் சொல்லப்படுகின்றது. திருவோண நட்சத்திரத்தில் பெருமாள் பிறந்தார். ஆழ்வார் பாடுவார். ''ஓணத்தான் உலகு ஆளும்'' என்று. எனவே கடவுளர்கள் பிறந்த காரணத்தினால் இந்த இரண்டு நட்சத்திரங்களும் சிறப்புப் பெற்றன. ஆதலினால் தான் திரு அடை எடுத்தன. அதில் ஒன்று திருவாதிரை. இங்கு சேக்கிழாரடிகள் சொல்லுவார். இந்தத் திருவாதிரைப் பெருநாள் சிவபெருமான் பிறந்ததால் கூட, அது சிறப்புப் பெற்றதோ என்னவோ? தெரியாது. ஞானசம்பந்தர் பிறந்ததற்காக ''திருக்கிளரும் ஆதிரை நாள் திசைவிளங்க'' என்று பேசுவார். திருநாவுக்கரசரைப் பற்றிச் சொல்லும் பொழுது சேக்கிழார்;

'' திலகவதி யார் பிறந்து
சிலமுறையாண் டகன்றதற்பின்
அலகில்கலைத் துறைதழைப்ப
அருந்தவத்தோர் நெறிவாழ
உலகில் வரும் இருள் நீக்கி
யொளிவிளங்கு கதிர் போற்பின்
மலரும்மருள் நீக்கியார்
வந்தவதா ரம்செய்தார் ''

என்பர். சுந்தரமூர்த்தியைச் சொல்லும் போது.

'' மாதொரு பாகனார்க்கு
வழி வழிஅடிமை செய்யும்
வேதியர் குலத்திற் றோன்றி
மேம்படு சடைய னார்க்கு
ஏதமில் கற்பின் வாழ்க்கை
மனைஇசை ஞானி யார்பாற்
நீதகன் றுலக முய்யத்
திருவ வதாரஞ் செய்தார்''

என்று சேக்கிழார் சொல்லுவார். ஏன் பிறந்தான் இராமன் என்று கம்பரைக் கேட்க வேண்டும். இப்படி எத்தனையோ காரணங்கள்?

பெரியவர்கள் பிறக்கிருர்கள் என்ருல் அதற்குக் காரணம் வேண்டாமா? ஞான சம்பந்தர் உலகத்திலுள்ள பீடைகளை எல்லாம் போக்கத் தோன்றினுர். மூன்று ஆண்டிலே பாடினுர். ஏன் பாடினுர்? இவருக்கு எதனுலே பாட வந்தது? அம்பிகையளித்த ஞானப்பால் குடித்தார் அவர். திருநாவுக்கரசடிகளும், ஞான சம்பந்தப்பெருமானும் கூடினுர்கள். இரண்டு அடியார்கள் கூட்டமும்சந்தித்தன. ஏராளமான அடியார்களோடு சம்பந்தப் பெருமான் வந்தார். அப்படியே வந்தார் அப்பரடிகளும். இரண்டு பேரும் கண்ட இடத்தைப் பற்றிச் சேக்கிழாரடிகள் சொல்லுவார். அது எப்படியிருந்ததாம்? ''சிவம் பெருக்கும் ஒலி நிறைத்தார் உலகம் எல்லாம்'' என்பார். அப்படி என்ருல் என்ன? நமப்பார்வதிபதயே, அரஹரமகாதேவா, என்று சொன்னுர். அதுவும் தேவலோகத்துக்கு எட்டியதாம். அவ்வளவு சத்தத்துடன் ''உம்பர்களும் போற்றிசைப்பச் சிவம் பெருக்கும் ஒலி நிறைத்தார்'' என்று பேசுவார்.

நீதிபதி அவர்கள் அன்னம் பாலிப்பைப் பற்றிச் சொன்னுர்கள். இங்கே அன்னம் பாலிக்கிருர்கள். ஆயிரக்கணக்கானவர்களுக்கு நல்ல உணவு கொடுப்பது அருமையான காரியம். ''அன்னதானபுரம்'' என்னும் பெயருக்கு ஏற்ப மிகவும் சிறப்பாகச் செய்கின்ருர்கள். அதனுலே சாப்பாட்டுக்காகத்தான் நாமெல்லாம் இங்கே வந்திருக்கின்ருேமா? இல்லை நல்ல காரியம் இது, அப்பர் சுவாமிகள் சொல்லுவார். இறைவனைப் பற்றிப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளென்று. இறைவனைப் பற்றி என்ன? 'இறைவனுடைய அடியார்களைப் பற்றிப் பேசாத நாள் இன்னும் பிறவா நாள்! இறைவனுடைய அடியார்களுக்குத் தானே பெருமை. அந்த அடியார்களைப்பற்றிப் பேசுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கின்ற இந்த வாய்ப்பு இருக்கிறதே, இதை மறக்க முடியுமா?

என்னை அழைத்தார். தொலைபேசியில் திரு. அருணுசலம் அவர்கள் சென்னையிலிருந்து, உடனே ஒப்புக் கொண்டேன். ஏன் தெரியுமா? நல்ல காரியம் செய்கின்ருர்கள். இந்தத் திருவாவடுதுறை ஆதீனத்தோடு எனக்குத் தொடர்பு கிடையாது இது வரையில். அதை நான் சொல்லிவிட வேண்டும் அல்லவா? தருமபுரத்துக்கெல்லாம் போனேன். தருமைப் பழைய சந்நிதானம் எனக்குத்தெரியும். இங்கு வந்திருக்கிறவர்கள் எனக்கு நல்ல அன்பர்கள். திருவாவடுதுறையோடு எனக்கு அவ்வளவு தொடர்பில்லை. பெரிய ஆதீனம்-பெரிய மடம்—சைவ மடத்திலே அழைக்கின்ருர்களே போனுல் என்ன என்று பட்டது எனக்கு. இத்திருமுறை மாநாட்டைச் சிறப்பாக நடத்துகின்ருர்கள்.

நீதிபதி அவர்கள் சொன்னபடி, ஞான சம்பந்தப்பெருமானைப் பற்றிப்பலகோணங்களில் பார்க்கின்ருர்கள் பலர். அந்தத் தனிக்கோணமெல்லாம் எனக்குக் கிடையாது. இது பொதுப் பேருரை. எனவே, தனித்தனியே உள்ளே புகுந்து பேச வேண்டிய அவசியம் எனக்கில்லை. அதற்குள்ளேயிருந்து எதை வேண்டுமானுலும் பேசலாம் என்ற உரிமை எனக்குண்டு. ஞான சம்பந்தரைப் பற்றி எத்தனை எத்தனையோ வகைகளில் பார்க்கலாம். மூன்று நாட்களும் அருமையாகப் பேச இருக்கின்ருர் பலர்.

நீதிபதி அவர்கள் சொன்னுர்கள் பட்டி மன்றத்தைப் பற்றி. அவர் கூறியதை நான் ஆதரிக்கின்றேன். சிலர் சில சமயம் பட்டிமன்றத்திலே நல்லபொருள்கள் எல்லாம்சொல்கிருர்கள். ஆனுலும் கொஞ்சம். ஒரு மாதிரியாகத்தான் இருக்கின்றது! அவர்கள் சொன்னபடி திருமுறைகளிலே பட்டி மன்றத்தைப் போட்டு ரொம்ப சங்கடத்தை உண்டாக்கக் கூடாது. இன்னுென்று தெரியுமா உங்களுக்கு? திருமுறைக்குள்ளேயே பட்டிமன்றம் போட்டாற் கூடப் பரவாயில்லை. ஓரிடத்திலே— ''ஆண்டாள் பெரியவரா? மாணிக்கவாசகர் பெரியவரா?'' இப்படிப் பட்டிமன்றம். இரண்டு பேரிலே யார் வேண்டுமானுலும் பெரியவராக இருக்கட்டும். யார் பெரியவர் என்று சொன்னுலும் ஒரு தரப்பாருக்குக் கடுங்கோபம் வந்து விடும். ஆண்டாள் பெரியவர் என்று சொல்லி விட்டால், விடுவார்களா நம்முடைய சைவர்கள். மாணிக்கவாசகர் பெரியவர் என்று சொன்னுல் என்ன செய்வார்கள் அந்த வைணவர்கள்? சங்கடமான காரியம் தான். 'ஆனுல் இப்படி எல்லாம் போடுவதால் என்ன வரும்? பகைமை' முற்றும். அடியார்களுக்குள்ளே பட்டிமன்றம் என்னத்துக்கு? எதற்கு இந்த வம்பு என்று அவர் சொன்னுர். அதை விட்டு விடலாம்,

ஞானசம்பந்தர் மிகச் சிறந்த புலவர். மூன்று ஆண்டிலே பாடினார். ஞானப்பால் குடித்துப் பாடினார். ஞானப்பால் குடித்தார் என்பது உண்மை. அதனால் தான் அவர் ஞானம் பெற்றார். எத்தனையோ ஞானம் பெற்றார். அருமையாய்ப் பாட்டுகள் பாடினார்– யாப்பு அமைதி நிறைந்த பாட்டுக்கள் பாடினார். அகத் துறைப் பாட்டுகள் பாடினார். மூன்று வயதுக் குழந்தை எப்படி அகத் துறைப்பாட்டு பாடும் என்றெல்லாம், நாம் சந்தேகப்படக் கூடாது. அடியார்கள் எல்லாம் பாடினார்கள் அகத் துறைப் பாடல். ஏன் ஞான சம்பந்தரை விட்டு விடுவோம். அப்பர் சுவாமிகள் அகத் துறைப் பாட்டு எவ்வாறு பாடினார். அவர் திருமணம் செய்திருந்தாரா? அப்பர் சுவாமிகள் திருமணம் செய்திருந்தார் என்று என்னால் சொல்ல முடியவில்லை. சரித்திரத்திலே சொல்லியதுண்டா அவர் திருமணம் செய்திருந்தாரென்று. அவர் எப்படியப்பா துறைப் பாட்டுப் பாடினார்? அகத்துறைப் பாட்டுப் பாட அவருக்குஅநுபவம்இருந்திருக்கிறதா? வேண்டியதில்லை. படித்ததை வைத்துக் கொண்டு பாடினார். எவ்வளவு அருமையாக அவர் அகத் துறை பாட்டு பாடினார் தெரியுமா? அப்பர் சுவாமிகள் அகத்துறைப் பாடினார் என்று சொன்னால், ஞானசம்பந்தர் பாடுவதில் வியப்பில்லை. ஞானசம்பந்தரும் நிறையப் பாடினார். இயற்கையைப் பற்றிப் பாடியதிலே ஞான சம்பந்தருக்கு இணை உண்டா? அவர் பாடிய பாட்டுள்ளே இரண்டொரு அகத்துறைப்பாடல், இரண்டொரு இயற்கைப் பாடல் சொல்லிவிட்டு நான் முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

ஞானசம்பந்தப்பெருமான் ஒரு பாடலிலே சொன்னார். அகத்துறைப்பாட்டு இது. கரும் புருவைப் பார்த்துக் கேட்கிறார் ஞானசம்பந்தர். ஏ புருக்களே, உங்களுக்கு வணக்கம் என்றார். புருக்களைக் கும்பிட்டார். ஏன்? காரியம் ஆவதற்குக் கும்பிட வேண்டும் எல்லாரையும். முத்தொள்ளாயிர ஆசிரியர் "ஏ நாரையே, உறந்தை என்று சொல்லும் உறையூருக்குப் போய், அங்கிருக்கின்ற மன்னவனுக்கு என் செய்தியைச் சொல்லுவாயானால், உன் பாதத்தைப் பிடித்து வணங்குவேன்" என்றார். இங்கேஞானசம்பந்தப்பெருமான், "பவளக்கால் கபோதகங்காள், பாராரே எனையொரு கால்; தொழுகின்றேன்." ஏ புருக்களே உங்களுக்கு வணக்கம், "தேராரும் நெடுவீதித் திருத் தோணிபுரத்துறையும் நீராரும் சடையர்க்கு என்னிலைமை நிகழ்த்தீரே" தேரோடுகின்ற நீண்ட வீதியுடைய திருத்தோணிபுரம் என்றார். இந்தத் தேரோடும் நெடுவீதியை எத்தனை பேர் கையாண்டிருக்கிறார்கள் தெரியுமா? யார் யார் கையாண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் பின்னாலே பேசுகின்றவர்களெல்லாம்பேசட்டும். "தேராரும் நெடுவீதித் திருத்தோணிபுரத் துறையும்" என்றார் இங்கே ஞானசம்பந்தர். சேக்கிழார் சுவாமிகள்சொல்லுவார், "தேராரும் நெடுவீதித் திருவாரூர் வாழ்வாருக்கு" என்று. திருமங்கையாழ்வார். "தேராரும் நெடுவீதித் திருவாலிநகராகும்" என்றார்.

இயற்கையைப் பற்றி ஞானசம்பந்தர் எவ்வளவோ பாடினார். திருமுல்லை வாயில் என்று இரண்டு தலங்கள் இருக்கின்றன. வட திருமுல்லைவாயில், தென்திருமுல்லைவாயில் என்று. வடதிருமுல்லைவாயில் சென்னைக்குப் பக்கத்திலே இருக்கின்றது. தென்திருமுல்லை. வாயில் சீர்காழிக்குப் பக்கத்திலே இருக்கிறது. இந்தத் தென்திருமுல்லைவாயிலைப் பற்றி அற்புதமான பாட்டுப் பாடினார். இயற்கைப் பாட்டு. "..ஊனேறு வேலின் உருவேறு கண்ணி". அம்பிகையினுடைய கண் எத்தகையது? அது வேலாயுதம் போன்றது. வேலுக்கு என்ன சிறப்பு? வெறும் துருப்பிடித்த வேலல்ல. ஊனிலேபாய்கின்ற வேல், ஊனில் பாய்ந்த வேல் போன்ற கண்ணை உடையவளாம் அம்பிகை. அந்த அம்பிகையினுடைய கண்ணொளியினால்தாக்கப் பட்டவராம் கடவுள். "ஒளியேறு கொண்ட ஒருவன்"."ஏறது ஏறி அழகு ஏறும் நீறன் அரவேறு பூணும் அரன் ஊர்" அவனது ஊர் எது? இதற்கு விடை பின்னால் வரும். இப்படிப் பாடல் ஞான சம்பந்தர் பாடுவார். அப்பர் சுவாமிகளும் பாடுவார். வைணவத்திலே திருமங்கையாழ்வார் ஏராளமாய்ப் பாடியிருக்கிறார். அவனுடைய ஊர் எது? இதற்கு விடை வருகிறது. "மானேறு கொல்லை மயிலேறி வந்து, குயிலேறு சோலை மருவித் தேனேறு மாவின்வளம் ஏறி ஆடு திரு முல்லை வாயில்–இதுவே" என்றார். நூறு தரம் படிக்கலாம் இந்தப் பாட்டை. அவ்வளவு இயற்கை நயம் வாய்ந்தது இந்தப் பாட்டு. திருவீழிமிழலையைப் பற்றி, திருஐயாற்றைப் பற்றிப் பாடிய பாக்கள் எல்லாம் மிக மிக அருமை

வாய்ந்தவை. திருவீழிமிழலையைப் பற்றிப் பாடுகின்றார். அற்புதமான பாட்டு. "எழுந்து உலகை நலிந்து உழலும் அவுணர்கள் தம் புரம் மூன்றும் எழிற் கண்ணாடி, உழுந்துருளும் அளவையினில் எரிகொள வெஞ்சிலை வளைத்தோன் உறையும் கோயில்". முப்புரம் என்ன செய்யுமாம், எழுந்து வருமாம்; உலகத்தை அழிக்குமாம். அம் முப்புரங்களை நெற்றிக் கண்ணைத் திறந்து எரித்தான் கடவுள். எவ்வளவு விரைவில் அவற்றை அழித்தான் தெரியுமா? "உழுந்து உருளும் அளவையினில்" உழுந்து உருள எவ்வளவு நேரம் ஆகுமோ அவ்வளவில் அழித்திட்டான் முப்புரத்தை. வெண்சிலை வளைத்தோன் உறையும் கோயில் எது? பின்னால் வருகின்றது விடை. "கொழுந் தரளம் நகை காட்டக் கோகனதம் முகங்காட்ட, குதித்து நீர்மேல் விழுந்த கயல் விழி காட்ட, விற்பவளம் வாய் காட்டும்மிழலையாமே"

இது மட்டுமா! குழந்தைகளைத் தாலாட்டினார்களாம். ஒலி வான் உலகத்திற்கும் போயிற்றாம். விண்ணவர் வியப்பெய்தி விமானத்தோடும் இறங்கினராம். சேக்கிழார் சொல்லுவார் ஆனாயநாயனார் புராணத்திலே, ஆனாயர் குழலை ஊதினாராம். இந்தக் குழல் ஊதுவது கூட, இடைக்குலத்திலே பிறந்தவர்களுக்குத்தான் வரும் போலும். அங்கே வைணவத்திலே கண்ணன் ஊதினார்; ஆனாயர் ஊதினார் சைவத்திலே. ஆனாயர் குழலை இசைத்தார். அதில் என்ன வைத்துப் பாடினாராம் அவர். அருமையாய்ப் பாடுவார் சேக்கிழார். எம்பிரான் ஐந்தெழுத்தை வைத்து ஊதினாராம், ஆனாய நாயனார். நீங்கள் அறுபத்து மூவர் சிலைகளைப் பார்த்தீர்களானால், குழல் வைத்திருப்பார் கையிலே, அவர் தான் ஆனாயர். அந்த ஓசை எங்கே போயிற்று, தேவலோகத்துக்கு. அந்த ஓசை போன போது, தேவலோகத்துப் பெண்கள் எல்லாம் கிளிகளுக்குப் பால் அமுது கொடுத்துக் கொண்டிருந்தார்களாம். எங்கே, கற்பக மரத்துக்குக் கீழே உட்கார்ந்து. இந்த ஓசை அங்கே போய்க்காதிலே விழுந்தஉடனே பறந்து ஓடி வருகிறார்கள். கீழே விமானம் தயாராயிருக்கிறது; இங்கே பெரிய செல்வர்கள் வீட்டுக்கு முன்னாலே மோட்டார் கார் தயாராய் நிற்பது போல. உடனே விமானத்தில் ஏறினார்கள் அந்த தேவலோகத்துப் பெண்கள் எல்லாம். விரைந்து வந்தார்கள். எப்படி வந்தார்கள்? "சுரமகளிர்கற்பகப் பூஞ்சோலைகளின் மருங்கிருந்துதூட்டும் கனிவாய் மென் கிள்ளையுடன்" என்றார். அப்படியே அந்தச் சோறு பால்கிளி எல்லாவற்றையும் தூக்கி வந்து விட்டார்கள். குழலசைய விமானங்கள் விரைந் தேகிச் செவிமடுத்துப் பருகுவார். அந்த ஓசை என்ன செய்ததாம்—ஆனாயர் குழல் ஓசை, வையந் தன்னையும் நிறைத்து, வானம் தன் வயமாக்கி என்றார். தேவலோகத்தைத் தன் வயப்படுத்தியதாம். அதோடு நின்றதா? வையம் தன்னையும் நிறைத்து வானம் தன் வயமாக்கி, பிறகு இந்த ஓசை என்ன செய்தது, "பொய்யன்புக்கு எட்டாத பொற் பொதுவில் நடம்புரியும் ஐயன்றன்திருச் செவியின் அருகணையப் பெருகியதால்" என்று சேக்கிழார் அழகாகப் பாடியுள்ளார்.

இத்தகைய இலக்கிய நலம் சிறந்த பற்பல அழகிய பாடல்கள் எத்தனையோ ஞானசம்பந்தர் அருளிய முதல் மூன்று திருமுறைகளில் உள்ளன. அவற்றையெல்லாம் ஆராயும் அரிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த துறைசை ஆதீனத்துக் குரு மகா சந்நிதானம் அவர்களுக்கு வணக்கம். இந்தத் காரியத்தைச் சிறப்பாக அமைய ஏற்பாடு செய்த அன்பர் அருணாசலனார் அவர்களுக்கும், அவருக்குத் துணை செய்கிற அனைவருக்கும், என்னுடைய நன்றியையும் மனங்கலந்த அன்பையும் தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன்.

JL
Q2m 211,N59 TK
N72 · 14 · 13

நலம் அந்தம் இல்லதோர் நாடு

டாக்டர் திரு. ந. சுப்பு ரெட்டியார் M.A., Ph.D.,
தமிழ்ப் பேராசிரியர்
திருவேங்கடவன் பல்கலைக்கழகம், திருப்பதி

ஆழ்வார்கள் கூறும் வீடுபேறு

வீடு ஒரு தனியுலகம் என்பது வைணவ சமயக் கோட்பாடு. இவ்வுலகம் துன்பங்கட்கு அந்தமில்லாமல் இருப்பதுபோல வீட்டுலகம் இன்பங்கட்கு அஃந்தமில்லாதிருப்பது. நம்மாழ்வார் இதனை

''புலனைந்து மேயும்
பொறியைந்தும் நீங்கி
நலமந்தம் இல்லதோர்
நாடு புகுவீர்''

என்று குறிப்பிட்டு (திருவாய்மொழி: 28:4) அவ்வுலகத்திற்குச் செல்லுமாறு ஆற்றுப் படுத்துகின்றார், இங்கு 'நலம் அந்தம் இல்லதோர் நாடு' என்பதில், 'அந்தம் இல்லது' என்பதை நலம் நாடு என்ற இரண்டிற்கும் சேர்த்துப் பொருள் கொள்ளுதல் வேண்டும், அந்தம் இல்லதோர் நாடு-அழிவில்லாத ஒப்பற்றதோர் நாடு. நலம் அந்தம் இல்லதோர் நாடு-அழிவில்லாத இன்பத்தையுடைய நாடு. நாடும் அழிவில்லாதது: அதனை அடைந்தார்க்கு உண்டாகும் இன்பமும் அழிவில்லாதது என்பது அறிய தக்கது. 'அந்தமில் இன்பத்து அழிவில் வீடு, என்பர் பரிமேலழகர் (குறள்–பரி. உரை. அறத்துப்பால் உரைப்பாயிரம்). இதனையே ஆழ்வாரும் ''வைகுந்தம்'' (திருவாய் 2. 1:11, 25-11 4-4-11 4-7-11) 'இலங்குவான்' (திருவாய் 3–8 11) ''பொன் உலகு'' (திருவாய் 6-7-11) என்று பல படியாகக் குறிப்பிடுகிறார்.

இந்த உடலை விட்டுப் பிரியும் ஆன்மா கதிரவன் மண்டலத்தைப் பிளந்து கொண்டு அவ்வழியே சென்று பரம பதம் என்னும் நாட்டை அடைவதாகவும், அங்கே ஆராவமுதத்தை அநுபவிப்பதாகவும், அவ்விடத்தை விட்டு ஒரு நாளும் திரும்பி வருவதில்லையாகவும், அதுவே வைகுந்தம் என்றும் திருமங்கையாழ்வார் குறிப்பிடுவர்.

''தேர்ஆர் நிறைகதிரோன்
மண்டலத்தைக் கீண்டுபுக்கு
ஆரா அமுதம்
அங்கு எய்தி அதினின்றும்
வாராது ஒழிவது ஒன்று உண்டே''

என்ற அவரது வாக்கால் (சிறிய திருமடல்-கண்ணி 7-8) இஃது அறியப்பெறும். மேலும் அவர்

''மன்னும் கடுங்கதிரோன்
மண்டலத்தின் நன்னடுவுள்
அன்னதோர் இல்லியின்
ஊடுபோய் வீடென்னும்
தொல்நெறிக்கண் சென்றாரைச்
சொல்லுமின்கள்''

என்று பெரிய திருமடலிலும் வற்புறுத்துவர். (பெரிய திருமடல்-கண்ணி 16-17)- திருமழிசையாழ்வாரும்.

''சண்ட மண்ட லத்தினூடு
சென்று வீடு பெற்றுமேல்
கண்டு வீடு இல்லாத காதல்
இன்பம் நாளும் எய்துவீர்''

என்று கூறுவர் (திருச்சந்த விருத்தம் 67),

148702
சென்னை-600 008.

''இருள் அகற்றும் எறிகதிரோன்
மண்டலத்தூடு''
ஏற்றிவைத்து ஏணி வாங்கி
அருள்கொடுத்திட்டு அடியவரை
ஆட்கொள்வான்,

என்று இவ்வீட்டுலகைக் காட்டுவர் பெரியாழ்வார் (பெரியாழ்வார் திருமொழி --9-3) வீட்டுலகைப் பற்றிய ஆழ்வார்களின் கருத்துக்கள் யாவும் உபநிடதக் கருத்துக்களுடன் ஒத்துள்ளமை கருதத்தக்கது. ஆன்மா வீட்டுலகம் செல்லும் நெறியை வைணவ சமயம் ''அர்ச்சிராதி மார்க்கம்'' என்று குறிப்பிடும்.

வேதாந்த தேசிகரின் விளக்கம்:

ஆழ்வார் பிரபந்தங்களிலும், உபநிடதங்களிலும் ஆழங்கால் பட்ட வேதாந்த தேசிகர் இதனைத் வெளிவாக விளக்குவர். மோட்சத்தை அடையும் ஆன்மா இவ்வுடலை விட்டு வெளியேறிச் சூக்கும உடலுடன் செல்லுங்கால் அக்கினி, சுக்கில பட்ச தேவதை, உத்தராயண தேவதை, ஆண்டு தேவதை, வாயு தேவதை, கதிரவன், திங்கள், மின்னலின் தேவதை, வருணன், இந்திரன், பிரசாபதி, என்ற தேவர்கள் வழிகாட்டி நடத்திச் செல்லுங்கால் தான் மேற்கொண்ட வினையின் பலனுகவும் கடைப்பிடித்த வழியின் மகிமையாலும் சில இன்பங்களைப் பெற்று இறுதியில் வைகுந்தத்தை அடையும். ஆங்கு ஆன்மா இடைவிடாது இறையனுபவத்தைப் பெற்று அதிலேயே மண்டிக் கிடக்கும். (தேசிக பிரபந்தம்-67, 68) திருநாட்டிற்குச் செல்லும் ஆன்மாவுக்கு நடைபெறும் பணிவிடைகளைச் ''சூழ் விசும்பு'' என்னும் திருவாய் மொழியில் (திருவாய் 10-9) பரக்கப் பேசுவது காண்க, இங்ஙனம் ஆழ்வார்கள் குறிப்பிடும் திருநாட்டிற்குச் செல்லும் வழிப்படிகளைத் தூப்புல் புலவர் வகுத்துக் காட்டுவர். அதனை ஈண்டுக் காண்போம்,

மடைப்பள்ளி வந்த மணம்:

இந்த உலகத்தில் மிக உயரத்திலமைந்த இடத்தை அடைவதற்குப் படிகளை அமைத்து அவற்றின் வழியாக ஏறிச் செல்வதை நாம் அறிவோம். அறிவியல் வளர்ந்துள்ள இக்காலத்தில் மின்விசையால் இயங்கும் சாதனத்தின் மூலம் விரைவாக மேலேறுகின்றோம். அங்ஙனமே பரமபதம் என்னும் உயர் உலகினை அடைவதற்குரிய ஒன்பது நிலைகளைப் படிகளாகக் கற்பித்து விளக்குவர் வேதாந்த தேசிகர்: அவர் கூறும் படிகள் (1) தத்துவங்கள் முதலியவற்றை வகுத்து அறிதல்: (2) மனம் தளர்தல். (3) உலக இன்பத்தில் ஆசை அறுதல்: (4) தம் தீவினைகளின் மிகுதியால் இனி வரக்கிடக்கும் நரக அநுபவம் முதலிய இடர்கட்கு அஞ்சுதல் (5) எம்பெருமான் வீடுபேற்றினை அருள்வதற்குக் காரணமான வழியைக் கடைப்பிடித்தல்: (6) இவ்வுடலினின்றும் ஆன்மா வெளியேறுதல்; (7) அர்ச்சிராதி மார்க்கத்திற் செல்லுதல்; (8) வைகுந்தம் என்னும் திவ்விய உலகினை அடைதல்; (9) அங்கு எல்லாம் வல்ல இறைவனைக் கண்ணாரக் கண்டுகளித்து அனுபவித்து அந்தப் பேரின்பத்திலேயே மூழ்கிக் கிடத்தல். இந்தத் தத்துவங்கள் யாவும் இடைப் பிள்ளையாகி வந்து எம்பெருமானால் உரைக்கப் பெற்றவையே யாகும். இவற்றின் கருத்தை இராமானுசர் தமது மாபாடியத்தில் தெளிவாக்கியுள்ளார். இவற்றையெல்லாம் இராமானுசருடைய திருமடைப் பள்ளியில் அந்தரங்கத் தொண்டு செய்து எல்லாப் பொருள்களையும் ஐயம் திரிபறப் பெற்றவர் கிடாம்பியாச்சான். அவர் வழியாக வந்தது இவண் கூறப்பெறும் சம்பிரதாய வழி எனவே, ''மடைப்பள்ளி வந்த மணம் எங்கள் வார்த்தையுள் மன்னியதே'' என்று (தே. பி 133) உள்ளம் குழைந்து பணிவன்புடன் உரைப்பர் தூப்புல் புலவர். எம்பெருமானுரின் திருமடைப் பள்ளியில் அடிமைத்தொழில் செய்தமையால் கிடாம்பியாச்சான் ''மடைப்பள்ளியாச்சான்'' என்ற திருநாமத்தாலும் வழங்கப் பெறுவர்.

வானேறும் வழிப்படிகள் :

இனி, பதம் செல்வதற்கு தேசிகர் கூறும் வழிப்படிகளை ஒவ்வொன்றுய்க் காண்போம். முதற்படி விவேகம் என்பது. தத்துவங்களைப் பற்றி விபரீத ஞானங்களைப் பெற்றுக் கொடிய வினைகளை மேன்மேலும் செய்து அஞ்ஞானமாகிய இருளில் மூழ்கிப் புலன்களால் துய்க்கப் பெறும் இன்பம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு இவ்வுலக வாழ்வாம் பெருஞ் சேற்றில் மூழ்கிக் கிடக்கும் சீவான்மா வேதாந்தங்களின் உபதேசத்தால் விவேகத்தைப் பெறுகின்றது. இதனுல் சீவான்மா சித்து அசித்து ஈசுவரன் என்ற மூன்று தத்துவங்களின் வேற்றுமைகளைப்

பற்றிய தெளிவான அறிவைப் பெறுகின்றது; மேலும், சீவான்மா பரமான்மா தொடர்பை அடைகின்றது; நான் அடிமை என்பதையும். இறைவன் ஆண்டான் என்பதையும், இறைவனுடைய இன்பத்திற்காகவே தான் நிலை பெற்றிருப்பதையும் உணர்கின்றது. இதனைத் தேசிகர்.

''அருவுருவாம் எவையனைத்தும் அறிவா ரேனும்
அருங்கலைகள் கற்றுரைக்க வல்லா ரேனும்
தருமவழி அழியாமல் காப்பா ரேனும்
தனிமறையின் தாற்பரியம் தருவா ரேனும்
இருவினையின் ஒழுக்கத்தால் ஏவல் ஓராது
இங்கே நாம் சிறையிருந்த ஈனம் தீர்க்கும்
திருமகளார் பிரியாத தேவன் திண்ணம்
தேருதார் திண்படியில் ஏரு தாரே''

என்று கூறுவர் (தே. பி. 135). எம்பெருமானுகிய இலக்குமி நாராயணனது சொரூபம், சுபாவம் முதலியவற்றை அறியாவிடின் வீட்டுலகம் செல்லும் படியில் ஏற மூடியாது.

இரண்டாவது படி சிலர்கள் இதுகாறும் தம் வாணுளை வீணுளாகக் கழித்தமைக்கு வருந்துதலாகும். எம்பெருமான் சாத்திரங்கள் வாயிலாக இட்ட கட்டளையை அஞ்ஞானத்தால் மீறி நடப்பவர்கள் கொடிய நரகத்தை ஆராய்ந்துயிர்த்து இதுகாறும் தாமும் இவ்வுலக வாழ்க்கையில் உழன்றமையை நினைத்து வெறுத்துக் கழிந்த நிலைமைக்கு வெட்கமுறுவர். பின் வேதங்களில் கூறியுள்ள வழியைக் கடைப்பிடிக்க விழைவர். எடுத்துக் காட்டாகத் திருமங்கையாழ்வார்,

''மறந்தேன் உன்னை முன்னம்; மறந்த
மதிஇல் மனத்தால்
இறந்தேன் எத்தனையும்; அதனுல்
இடும்பைக் குழியில்
இறந்தே எய்த்து ஒழிந்தேன்''

என்று (பெரிய திருமொழி 6-2-2) தம் நிலைக்கு வருந்திக் கூறுவதைக் காண்க. இவ்வுலக இன்பத்தின் சிறுமையைத் தேசிகர்,

''வான்பட்ட மன்னிருளில் மங்கும் ஆறும்
மறித்துஒருகால் எனையூழி சென்றுல் அன்றுஓர்
ஊன்பட்ட உடல்ஆழி வினையொழுக்கில்
ஒரு கரையும் காணுதே ஒழுகும் ஆறும்
தேன்பட்ட இடம் போலத் தித்திக் கின்ற
சிறுபயனே உறுபயன்என்று அருந்தும் ஆறும்
தான்பட்ட படியிங்ஙேர் தானே கண்டு
தளர்ந்திடுமேல் வளர்ந்திடுமோ தக்க ஆறே''

(வான்-மூலப்பிரகிருதி;
மன் இருள்-வலியதமஸ்;
ஊழி-யுகம்;
அன்று-படைப்புக்காலம்;
வினை ஆழி ஒழுக்கு-கர்மங்களாகிய கடல் வெள்ளம்;
உறுபயன்-தக்கபயன்;
அருந்தும்-அநுபவிக்கும்;
ஆறு-உபாயம், வழி)

என்று குறிப்பிடுவர், (தே. பி. 137). தன் நிலையைத் தானே ஆராய்ந்து பார்த்து மனம் தளர்ந்தால், தக்க வழியைக் கடைப்பிடிக்க நேரிடும்.

உலக வாழ்க்கையிலிள்ள ஆசையை அறுத்தல் மூன்ருவது படியாகும், இந்தக் கரும பூமியில் மிகச்சிறந்தவராக நாம் மதிக்கும் பலர் துய்க்கும் பலன் முழுவதும் இன்பமாகவே இருப்பதில்லை; அதன் நடுவில் துன்பமும் கலந்தே பெருகுகின்றது. இதனை ஆராய்ந்து பார்ப்போருக்கு இந்த உலக வாழ்வில் வெறுப்புத்தட்டும். திருமங்கையாழ்வார் ஒரு தடவைக்கு ஒன்பது தடவையாக, ''வேண்டேன் மனைவாழ்க்கையை விண்ணகர் மேயவனே'' என்று (பெரியதிருமொழி. (6-1-1 முதல் 9 முடிய ஒப்பிடுக, ஷெ 11-8) மனம் வெறுத்துக் கூறுவதைக் காண்க.

''தந்திரங்கள் அளவிலராய்த் தனத்தான் மிக்க
தார்வேந்தர் தொழுவையம் ஆண்டார் மாண்டார்
சந்திரனும் சூரியனும் வீயும் காலம்
தாரகையில் வடமும் அற்றுத் தனிவான் ஆளும்
இந்திரனும் ஏறுஉயர்த்த ஈசன்தானும்
ஈரிரண்டு முகத்தானும் இல்லா அந்நாள்
நம்திருமால் நிலைகண்டார் நாகம் எல்லாம்
நரகு என்று நற்பதமே நாடு வாரே''.

(தந்திரங்கள்-சேனைகள்;
தார்-மாலை;
தாரகை-நட்சத்திரம்;
வடம்-வரிசை;
ஏறு-இடபம்;
ஈரிரண்டுமுகத்தான்-நான்முகன்;
நாகம்-உலகம்;
நல்பதம்-வைகுந்தம்)

என்று (தே. பி. 139) தேசிகர் சுவர்க்கமும் நரகத்தை ஒத்தது என்று கூறுவதைக் காண்க. மகாப் பிரளயத்திற்குப் பிறகு அழியாமல் நிற்பது

பரமபதம் ஒன்றேயாகும். அறிஞர்கள் இந்த உண்மையை உணர்ந்து இவ்வுலக இன்பத்தை வெறுத்து ஒதுக்குவர்; அதன்மேலுள்ள ஆசையை வேருடன் களைய முற்படுவர்.

சீவர்கள் வினைப்பயனுக்கு அஞ்சுதல் நான்காவது படியாகும். இவ்வுலகப்பற்றினின்று விடு படுவதற்குச் சாதனமான தர்மங்கள் 'நிவ்ருத்தி தர்மங்கள்' (நீக்கத் தக்கவைகள்) எனப்படும். இவற்றை மேற்கொள்வோர் முமுட்சுகளுடன் கலந்து பரிமாறித் தீயவழி களினின்றும் விலகுவர். இங்ஙனம் விலகி நல் வழியில் ஈடுபடுவதைத் தேகசிர்,

''வந்தனபோல் வருவனவும் அனந்தம் ஆகி
மாளாத துயர்தருவல் வினைநெ ருப்புக்கு
இந்தனமாய எண்ணிறந்த காலம் எல்லாம்
இன்னமும்இப் பவக்குழிக்கே இழியா வண்ணம்
வெந்ததொரு குழவியைநல் குமரன் ஆக்கும்
வெறித்துளவ வித்தகனுர்விதியே கொண்டார்
பந்தனமாம் அவையனைத்தும் மாறுகைக்குப்
பழமறையின் பரமநெறி பயிலுவாரே''

(அனந்தம்-அளவிறந்தவை;
இந்தனம்-விறகு,
பவம்-சம்சாரம்;
இழியா-விழுந்து துன்புறாமல்;
வெறி-மனம்,
விதி-உபாயம்; ((பத்தி, பிரபத்தி),
பந்தனம்-பிணிக்கும்;
பாறுகை-அழிதல்;
பயிலுவார்-ஈடுபடுவார்)

என்று குறிப்பிடுவர் (தே. பி. 141)*. வினை களாகிய நெருப்பு சேதனர்களை விறகாகக் கொண்டு சம்சாரமாகிய படுகுழியில் எரித்துக் கொண்டிருப்பதைக் காணும் கூர்த்த மதியினர் இந்நிலைக்கு அஞ்சிப் பக்தி. பிரபத்தி, ஆகிய வற்றுள் ஒன்றில் ஈடுபடுவர் என்பதை ஈண்டுக் குறிப்பிட்டவாறு காண்க.

கருக்குழியில்வதிதல் முதலிய சம்சாரத் துக் கங்களை ஒழிக்கக் கருதும் அடியார்கள் பகவதநுபவம் வளர்ந்து வரக் கூடிய பக்தி யோகத்தைக் கடைப் பிடிப்பர். அதற்கு ஆற்றல் அற்றவர்கள் எம்பெருமானுடைய திருவடிகளில் சரணுகதியை மேற்கொள்வர். இங்ஙனம் உபாயத்தைச் செய்து முடித்த பின்னர் எம் பெருமான் தமக்கு நன்மைகளைச் செய்வான் என்று நம்பி அவன் கருணையை நோக்கி நிற்பது ஐந்தாவது படியாகும். பிரபத்தியால் சகல பாபங்களும் நீங்குவதைத் தேசிகர்,

''முன்செய்த வினைத்திரளின்முளைத்தது அன்றி
முற்றுள்ள முதல் அரிந்து முளைத்த கூற்றில்
தன்செய்யத் திருவருளால் இசைவு பார்த்துத்
தழல் சேர்ந்த தூலமெனத் தானே தீர்த்துப்
பின்செய்த வினையில்நினைவு ஒன்ருது ஒன்றும்
பிழைபொறுத்து வேறுளது விரகால்மாற்றும்
என்செய்ய தாமரைக்கண் பெருமான் எண்ணம்
எண்ணுதார் எட்டுஇரண்டும் எண்ணுதாரே''

(வினைத்திரள்-பாபக்கூட்டம்;
முளைத்தது-பலன்கொடுக்கத்
தொடங்கியது,
முளைத்தகூறு-பலன்தொடங்கிய பகுதி.
(திருவருள்-கருணை.
அசைவு:அங்கீகாரம்;
தழல்-நெருப்பு;
தூலம்-பஞ்சு,
பின்செய்த-பிரபத்திக்குப் பின்செய்த
நினைவு ஒன்ருவது-தெரியாமல்;
பிழை-பாபம்;
எட்டு-திருமந்திரம்;
இரண்டு-துவயம், சரமசுலோகம்)

என்று கூறுவர் (தே. பி. 143). நம்முடைய வினைகள் சஞ்சிதம், பிராரப்தம் என்று இரு விகைப்படும். பின் ஒருகாலத்தில் பலன் கொடுப்பதற்காகத் தனியாகக் குவிந்து கிடப்பது சஞ்சிதம் என்று வழங்கப்பெறும், பலன் கொடுக்கத் தொடங்கிய பகுதி பிராரப்தம் என்று பேசப்பெறும். பக்தியோகம் சஞ்சித கருமங்களை மட்டிலும் போக்கும். பிர பத்தி சஞ்சிதத்தைப் போக்குவதுடன், பிராரப் தத்தில் இவ்வுடல் உள்ளவரையில் பலனை அநு பவிக்க வேண்டிய கருமங்களைத் தவிர எஞ்சி யுள்ளவற்றையும் அனல் பஞ்சை எரிப்பது போல் நீக்குகின்றது; பிரபத்திக்குப் பிறகு அறி

* பாரதப் போரில் துரோணரின் மகன் அசுவத்தாமன் ஏவிய அபாண்டவாத் திரத்தால் உத்திரையின் கருப்பத்தில் வெந்து கருகிய குழந்தையைக் கண்ணன் பரீட்சித்து என்னும் அழகிய அரச குமாரனுக்கிய வரலாறு மூன்ரும் அடியில் குறிக்கப் பெற்றுள்ளது.

யாமல் செய்யும் பாபங்களை இவனிடம் சேராத படி நீக்கி விடுகின்றது; மனப்பூர்வமாகச் செய்ய நேர்ந்த பாபங்களையும் பிராயச்சித்தாதிகளைக் கொண்டு ஒழித்து விடுகின்றது. இங்ஙனம் திருவருள் புரியும் எம்பெருமானின் குளிர்ந்த திருவுள்ளப் போக்கை அறியாதவர்கள் மூன்று மந்திரங்களையும் ஆராயாதவர்களாவர்.

உறையினுள் கிடக்கும் வாள் ஆற்றலற்றுத் தனது செயலை நிறைவேற்ற முடியாதிருப்பது போல் சீவான்மாவும் வினையினால் வந்த இந்த உடலினுள் இருக்கும் வரையிலும் தனக்கு இயல்பாகவுள்ள ஞானம் சுரக்கப் பெற்று தனக்குரிய இறையடிமையைச் செய்ய ஆற்றலின்றிக் கிடக்கும். உபாயத்தைக் கடைப்பிடித்த சீவான்மாவுக்கு எம்பெருமான் வீடுபேறு அளிக்கத் திருவுள்ளங் கொண்டு இவ்வுடலாகிய சிறையினின்றும் அவ்வான்மாவை வெளியேற்றுகின்றான். (தே. பி. 144).

''சரணமாகும் தனது தாள் அடைந்தார்க்கு எலாம்
மரணமானால் வைகுந்தம்கொடுக்கும் பிரான்''

என்று நம்மாழ்வார் கூறுவது காண்க (திருவாய் 9-10-5) மரணம் ஏற்படுங்கால் சீவனுடைய செவி, வாய், கண், மூக்கு, உடல் ஆகிய ஞானேந்திரியங்களையும், வாய், கை, கால், பாயு, உபத்தம் ஆகிய கர்மேந்திரியங்களையும் மனத்துடன் சேர்க்கின்றான். பிறகு அந்த மனத்தைப் பிராணவாயுவில் ஒன்று கூட்டுகின்றான். அதன்பின்னர் அந்தப் பிராண வாயுவை சீவான்மாவிடத்துச் சேர்க்கின்றான். இந்நிலையைப் பெற்ற சீவான்மாவை ஐந்து பூதங்களுடன் கூட்டுகின்றான். இதன்பிறகு இதனால் சீவான்மாவுக்கு உண்டான களைப்பு நீங்குமாறு அதனைத் தன்னோடு அணைத்துக் கொள்கின்றான். பிறகு பதினொரு துவாரம் உள்ளதாய் (கண் 2, காது 2, மூக்கு 2, வாய் 1, மலவாய் 1, நீர்வாய் 1, கொப்பூழ் 1, உச்சித் துவாரம் (பிரம்மரந்திரம் 1). இதுகாறும் சீவனுக்குத் துன்பத்தைத் 'தந்து நின்ற உடலாகியசிறையினின்றும் அர்ச்சிராதி மார்க்கத்திற்கு முன் வாயிலாகிய பிரம்மரந்திரத்தின் வழியாய்ச் (தலையின் உச்சியிலுள்ளது) சீவான்மாவை வெளியேற்றுகிறான். (தே. பி. 145). இங்ஙனம் சீவான்மா உடலின்றும் வெளியேறுவதே ஆறுவதுபடியாகும்.

அர்ச்சிராதி மார்க்கத்தில் சீவான்மா செல்லுதல் ஏழாவது படியாகும். சீவனுடைய உடல் ஐந்து பூதங்களாலாகியது. அவனது முதுகின் மேற்புறத்தில் தூண் போன்ற மூன்று எலும்புகள் ஒன்று கூடி நிற்கின்றன. அவற்றிற்கு ''திரிஸ்தூணம்'' எனப் பெயர் வழங்கும். மரணகாலத்தில் ஈசுவரன் அவற்றைக் கடைந்து அங்கிருந்து ஐந்து பூதங்களின் சூக்குமமான கூறினை எடுத்து அதில் சீவனைச் சேர்க்கின்றான். இங்ஙனம் கடைதலே ''திரிஸ்தூண க்ஷோபம்'' எனப்படும். இவ்வாறு கடையுங்கால் சீவனுக்கு உண்டாகும் வேதனையைப் போக்குவதற்காக அந்தச் சீவனை ஈசுவரன் தன்மீது அணைத்துக் கொள்ளுகின்றான். அதன்பிறகு வீடுபேற்றிற்கு உரியவனாக சீவன் தூல உடலினின்றும் புறப்பட்டதும் இவனை அங்கியங் கடவுள் முதலான தேவதைகள் எதிர்சென்று வரவேற்று வழி நடத்திச் சென்று தத்தம் எல்லைவரையில் கொண்டு போய் விடுவர். இங்ஙனம் பிரகிருதி மண்டலத்தைக் கடந்து சென்றவர்கள் பின்னர் சம்சாரமாகிய நரகத்தில் துன்புறார். வழியில் தேவதைகளால் செய்யப்பெறும் பணிவிடைகளால் சம்சாரத்தில் அநுபவித்த துன்பங்கள் நீங்கி மகிழ்ச்சி அடைகின்றான் சீவன். ''வானேறும் வழி கண்டோம் மகிழ்ந்திட்டோமே'' என்று குறிப்பர் தூப்புல் ஆசிரியர் (தே. பி. 147). எட்டாவது படி சீவர்கள் வைகுந்தத்தை அடைதல் ஆகும். சீவர்கள் அர்ச்சிராதி கதியால் சென்று விரஜை என்ற நதியைக் கடந்து வைகுந்தத்தை அடைவர்.

''பண்டையிரு வினையாற்றில் படித்து பாரம்
காணாதே ஒழுகிய நாம் பாக்கியத்தால்
வண்டயரும் மலர் மாதர் மின்னாய் மன்ன
வையசத்தி மணிவில்லாய் விளங்க வான்சேர்
கொண்டல் அருள் மழை பொழியவந்தது ஒப்பாம்
குளிர்ந்து தெளிந்து அமுதாயவிரசையாற்றைக்
கண்டணுகிக் கருத்தாலேகடந்து மீளாக்
கரைக்கண்டோர்''

என்று இதனைக் குறிப்பிடுவர் (தே. பி. 149). இப்பாசுரத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானை வானத்திலுள்ள முகிலாகவும் பிராட்டியை மின்னலாகவும் பன்னிரு மலர்களால் ஆன வைசயந்தி என்னும் வனமாலையைப் பன்னிறத்துடன் தோன்றும் வான வில்லாகவும், எம்பெருமானது கருணை வெள்ளத்தை மழை நீர்த்தாரையாகவும், விரசை நதியை அதனால் பெருகிய அமுதமாகிய ஆறாகவும் வருணிக்கப் பெற்றுள்ள கற்பனை நயம் அநுபவிக்கத்தக்கது.

வைகுந்தத்தில் சீவர்கள் எம்பெருமானைக் கண்ணாரக்கண்டு களித்து அநுபவித்து அந்த ஆனந்த வெள்ளத்தில் மூழ்கிக் கிடத்தல் ஒன்பதாவதுபடியாகும். அந்தப் பேரின்பம் தேனும் ''பாலும் கன்னலும் அமுதும் ஆகித் தித்திக்கும்'' (திருவாய் 8-8-4) அங்கு.

''கண்கள் சிவந்து பெரியவாய்
வாயும் சிவந்து கனிந்து உள்ளே
வெண்பல் இலகு சுடர் இலகு
விலகு மகர குண்டலத்தன்.
கொண்டல் வண்ணன், சுடர்முடியன்,
நான்கு தோளன் குனிசாரங்கன்
ஒண்சங்(கு) கதைவாள் ஆழியான்''

என்ற திவ்விய மங்கள விக்கிரகத்துடன் (திருவாய். 8:8:1) ''அகலகில்லேன் இறையும்'' (திருவாய். 6:10:10) என்றிருக்கும் பெரிய பிராட்டி, பூமிப் பிராட்டி, நீளாதேவி இவர்களுடன் எழுந்தருளியிருக்கும் வைகுந்த நாதனை நித்தியர் முக்தர்களுடன் சேர்ந்து சாமகானத்தையும் ஆழ்வார் பாசுரங்களையும் பாடி அவனை எந்நாளும் சீவர்கள் அநுபவிப்பர். இதனை வேதாந்தம் 'பரிபூரண பிரம்மாநுபவம்' என்று குறிக்கும். இந்த நிலையை நமது அநுபவத்தால் கூறும் எந்த உவமையாலும் சரியாக விளக்கியுரைத்தல் இயலாது.

பரம பதத்தில் சீவன்நிலை:

முத்தி நிலையில் சீவான்மாவுக்குப் பசி. நீர் வேட்கை முதலியன இல்லை. பாவம், முதுமை, துன்பம் இறப்பு முதலியவை அதனை நெருங்கா. முக்தி அடைந்த சீவனின் நிலையை ஆறு உவமைகளால் விளக்குவர் தேசிகர் (தே. பி. 151). இராகு என்னும் பாம்பு பற்றி விட்ட பிறகு கதிரவனின் ஒளி அதிகமாகும். அழுக்கடைந்து நின்ற தரளம் தூய்மை செய்யப் பெற்ற பிறகு தன் இயல்பான ஒளியுடன் ஒளிர்கின்றது. கடலில் சென்ற கலம் திசை தப்பிச் சென்று பின்னர் கரை சேர்ந்தவுடன் அதிலுள்ள பயணிகள் அடையும் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. காட்டுத்தீயில் சிக்கித் தவித்து நிற்கும் மதகரி தெய்வீகமாய்த்தீ அணைந்தால்அதனின்று வெளியேறியவுடன் அது அடையும் மகிழ்ச்சி கூறுந்தரம் அன்று. மடலூரும் தலைவன் தலைவியர் தம் விருப்பம் நிறைவேறப் பெற்றதும் பெருமிதம் கொள்வர். ஓர் அரசன் தன் பிழையால் சிறிது காலம் ஒரு சிறையில் இருக்கப் பெற்றுப் பின்பு பிழையற்றவன் எனத் தீர்ந்து சிறை நீங்கி மீண்டும் தனது அரசுடைமையைப் பெற்றால் அவன் ஆனந்தக் கடலில் மூழ்கி நிற்பான். அங்ஙனமே. இது காறும் ஆன்மாவின் உண்மையான சொருபத்தை அறியாமல் செய்து மறைத்து வந்த பிரகிருதியின் உறவு நீங்கப் பெற்றதும் ஆன்மா வைகுந்தத்தில் எம்பெருமானுடன் கலந்து அவனுக்கு அடிமை செய்து ஆனந்தத்தை அநுபவிக்கின்றது.

''தொண்டே செய்துஎன்றும்
தொழுது வழியொழுகப்
பண்டே பரமன்
பணித்த பணிவகையே''

என்று (திருவாய் 10:4:9) செம்மாந்து நிற்கின்றது.

வண்ணக்கலியனும் வகுளச் செல்வனும்

திரு. தி. அ. அனந்தாழ்வான்
காஞ்சிபுரம்

கார்கலந்த மேனியனும் திருமாலைச் சீர் கலந்த சொல்லாற்பரவிய ஆழ்வார்களுள், வண்ணக் கலியனுக்கும் வகுளச் செல்வனுக்கும் பெரிதும் ஒற்றுமை உளதென்பர் ஆன்றோர். நங்கை மைந்தனையும் மங்கை நாடனையும், பகலவனெனப் போற்றினர் வைணவப் பெரியோர். மாறனை ''மகிழலங்கற் சுடர்'' எனவும், நாற்கவிவல்லோனை ''ஞாலநற்கதிர்'' எனவும் புகழ்ந்தமையின், இருவர்க்குமுள்ள ஒற்றுமை உணரப்படும். பகலவன் தன் கதிர்களாற் புறவிருள் நீக்குவதே போன்று, இவ்வாழ்வார்கள் தம் கவிகளால் அகவிருளை யொழிப்பவராவர். அருண்மாறனுக்கும் அருண்மாரிக்கும் அருளிச் செயலொற்றுமையும் உளதாம்.

''மாறன்பணித்த தமிழ்மறைக்கு மங்கையர்கோன்
ஆறங்கங் கூற அவதரித்தார்''

என்று பொய்யிலாத மணவாளமாமுனிகள் இதனைத் தெரிவித்தருள்வர். நம்மாழ்வாருடைய நான்கு பனுவல்களை நான்மறைகளெனவும், அடையார் சீயத்தின் அருந்தமிழ் மாலைகள் ஆறினை (அம்மறையின்) ஆறங்கங்களெனவும், இதன்கண் தெற்றென விளக்கப் பட்டது.

இனி, வகுளச்செல்வன் சுருங்கவுரைப்பதை வண்ணக்கலியன் விரித்துரைப்பதையும், அவ்வாறே விரிவினைச் சுருக்கியருளிச் செய்திருப்பதையும் காண்கின்றோம். வண்மைமிகு நாதமுனிகட்கு வகுளச்செல்வன் வண்டமிழ்மறை நல்கிய வரலாற்றையும், வண்டார்க்கலியன் தண்டமிழ்ப்பாவில் உய்த்துணவரும் வகையில் அமைத்துள்ள வரலாற்றையும் இனிக்காண்பாம்.

ஆழ்வார்கட்குப்பின் பலகாலங்கழிந்தபின் தோன்றியருளிய பெரியார் நாதமுனிகள். அங்ஙன் ஆகவும் அவர்தம் வரலாற்றைக் கலியன் ஒலிசெய்வது யாங்ஙனென்று ஐயுறுதல் இயல்பேயாம். ஆழ்வார்கள் அனைவரும் திருமாலால் மயர்வற மதிநலம் அருளப் பெற்றவராவர். எனவே எதிரது நோக்கும் மதியது வாய்க்கப்பெற்ற கொற்றவேற்கலியன், நிகழப்போவ தொன்றினை உணர்த்தினரெனலாம். அற்றேல், கலிகன்றி ஒலிசெய்த இன்பப்பாடல், இவ்வரலாற்றையுணர்த்துவதாக அமைந்துள்ளது என்றே கொள்ளலாம்.

இனி அவ்வரலாற்றினைச் சுருங்கவுரைப்போம். இடைக்காலத்தில் அருளிச் செயல் அருகியிருந்த போழ்து ''ஆராவமுதே'' என்று தொடங்கும் திருவாய் மொழியை மேனாட்டினின்றும் (திருநாராயணபுரம்) போந்த பெரியார் சிலர், இன்னிசைக்கச் செவியேற்றனர் நாதமுனிகள். ''குருகூர்ச் சடகோபன் குழலின் மலியச் சொன்ன ஓராயிரத்துளிப் பத்தும்'' என்னும் ஈற்றுப்பாசுரத்தினால், இத்தகு தீந்தமிழ்ப் பாடல்கள் ஆயிரம் உள்ளனவென்றறிந்து, அவற்றைப் பெறுவான் திருக்குருகூர் சென்றனர். ஆங்கு மதுரகவியாழ்வார் வழித் தோன்றலாய பெரியாரொருவர், நம்மாழ்வார் பற்றிய ''கண்ணிநுண் சிறுத்தாம்பு'' என்னும் பிரபந்தத்தை இவர்க்கு உணர்த்தினர். இவரும் ஆழ்வாரை நெஞ்சுள் நிறுத்தித் திருப்புளியின் கீழே பன்னீராயிரம் முறை அதனையுருவேற்றினர். திருவுள மகிழ் வள மகிழ் மாறன், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் ஆகிய அருமறையினை அவர்க்கு அருள் செய்தனன்.

இனி இவ்வரிய வரலாற்றினைக் கூறுவது போன்று அமைந்துள்ள திருமங்கை மன்னன் தன் பாடலைக் காண்பாம்.

" மின்னுமா மழைதவழும் மேக வண்ணா
 விண்ணவர்தம் பெருமானே அருளாய் என்று,
அன்னமாய் முனிவரோ டமர ரேத்த
 அருமறையை வெளிப்படுத்த அம்மான் றன்னை.
மன்னுமா மணிமாட மங்கை வேந்தன்
 மானவேற் பரகாலன் கலியன் சொன்ன,
பன்னியநூல் தமிழ்மாலை வல்லார் தொல்லைப்
 பழவினையை முதலரிய வல்லார் தாமே "

என்பது திருநெடுந்தாண்டகத்து ஈற்றுப் பாசுரம். அருமால் அன்னமாய் இருந்து அங்கு அறநூல் உரைத்ததே இப்பாசுரத்திற் கூறப் படுகிறது. ஆழ்வார் திறத்தும் இது பொருந்து மாற்றை விரித்துரைக்கின்றோம்.

" மின்னுமாமழை தவழும்மேக வண்ணா!" என்று நாதமுனிகள் நம்மாழ்வாரைப் போற்றுவர். என்னை? "மேக வண்ணா" என்பது முகிலின் றன்மையுடையவன் என்பதைக் குறிக்கும். குருகூர்க்கிறை கொண்மூவனர் என்பது தெளிவேயாகும். "மேகம் பருகின கடல் நீர் போலே நூற்கடற் சொல் இவர் வாயனவாய்த் திருந்தியவாறே எப்போதும் எல்லோக்கும் வாழ்வளிக்கும்" என்று மாறன் மனத்து (ஆசாரிய இருதயம்) உரைக்கப்பட்டது.

ஆண்டாளாம் மென்கிளி பைங்கிளி வண்ணனை எண்ணி நைந்துருகி, அவன் திறத்து முகிலினைத் தூது விடுக்கின்றனள். "விண்ணீல மேலாப்புப் பதிகம் (நாச்சியார் திருமொழி) கன்னெஞ்சையும் கரைக்கும் பதிக மன்றோ! இப்பதிகத்தில் மேகமாகக் கூறப் பட்டவர் நம்மாழ்வாரே என்பது ஆன்றோர் கொள்கை. விரிவஞ்சிச் சுருங்க உரைக் கின்றோம். இப்பதிகத்தில் முகிற்கு இடப்பட்ட அடை மொழிகள் ஆழ்வாரை உணர்த்து வனவாம். "மாமுத்த நிதி சொரியும் மாமுகில் காள்" — முத்துப்பிறக்கும் இடங்கள் இருபதில் முகிலும் ஒன்று. ஆழ்வாரோவெனின் முத்தனைய பனுவல் ஆயிரம் மொழிந்தவர் ஆவர்.

"அளியத்த மேகங்காள்" — ஆழ்வார்தம் தண்ணளியை யாரே விளம்ப வல்லார்? "அருள் கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே" என்பது மதுரகவியின் மதுரகவியன்றோ? கொண்டல்கள் கைம்மாறு கருதாது உலகு புரப்பன. காரிமாறனும் புகழ்ப்பேறும் பூசை விருப்புமின்றி உலகுய்ய உயர்மொழி தந்தனன். விசும்பின் துளியனைத்தே பசுந்தமிழ் மாறன் திருமொழி. ஆக மற்றும் பல்வகை ஒப்புமை யானும் மாறனை முகிலெனக் கொள்ளலாம்.

" விண்ணவர் தம் பெருமானே அருளாய் " என்றது "நித்திய சூரிகட்குத் தலைவரே! அருளிச் செயலை அருள்க" என்று வேண்டுவ தாகும். இவ்வாறு வேண்டியவர் யாவரென்று வினவின். "அன்னமாய் முனிவரோடு அமரரேத்த" என்றனர். அன்னமாய முனிவ ரோடு என்பது "அன்னமாய் முனிவரோடு" என்று நின்றது. அன்னமாய முனிவர், நாதமுனி ஆவர். இப்பெரியாரை யாம் புதிதாக அன்னம் என்கின்றிலேம். இங்ஙனம் கூறுதற்கு மாறன் மனமே மூலமாகும்.

" விவேக முகராய் நூலுரைத்து, அள்ளலில் ரதியின்றி, அணங்கின் நடையைப்பின் சென்று, குடை நீழலிலே கவரியசையச், சங்கமவை முரல, வரிவண்டிசை பாட, மானச பத்மா சனத்திலேயிருந்து, விதியினால் இடரில் அந்தர மின்றி இன்பம்படக் குடிச்சீர்மையிலேயாதல் பற்றற்ற பரமஹம்ஸராதலான நயாசலன் மெய்ந்நாவன் நாதயாமுநர் போல்வாரை அன்னம் என்னும்" என்பது (ஆசார்ய ஹ்ருதயம் — மூன்றும் பிரகரணம் 151-ஆம் சூர்ணிகை.

அன்னங்கள், பாலும் நீரும் கலந்திருப்பின் நீரொழியப்பாலுண்ணுந் தன்மையன. அதே போன்று நாதமுனிகள் விவேகமுடையார். இவ்வாறே மற்றும் பல ஒப்புமைகளும் இதன் கண் காட்டப்பட்டன. எனவே அன்னமாய முனிவர் நாதமுனிகளே என்பது பெறப்படும். இம்முனிவர் அருளிச் செயல் பெறுதற் பொருட்டு ஆழ்வாரை ஏத்தினர். அமரர் என் பெறுவான் வேண்டி ஏத்தினர் எனின், அருமறை வெளிப்பட வேண்டியே ஏத்தினரென்க. "அருமறை" என்றதனால், அருகிக்கிடந்த மறையாகிய அருளிச் செயல் என்றது பெறப்படும்.

இனி அமரர் அருளிச் செயலை வேண்டிய தாகக் கோடல் எற்றுக்கு? இங்கு இருவகைக் கருத்துகள் உணரப்படும். இமையவரும் இருநிலத்தவரும் ஒருவரையொருவர் சார்ந்து வாழ்தல் வேண்டும் என்று பகவற்கீதையில் அருளிச் செய்யப்பட்டது. மண்ணவர் இயற்றும் வேள்விகளினால் விண்ணவர் வன்மை யடைவர். அவர்தாம் மழை பொழிந்து மண்ணவர்க்கு உறு பயன் விளைப்பர். இவ்வாறு இருவர்க்கும் வேண்டாற்பாலதாய வேள்விகள் புறச் சமயத்தாரால் நலிவுற்ற போழ்து, பராங்குசனும் பரகாலனும் பாடிய பனுவல்கள் வேள்வியைப் போற்றுதலின், அவை உலகில் பரவுதற் பொருட்டு வானவர் மாறனை ஏத்தினரென்க. ''முந்திவானம் மழைபொழிய மூவாவுருவின் மறையாளர் அந்தி மூன்றும் அனலோம்பும்'' ''பாடும் பெரும்புகழ் நான் மறை வேள்வியைந்து ஆறங்கம் வல்லவர்'' என்று வேள்வியைப் பல விடங்களிலும் சிறப்பித்துக் கூறினர் ஆழ்வார்கள். அருமறை வெளிப்படின் வேள்வி சிறக்கும் என்றெண்ணி இமையவர் போற்றினரென்க. அற்றேல், மாறன் மாமுனிக்குத் தமிழ்மறை பயந்தாங்கு வானவர் வியந்தேத்தினர் என்னவுமாம்.

ஆக, இவற்றான் அருளிச் செயலின் வெளிப்பாடு, அடையார் சீயத்தின் அருந் தமிழ்ப்பாடலில் அமைந்திருக்கு மாற்றை விரித்துரைத்தோம். இனிப் பெருமாளைக் கலியன் பாடியதாக உள்ள ஈற்றடிகள் பொருந்துவது யாங்ஙனென்று வினவுவார்க்கு உரைக்கின்றனம். ''சேமம் குருகையோ'' என்ற பாடலினால் மாலும் மாறனும் வேறுபட்ட வரல்லர் என்றறிகின்றோமாதலின், மாறனையே பணிந்தனர் மங்கை மன்னர் என்றுங் கொள்ளலாம்.

o-o-o

சென்னைச் சைதாப்பேட்டைத் திரு. சுப்பிரமணியசுவாமி கோயில் திருப்பணித் துவக்க விழாவில், துணையாணையர் திரு. ஏ. வேங்கடாசலம் B. Sc, B. L. அவர்களும், தருமையாதீனத்து வித்துவான் தவத்திரு. மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தல். (14-9-72)

திருவிடைமருதூர்த்
திருமுறைக் கருத்தரங்கச் சிறப்புரை

செந்தமிழ்ச் செல்வர், வாகீச கலாநிதி

திரு. கி. வா. ஜகந்நாதன், M.A.,

சென்னை.

முதல் ஏழு திருமுறைகளும் சிவ பெருமானையே பாடுவன. எட்டாம் திருமுறையாகிய திருவாசகமும் திருக்கோவையாரும் அத்தகையனவே, ஒன்பதாவது திருமுறையாகிய திருவிசைப்பாவில் சிவ பெருமானுடைய துதிகளோடு சேந்தனார் முருகனைப்பாடிய திருவிசைப்பாவும் இருக்கிறது. சிவபெருமானையேபாடிய எட்டுத் திருமுறைகள் முன் அமைய, அடுத்துச் சிவபெருமானையும் சிவகுமரனையும் பாடிய ஒன்பதாந்திருமுறை அமைந்தது. அடுத்த திருமுறையாகிய திருமந்திரத்தில் விநாயகப் பெருமான் வருகிறார். சக்கரங்களைப்பற்றிச் சொல்லும் பகுதிகளில் அம்பிகையையும் காண்கிறோம். ஆகவே சிவ குடும்பம் பத்தாந் திருமுறையில் இருக்கிறது. அடுத்த பதினோராந்திருமுறையில் சிவ பெருமானைப்பற்றிய பாடல்களோடு விநாயகரைப்பற்றிய நூல்கள் உண்டு. முருகனைப் பற்றிய திருமுருகாற்றுப் படை இருக்கிறது. அவற்றோடு அடியார்களைப் பற்றிய பாடல்களும் வருகின்றன. கண்ணப்பதேவர் திருமறம் இரண்டு உள்ளன. திருத் தொண்டர் திரு திருவந்தாதி வருகிறது. ஞானசம்பந்தரைப் பற்றிய நூல்கள் சில உள்ளன. கடைசியில் நாவுக்கரசர் துதி இருக்கிறது. இப்படி சிவ பெருமான், அவன் குடும்பம், அவன் அடியார் என்ற மூவகையினரையும் பாடும் பாடல்கள் அமைந்ததாகப் பதினோராந்திருமுறை விளங்குகிறது. முதலில் சிவபெருமானையே பாடும் தேவாரதிருவாசகம் அமைந்தது போலத் தனியே தொண்டர்களையே பாடும் பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறையாக அமைந்தது. சிவபெருமான், சிவபெருமானும் சிவகுமரனும், சிவபெருமானும் சிவகுடும்பமும் திருத்தொண்டரும், திருத்தொண்டர் என்ற வகையில் பாட்டுடைநாயகர்களைக் கொண்ட முறையில் இந்தப்பன்னிரண்டு திருமுறைகளும் அமைந்துள்ளன.

நான்கு நெறி

ஞானசம்பந்தப் பெருமானுடைய திருவாக்காகிய முதல் மூன்று திருமுறைகளைப் பற்றிய கருத்தரங்கு இங்கே நிகழப் போகின்றது. முதல் எட்டுத் திருமுறைகளைப் பாடியவர்களை நால்வர் என்று சொல்வது மரபு. அவர்கள் சைவ சமயாசாரியர்கள். நால்வரும் இறைவனுடைய திருவருளைப் பெற்றுச் சிறந்து நின்றார்கள். அவர்கள் பெற்ற அருளின்பத்தில் வேறுபாடு இல்லை. ஆனால் அவர்கள் அந்த அருளை அடைய முயன்ற வழி வெவ்வேறு. "நாலுபேர் போன வழி" என்று பழமொழியாக வழங்கும் வழக்கு இந்த நான்கு பேர்கள் சென்ற நெறியையே சுட்டுகிறது. இந்த நால்வரும் நாலு வேறு நெறியில் சென்று இறைவன் திருவருளைப் பெற்றார்கள்.

ஞானசம்பந்தர் பிள்ளை நெறியிலே சென்றார்; அதைச் சற்புத்திர மார்க்கம் என்பர். அப்பர் சுவாமிகள் தொண்டு நெறியில் வழிபட்டார்; அது தாச மார்க்கம். சுந்தரர் தோழமை நெறியிலே சென்றார்; அது ச்கா மார்க்கம், மாணிக்கவாசகர் காதல் நெறியைக் கடைப் பிடித்தார்; அது சன்மார்க்கம். நான்கு பேருடைய வாழ்க்கையையும் பார்த்தால் இந்த

நெறிகளின் வேறுபாடு தெளிவாக விளங்கும். தேவாரம் பாடிய மூவரும் சென்ற நெறி பிள்ளைமை நெறி, தொண்டு நெறி, தோழமை நெறி. இவர்களில் ஞானசம்பந்தப் பெருமான் பிள்ளைமை நெறியிலே சென்றவர். அவரை ஆளுடைய பிள்ளையார் என்று வழங்குவர். அவர் எம்பெருமான் திருவருளினால் மூன்றுண்டுக் குழந்தையாக இருக்கும்போதே உமாதேவியார் ஞானத்தைக் கலந்து ஊட்டிய பாலை அருந்திப் பாடத் தொடங்கினர். உலகத்துக்கு அம்மையப்பராக உள்ள எம் பெருமானையும் அம்பிகையையும் தரிசித்துப் பாலருவாயராக, ஆளுடைய பிள்ளையாகத் திகழ்ந்தார். அவருடைய இளம் பருவ விளையாடல்களை அழகாகச் சேக்கிழார் பாடியிருக்கிறார். பதினாறு இவ்வுலகில் வாழ்ந்தவர் சம்பந்தர். அவருடைய வாழ்க்கையில் இறைவனுக்கும் அவருக்கும் உள்ள தொடர்பு தந்தைக்கும் மகனுக்கும் உள்ள தொடர்பு போல இருப்பதைப்பார்க்கலாம். கையால்தாளம் போட்டது பொறாமல் இறைவன் பொற்றாளம் கொடுத்தான் நடந்து போவது பொறாமல் சிவிகை அருளினான். இவையெல்லாம் பிள்ளையினிடம் தந்தைக்குள்ள அன்பைக் காட்டுவன.

பிள்ளையின் வாக்கு

வாழ்விலிருந்து அவருடைய பிள்ளை நெறியைப் பார்ப்பது மட்டுமன்று; அவருடைய வாக்கிலும் அதைப் பார்க்கலாம். பிள்ளையின் உள்ளத்தை அதில் காணலாம்.

பிள்ளை உள்ளத்தில் கள்ளம் இல்லை; கள்ளம் இல்லாத, வஞ்சகம் இல்லாத வெள்ளை உள்ளம் அது. மிக்க செல்வமுடைய ஒருவருடைய பிள்ளையாகப் பிறந்த ஒருவனுக்கு வேண்டியன எல்லாம் கிடைக்கும். குறைபாடே இராது. அச்சமும் இராது. ''எனக்கு அது இல்லை, இது இல்லை; அது வேண்டும்; இது வேண்டும்'' என்று குறைப்பட்டுக் கேட்க வேண்டிய அவசியமே எழாது. அவ்வாறே ஞானசம்பந்தப் பெருமானுடைய பாட்டில் நிறைவு இருக்கும்; அச்சமே இராது. நான் பாவி குறையுடையேன், எனக்கு அது இல்லையே என்பன போன்ற பேச்சே இல்லை. என்னை மன்னிக்க வேண்டும், என்னைத் துன்புறுத்தக் கூடாது என்பன போன்ற அழுகை இராது. அப்பர் திருவாக்கோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இந்த வேறுபாடு தெரியும். அவர் தம்முடைய குறைபாடுகளை எடுத்துச் சொல்வார்; குலம் பொல்லேன், குணம் பொல்லேன், குறியும் பொல்லேன் என்று பாடுவார். தாம் செய்த குற்றங்களைப் பொறுத்தருள வேண்டும் என்று பணிந்து இரந்து கூறுவார். இத்தகைய குரலைச் சம்பந்தர் பாட்டில் கேட்க முடியாது. மிக்க பெருமிதத்தோடு அவர் பாடுவார்.

மற்றொன்று : சின்னஞ்சிறு குழந்தைக்கு உலகம் முழுவதும் புதுமையாகவும் அழகாகவும் தோன்றும். ரோஜாச் செடியை நாம் பார்த்தால் நம் கண் ரோஜாப் பூவின் மேல் தான் தாவும்; அதைப் பறிக்கக் கை நீட்டுவோம். குழந்தையோ பூவையும் அழகாகப் பார்க்கும், இலையையும் அழகாகப் பார்க்கும்; அது மட்டுமா? அதன் முள்ளைக்கூட வியப்போடு பார்த்து அதைத் தொடப் போகும். குழந்தைக்கு எல்லாம் அழகு.

நாம் ரெயில் வண்டியிலே போகிறோம். நம்முடன் குழந்தையும் வருகிறது. ஓரத்திலே உட்காரவேண்டும் என்று குழந்தை பிடிவாதம் செய்யும். ஏன்? விரிந்து கிடக்கிற பிரபஞ்சத்தைக் கண்ணை அகலத்திறந்து பார்த்து மகிழ வேண்டும் என்பது அதன் ஆசை. நாமோ அப்போது தான் துப்பறியும் நாவலைப் படிக்கிறோம்.

ஞானக் குழந்தையாகிய ஆளுடைய பிள்ளையார் பிரபஞ்சம் முழுவதையும் அழகாகப் பார்க்கிறார், அவர் பாடலில் இயற்கையின் எழில் நலங்களை விரிவாகக் காணலாம். மற்றவர்கள் பாடியிருப்பதைக் காட்டிலும் மிகமிக விரிவாகவும் சிறப்பாகவும் சுவையாகவும் இயற்கை அழகை அவர் பாடியிருக்கிறார். எல்லா அழகையும் பார்க்கும் கண் அந்தக் குழந்தைக்கு இருக்கிறது.

நாமும் பலவற்றைப் பார்க்கிறோம். ஆனால் நம் உள்ளத்தில் உள்ள விருப்பு வெறுப்பு அந்தப் பார்வையோடு கலக்கின்றன. நமக்கு விருப்பமானவை அழகாகவும் வெறுப்புள்ளவை அழகற்றனவாகவும் தோற்றுகின்றன. நமக்கு அதனாலே என்னலாபம் என்று பார்க்கிறோம். கள்ளம் இல்லாத உள்ளம் படைத்த குழந்தையின் பார்வையில் இத்தகைய மாசுகள் இல்லை. ஆகையால் எல்லாவற்றையும் அழகாகப் பார்க்கும் பான்மை அதற்கு இருக்கிறது.

இந்தக் குழந்தைத் தன்மை ஞானசம்பந்தப் பெருமான் திருப்பாடல்களில தெரிகிறது. இயற்கையின் எழிலை மாத்திரமா அவர் பாடுகிருர்! இறைவனுடைய திருவுருவ எழிலை யும் விரிவாகப் பாடுகிருர். அவனுடைய அங்க அடையாளங்களைத் தெளிவாக எடுத்துக் கூறுகிருர்.

மூன்று தமிழ்

தேவாரம் பாடிய மூவருடைய தமிழுக்கும் தனித்தனியே ஒரு பெயர் கொடுத்தேன். சின்னஞ்சிறு குழந்தையாகிய சம்பந்தர் இறைவனிடம் கொஞ்சிக் கொஞ்சிப் பேசுகிருர். ஆகையால் அவர்வாக்குக்குக் கொஞ்சும் தமிழ் என்ற பெயர் கொடுத்தேன். திருநாவுக் கரசரோ ஆண்டானிடத்தில் அடிமை பேசுவது போலப் பணிந்து நயந்து குறைந்து கெஞ்சிப் பேசுவார். அவர் தமிழ் 'கெஞ்சும் தமிழ்'. 'வன்மைபேசி வன்றெண்டர் என்னும்' நாமம் பெற்ற சுந்தரரோ மிடுக்காகப் பேசுவார். ''வாழ்ந்து போதீரே'' என்று மிஞ்சிப் பேசுவார். அவர் தமிழ் 'மிஞ்சும் தமிழ்''.

இனி, சம்பந்தப் பெருமானுடைய கொஞ்சும் தமிழைச் சிறிது பார்க்கலாம். அவர் பாடிய முதற்பதிகம் தேவாரத்தின் முதற் பதிகமாக அமைந்திருக்கிறது.

''தோடுடைய செவியன் விடை யேறியோர்
 தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசி என்
 'உள்ளம் கவர்கள் வன்'
ஏடுடைய மலரான் முனை நாள்பணிந்து
 ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய
 பெம்மான் இவன் அன்றே.''

என்பது அப்பதிகத்தின் முதற் பாசுரம்;

எல்லாம் வெள்ளை

ஞானசம்பந்தப் பிள்ளையாருக்கும், உலகத் திலுள்ள மற்றப் பிள்ளைகளுக்கும் என்ன வேறு பாடு? உலகத்துப் பிள்ளைகள் குருதியும் தசையும் உள்ள உடலையும் மந்தபுத்தியையும் உடைய தாயின் பாலைக்குடிக்கின்றனர். எந்தப் பெருமாட்டி திவ்ய தேஜாமய விக்கிரகமாக உள்ளவளோ, எந்தத்தாய் பேதமற்றவளோ, எவள் உலகமே தன் வடிவமாக நின்றவளோ, எந்தப்பிராட்டி ஞானமே திருவுருவாக அமைந்தவளோ, அந்தப் பெருமாட்டியின் பாலைக் குடித்தவர் சம்பந்தர்; சுத்த சத்துவ குணமான பாலைக் குடித்தவர். நாமோ தாமத குணமான பாலைக் குடித்தோம். அதனுடைய பயனுக நமக்குப் பேதப் பார்வை உண்டாகிறது. பல பல வண்ணங்களையும் வடிவங்களையும் பார்க்கும் பார்வை வருகிறது.

ஞானசம்பந்தக் குழந்தை எதைப் பார்த்தது? முதல்முதலாக இறைவனிடம் என்ன என்ன பொருள்களை பார்த்தது ? முதல் பார்வை சிறப்பானது. உளவியல் நூலார், First impression is the best impression என்பார்கள். அதாவது முதலில் பார்த்ததும் நம் உள்ளத்தில் என்ன பதிவாகிறதோ, அதுவே சிறந்தது.

ஆகவே முதல் முறையாக இறைவன் திருக் கோலத்தைக்கண்ட போது சம்பந்தப்பெருமான் உள்ளத்தில் பதிவான காட்சி சிறந்தது. எம் பெருமானுடைய திருமேனியிலே பல வண்ணப் பொருள்கள் உண்டு. அவனுடைய கழுத்திலே கருமை இருக்கிறது. அவன் அணியும் கொன்றை மலர் பொன்னிறம். நீல நிறமுடைய பாம்பை அணிந்திருக்கிருன். இவ்வளவு வண்ணப் பொருள்கள் இருந்தும் சுத்த சத்துவ மயமான ஞானப்பாலை உண்ட குழந்தைப் பிரான் எதைப் பார்த்தார்? கள்ளமில்லா வெள்ளையுள்ளம் குழந்தையின் திருவிழிகளிலே முதலில் எந்தப் பொருள்கள் பட்டன? எல்லாம் வெள்ளையான பொருள்கள்.

நம்முடைய குழந்தைகள் வண்ண வண்ணப் பொருள்களைக் கண்டு மகிழ்ச்சி அடையும். நாம் குழந்தையின் தொட்டிலின்மேல் வண்ண வண்ண ரசகுண்டுகளைக் கட்டுகிறோம். சின்னஞ்சிறு பிள்ளைகளுக்குப் போடும் புத்தகங்களில் பல வண்ணப் படங்கள் இருக்க வேண்டும். அப்போதுதான் அவற்றை ஊக்கத்துடன் குழந்தைகள் பார்க்கும். பேத மான பொருள்களைக் காணும் மனம் நம்முடைய குழந்தைகளுக்கு. நாம் பேதமயமான எண்ணங் களையும் ஆசைகளையும் உடையவர்கள். நம் குழந்தைகளும் அப்படித் தானே இருக்கும்?

ஞானப்பால் உண்ட குழந்தை கண்ட பொருள்கள் இன்னவை என்பதைத் 'தோடுடைய செவியன்' என்ற பாட்டிலேயே தெரிந்து கொள்கிறோம். முதலில் இருப்பது

தோடு. அது பனையோலையினால் ஆனது; சுத்த வெள்ளை நிறமுடையது. அடுத்து வருவது விடை. இறைவனுடைய விடை தர்மம். அது வெண்ணிற முடையது; "வெள்ளை எருதேறி" என்று சம்பந்தரே பாடுவார். அடுத்தபடி காட்சி தருவது தூவெண்மதி. வெண்மதி என்றாலே போதுமே. தூவெண்மதி என்று சொல்வானேன்? பூரண சந்திரன் வெள்ளையாக இருந்தாலும் அதில் சிறிது களங்கம் இருக்கும். இறைவன் சூடியது பிறை, பிறையில் களங்கம் இராது. அது சுத்த வெள்ளை நிறமுடையது. ஆதலின் தூவெண்மதி என்றார். தோடு வெள்ளை; மாடு வெள்ளை, சூடியது வெள்ளை, பிறகு "காடுடைய சுடலைப் பொடி பூசி" என்கிறார். சுடுகாட்டிலே உள்ள நீறு வெண்மை யானது. எல்லாம் எரிந்து சாம்பலான இடம் அது. அடுப்புச் சாம்பல் அவ்வளவு வெள்ளை யாக இராது. உலகில் உள்ள பலவண்ணப் பொருள்களும் எரியுண்டால் கரியாகும்; மறுபடியும் சுட்டால் சுத்த வெள்ளையான சாம்பலாகி விடும். அந்தச் சாம்பலைச் சுட்டால் அது வேறு ஆகாது; வெண்திரு நீறாகவே இருக்கும். எல்லாரும் அழிந்தொழிந்த காலத்தும் அழியாமல், தன் இயல்பு மாறாமல் இருக்கும் சிவபெருமானைப் போல இருப்பது திருநீறு. அது தூய வெள்ளை. இப்படி ஒரே வெள்ளைமயமாகக் காட்சியளித்துப் பிள்ளை யுள்ளத்தைக் கவர்ந்தானும் சிவபெருமான். ஞானம் உண்ட பிள்ளையார் கண்ணில் சத்துவ நிறமாகிய வெண்மையே படுகிறது

"தோடுடைய செவியன்; விடை ஏறி ஓர்
தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசி என்
உள்ளம் கவர்கள் வன்"

தமிழ்மறை

ஞானசம்பந்தப் பெருமானுடைய திருவாக்கு தமிழ் வேதம், இறைவனுடைய திருவாக்கு வடமொழி வேதம். சம்பந்தப்பெருமான் திரு வாக்கிலிருந்து வருவது எப்படி வேதமாகும்?" ஞானசம்பந்தர் வாயிலாக இறைவனே மொழிந் தமையால் வேதம் ஆயிற்று.

இந்த ஒலிபெருக்கி இங்கே இருக்கிறது. நான் பேசுவதை இது பலபேருக்கும் கேட்கும் படியாக ஒலியைப் பெருக்கிக் காட்டுகிறது. இந்தக் கருவி இல்லாமல் நான் பேசினால் எல்லோருடைய காதிலும் விழாது; சிலபேர் காதில் தான் விழும். அதுபோல, எழுதாக் கிளவியாகிய வடமொழி வேதம் சிலபேரிடமே இருந்தது. பலருக்கும் பரவாமல் இருந்தது. பலரும் தன் வாக்கைக் கேட்க வேண்டுமென்று ஆண்டவன் திருவுள்ளம் கொண்டான். ஓர் ஒலிபெருக்கிக்காகக் காத்திருந்தான். ஏழாவது நூற்றாண்டிலே ஒலிபெருக்கி கிடைத்தது. ஞானசம்பந்தரே அந்த ஒலிபெருக்கி, ஒலி பெருக்கியில் ஒலிவந்தாலும் அதற்கு மூலகாரண மாக இருப்பவர் பேசுகிறவரே. அவ்வாறே இறைவன் உள்ளிருந்து பேச ஞானசம்பந்தர் அதை வெளியிட்டார். இலம்பையங்கோட்டூர்த் தேவாரத்தில் இந்தக் கருத்தைச் சொல்கிறார் சம்பந்தர். "எனதுரை தனதுரையாக" என்று அதில் வருகிறது. ஞானசம்பந்தப் பெருமா னுடைய திருவாக்கு இறைவனுடைய திரு வாக்கே என்பதற்கு அதுசான்று. பசு கரணங் கள் மாறிப் பதிகரணங்களான போது பாடியவை ஆதலின் இறைவனுடைய வாக்காயின.

இறைவனுடைய வாக்கிலிருந்து நேரே வெளிப்பட்ட வேதம், எழுதாக்கிளவி. ஆசிரியன் பாடம் சொல்லக் காதிலே கேட்டு மாணாக்கன் சொல்லிப் பயில்வது அது. இப்படி காது வழியே சுரம் முதலியவற்றைக் கேட்டுத் தெரிந்து கொள்வதினால் அதற்குச் சுருதி என்று வடமொழியிலும், கேள்வியென்று தமிழிலும் பெயர்கள் வந்தன. மற்ற நூல்களை எழுதிப் படிப்பது போலப் படிப்பதன்று; அப்போது சுரத்தைத் தெரிந்து கொள்ள முடியாது. ஆகவே எழுதாக்கிளவி என்ற பெயர் வேதத்துக்கு வந்தது. ஞானசம்பந்தர் வாயிலாக வெளிவந்த வேதம் எழுதும் கிளவியாயிற்று. இதைச் சேக்கிழார் பெரிய புராணத்தில் சொல்கிறார்.

"எல்லையிலா மறை முதல் மெய்யுடன் எடுத்த எழுதுமறை" என்கிறார். வடமொழி மறை சாகைகளால் பலவாதலின் 'எல்லையிலா மறை. 'அனந்தாவை வேதா:? என்று சொல் வார்கள். அந்த மறை இப்போது எழுதும் மறையாக வருகிறது. இரண்டுக்கும் மொழி வேறுபாடு இருந்தாலும் கருத்து ஒன்றுதான். ஆடை அணிகளால் ஒருவர் வெவ்வேறு கோலம் கொண்டாலும் தான் வேறுபடுவதில்லை அது போன்றது இது. அங்க அடையாளத்தால் இதைத் தெரிந்து கொள்ளலாம். அதுபோல இங்கே இதுவும் அந்த வேத்தான் என்பதற்கு அடையாளம் இருக்கிறதா?

இருக்கிறது. முதல் அடையாளத்தைச் சேக்கிழார் குறிக்கிறார். மறையின் முதலாகிய எழுத்து ஓம் என்பது. அதை அடையாளமாகக் கொண்டு தமிழ் மறை தொடங்குகிறதாம். ஓ என்ற அடையாளம் தனியாக இல்லை. வைரக் கடையில் வைரம் விற்கிறார்கள்; அதை வாங்கி வந்து அப்படியே காதுத் தொளையில் புகுத்திக் கொள்வார்களா? கால்பவுன் அல்லது அரைப் பவுனில் அணைசு பண்ணி அணியாக்கிக் காதில் அணிவார்கள். அதுபோல மூலவேதத்திலுள்ள ஓவை எடுத்து அதற்கு ஒரு பீடத்தையிட்டுத் தமிழ் மறை முதலிலே வைத்துத் தொடங்குகிறது.

'மறை முதலாகிய ஓ என்பதை ஒரு மெய்யுடன் எடுத்து அமைத்த எழுது மறை' என்று சேக்கிழார் சொல்கிறார். 'தோடுடைய செவியன்' என்பதில் முதலில் இருப்பது தோ. ஓ என்பதைத் தகரத்தின் மேல் வைத்துத் தோ என்று தொடங்குகிறார். த் என்பது தகரம். தகரத்தின் மேல் ஓகாரத்தை வைத்தார்; தகராகாசத்தில் ஓகாரம் பிறந்தது என்று சிலர் சொல்லியிருக்கிறார்கள். காயத்திரிமந்திரம் தகரத்தில் தொடங்குகிறது. அதுபோல இதுவும் அமைந்தது என்று சிலர் எழுதினர். தகரம் என்பது சிலேடையாகப் பொருந்துவதேயன்றி இயல்பாகப் பொருந்துவதன்று, காயத்திரி வடமொழி மந்திரம்; அதன் முதல் எழுத்தை வைத்தார் என்பது சிறப்பாகத் தோன்றவில்லை.

ஒருபெரியவர் நம் வீட்டுக்கு வருகிறார். அவருக்கு ஒரு பலகை போட்டு அமரவைக்கிறோம். நம் வீட்டுப் பலகையைப் போடுவோமேயன்றி அவர் வீட்டிலிருந்து பலகை கொண்டு வரச் சொல்லி அமரச் செய்வோமா? அதுபோல வடமொழி வேதத்தின் முதலாகிய ஓவை எடுத்துத் தமிழ் மறைக்கு முதலில் வைக்கும் போது தமிழால் பீடம் போடுவது தானே சிறப்பு? தமிழில் உள்ள சொற்களில் எது சிறந்தது? எல்லாமே சிறந்தவை. ஆனாலும் தமிழைக் குறிக்கும் தமிழ் என்ற சொல்லே சிறந்ததல்லவா? தமிழ் என்பதன் முதல் எழுத்து த. இலக்கணப்படி தவின் முதல் எழுத்து த். ஆகவே தமிழ் என்பதன் முதல் எழுத்தாகிய த் என்பதையே பீடமாக வைத்துத் தோ என்று தொடங்குகிறார்.

செவி:

இறைவனுடைய அடியார்கள் இறைவனைத் துதிக்கும் பொழுது அவனுடைய திருவடியை முதலில் சொல்வது ஒரு வழக்கம். ''நமச்சிவாய வாழ்க'' என்று திருவைந்தெழுத்தோடு தொடங்கும் திருவாசகம், உடனே ''நாதன் தாள் வாழ்க'' என்று சொல்கிறது. இறைவனுடைய திருவடியைப் பற்றிக் கொண்டு புகுவது அடியார்கள் இயல்பு. அடியார் என்ற சொல்லே அதைக் குறிப்பிக்கிறது. இறைவனைப் புகழ வேண்டுமானால் அடி முதல் முடி வரையில் பாதாதிகேசமாகப் பாடுவது மரபு. மற்றவர்களைக் கேசாதிபாதமாக வருணிப்பர். இந்த வழக்கம் பெரும்பான்மையானது.

திருஞானசம்பந்தர் தாம் பாடிய முதல் பாட்டிலே இறைவனை அடையாளம் காட்டும் போது திருவடியைச் சொல்கிறாரா? இல்லை, தோடுடைய செவியன் என்று காதைப் பிடித்துப்பாடுகிறார். ஏன்? நாம் ஒருவரோடு பேசுகிறோம். பேசும் போது அவர்முகத்தைப் பார்த்துப் பேசுவதுதான் முறை, எங்கேயோ பார்த்துக் கொண்டு பேசினால், கேட்கிறவர் என்ன நினைப்பார்? முகம் பார்த்துப் பேசுவது தான் நாகரிகம். அடியார்கள் பூவினாலே அருச்சனை செய்யும் போது திருவடியிலே மலரை இடுகிறார்கள், சம்பந்தர் இப்போது தேவாரப்பாவினாலே இறைவனை வழிபடத் தொடங்குகிறார். இனிமேல் பல தலங்களுக்கும் சென்று தேவாரத் திருப்பதிகங்களைப் பாடப் போகிறார், அதற்குத் தோற்றுவாய் இது, இந்தப்பாடல்களை எங்கே சார்த்தவேண்டும், பாடல்களைக் கேட்பது திருச்செவிதானே? ஆகவே பாடல்கள் எங்கே, சேர வேண்டுமோ, அந்த இடத்தைச் சுட்டிப்பாடத் தொடங்குகிறார், ''தோடுடைய செவியன்'' என்று சேக்கிழார் இந்தக் கருத்தைச் சொல்கிர்,

''பல்லுயிரும் களிகூரத் தம்பாடல் பரமர்பாற்
செல்லுமுறை பெறுவதற்குத் திருச்செவியைச்
சிறப்பித்து''

என்பது பெரியபுராணம்.

தோடு :

அந்தச் செவிக்குத் தோட்டை அடையாளமாகச் சொன்னார், இறைவன் இரண்டு செவிகளிலும் ஒரேமாதிரி அணிகலனை அணியவில்லை வலப்பக்கத்தில் குழையையும் இடப்பக்கத்திலே தோட்டையும் அணிந்திருக்கிறான், வலச் செவிதானே சிறந்தது? அதைவிட்டு வீட்டுத் தோடுடைய இடச்செவியை ஏன் சொன்னார்?

நான் ஒருவரிடம் பணம் வாங்கிக் கொள்கிறேன். ரசீது போடும் போது கொடுத்தவர் பேருக்குப் போட வேண்டுமேயன்றி வேறு ஒருவர் பேருக்குப் போடலாமா? அது முறையாகுமா? ஞானப்பால் உண்டு பாட்டுப் பாடத் தொடங்குகிறார் சம்பந்தர். ஞானப்பால் வழங்கியவள் இறைவனுடைய வாமபாகத்திலுள்ள அம்பிகை. ஆகவே அந்த நன்றியறிவோடு இடப்பாகத்துச் செவியை எண்ணி, ''தோடுடைய செவி'' என்றார்.

அப்படியானால் 'தோடுடைய செவியள்'' என்றல்லவா சொல்ல வேண்டும்? சிவம் வேறு சக்தி வேறு அல்ல ஆகையால் அந்த ஒற்றுமை கருதி அவ்வாறு சொன்னார். பாதிமாதுடனாகிய பரமனை ஒரு மூர்த்தியாகவே அர்த்தநாரீசுவரனாக வழிபடுவார்களேயன்றி வேறு வேறாக வைத்து வழிபட மாட்டார்கள்.

மங்கலச் சொல் :

தமிழ்க் கவிஞர்கள் காப்பியம் பாடினாலும், வேறு நூல்கள் பாடினாலும் முதலில் மங்கலச் சொல்லை வைத்துப் பாடுவார்கள். எழுத்து, உலகம், மணி, சீர், பூ என்று பல மங்கலச் சொற்கள் உண்டு. கம்பர், ''உலகம் யாவையும்'' என்னும், சேக்கிழார், ''உலகெலாம்'' என்றும் உலகம் என்ற மங்கலச் சொல்லை முதலில் வைத்துத் தம்முடைய காப்பியங்களைத் தொடங்கினார்கள். ஞான சம்பந்தப் பெருமான் திருநெறிய தமிழைத் தந்தவர். முத்தமிழ் விரகர் என்று புகழப்பெறுபவர். அவர் எல்லோரும் வைக்கும் மங்கலச் சொற்களில் ஒன்றை வைக்காமல் தோடு என்று தொடங்குகிறார். தமிழ்ப் பெருவித்தகராகிய அவருக்கு மங்கலச் சொல் ஒன்றும் கிடைக்கவில்லையா? பூ என்று தொடங்கியிருக்கக் கூடாதா?

மங்கலம் என்பது வாழ்வுக்கு நலம் தருவது; மகிழ்ச்சியை உண்டாக்குவது, ஆண்களைவிடப் பெண்களைக் குறிக்கும் போதுதான் மங்கலம் என்ற சொல்லை ஆளுவார்கள்; மங்கல மங்கையர் என்பர், அவர்கள் கணவனோடு வாழ்வது மங்கல வாழ்வு; மங்கலமுடைய மகளிர் கழுத்தில் தாலியை அணிவர், அவர்களுடைய மங்கலத்துக்கு அடையாளமாகையால் அதை மாங்கல்யம் என்று சொல்வார்கள்; மங்கலமுடையது என்று பொருள். திருமாங்கல்யம் என்று சிறப்பித்துச் சொல்லுவோம், மங்கலத்தைக் குறிக்கும் அடையாளங்களிற் சிறந்தது தாலியாதலின் அதை மாங்கலியம் என்று வழங்குகிறோம் குங்குமம், பூ, மூக்குத்தி முதலியனவும் மங்கலத்தின் அடையாளங்களே, காதிலே அணியும் ஓலையும் மங்கலத்துக்கு அடையாளமாகத் தாலி போலச் சிறப்புப் பெறுவது. காதோலை, கருகுமணி என்ற இரண்டும் மாங்கலியத்தோடு சேர்ந்த இனம்; மாங்கலியம் போலவே கருதுவதற்குரியவை.

காதோலை திருமாங்கலியத்திற்கு ஒப்பானது என்பதைக் குமரகுருபரர் கூறும் பாட்டு ஒன்றினால் தெரிந்து கொள்ளலாம், இறைவன் ஆலகால நஞ்சை உண்டான், அதை உண்ணாமல் இருந்திருந்தால் தேவர்கள் இறந்திருப்பார்கள்; தேவமகளிர் மங்கலியத்தை இழந்திருப்பார்கள், இறைவன் ஆலகாலத்தை உண்டு கழுத்திலே வைத்ததனால் தேவமகளிர் தம்கழுத்தில் தாலியைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதைச் சொல்லவருகிறார் குமரகுருபரர், மதுரைக்கலம்பகத்தில் ஒருபாட்டில் சொல்கிறார். 'இறைவன் நஞ்சை உண்டதனால் தேவமகளிர் காதோலையைக் கழற்றாமல் அணிந்திருக்கிறார்கள், என்ற கருத்துத் தோன்றப் பாடுகிறார்.

> ''நம்பா நினக்கோலம் முறையோ எனக்கால
> நஞ்சுண்டு பித்துண்டு, நாம்தேவர் என்பார்
> தம்பாவையர்க்கன்று காதோலை பாலித்த
> தயவாளர்''

என்பது அந்தப்பாட்டு. அங்கே, தேவமகளிருக்கு மங்கல வாழ்வை அளித்தார் என்று சொல்லவந்தவர், 'பாவையர்க்கு அன்று காதோலை பாலித்த தயவாளர்' என்று கூறுகிறார். ஆகவே கழுத்திலணியும் திருமாங்கலியம் போலவே காதோலையும் மங்கலமானது என்று தெரிந்து கொள்ளலாம்.

காதோலைதான் தோடு, அது மங்கலப் பொருள்; மாங்கலியமாகவே கருதுவதற்குரியது அதைக் குறிக்கும் சொல் மங்கலமானது அன்று என்று சொல்ல முடியுமா? ஆகவே தோடு என்பதும் சிறந்த மங்கலச் சொல்லே ஆகும்.

விடை ஊர்தி :

தோடுடைய செவியனுகிய இறைவன் ஞானசம்பந்தப் பெருமானுக்குத் திருவருள் புரிய எழுந்தருளினுன். எப்படி வந்தான்? இடபவாகனத்தில் ஏறி வந்தான், அதை நினைக்கிருர், "விடை ஏறி" என்று, இறைவனுடைய இடபவாகனம் தர்மம், தர்மந்தான் உலகத்தைக் காப்பாற்றுகிறது. இறைவன் உலகைக்காக்கும் அறத்தைக் காக்கிருன். தன்னைத் தாங்கும் இறைவனைத் தர்மம் விடையாக நின்று தாங்குகிறது.

ஆண்டவனுக்கு வாகனம் எதற்கு? அவன் நினைத்தால் எங்கும் வந்துவிடலாமே! இறைவனுடைய அங்க அடையாளங்களெல்லாம் சில குறிப்புக்களைக் காட்டுகின்றன, அவனுடைய திருவுருவமே தத்துவத்தை உள்ளடக்கியது.

இறைவன் வாகனத்தில் வருவது அவனுடைய பெருங்கருணையைக் காட்டுகிறது. டாக்டர்களிடம் போய் மருந்து வாங்கிக் கொள்கிருர்கள் நோயாளிகள். கடுமையான நோயுடையவர்களாக இருந்தால் டாக்டரே அவர்களைப் பார்க்கப் போவார். வேகமாகப் போவதற்குக் கார் வைத்திருப்பார், டாக்டர் ரங்காசாரியார் மிகவும் விலை உயர்ந்த கார் வாங்கியிருந்தார், சொந்தமாக ஆகாய விமானமே வைத்திருந்தார். அவர் காரைப் பார்த்த ஒருவர், "எதற்காக இவ்வளவு விலை போட்டு இதை வாங்கினீர்கள்?" என்று கேட்டார், "நான் நோயாளிக்கு மருத்துவம் செய்கிறவன், எவ்வளவுக்கு எவ்வளவு வேகமாகப் போகிறேனே. அவ்வளவுக்கு அவ்வளவு நோயாளிக்கு நன்மை. அவர்களுடைய நன்மையை எண்ணியே இந்தக்காரை வாங்கினேனே ஒழியப் படாடோபத்துக்கு அன்று" என்று டாக்டர் சொன்னுராம்.

அதுபோல மக்களுக்கு அருளை வழங்குவதற்காக ஆண்டவன் மிக வேகமாக வருவான் என்பதைக் குறிப்பது அவன் வாகனம், அவனுடைய கருணையைக் காட்டுகின்ற அடையாளம். "சுப்பிரமணிய சுவாமி மயில் வாகனத்தில் இருக்கிற மாதிரி" என்று ஒரு பழமொழி வழங்குகிறது. அதற்குப் பைத்தியக்காரத்தனமான பொருள் ஒன்றைச் சிலர் சொல்வார்கள். சூரபன்மனே மயிலாக இருக்கிருன். முருகனுடைய பகைவனுக இருந்தவன் அவன், ஆகையால் அவன் எந்தச் சமயத்தில் தன்னைக் கவிழ்த்து விடுவானே என்று கருதி ஜாக்கிரதையாக. எந்தச் சமயத்திலும் இறங்கும் படி ஒரு காலைக் கீழே தொங்கவிட்டுக் கொண்டிருக்கிருனும்; முருகன் சூரபன்மனுக்குப் பயந்து அப்படி அமர்ந்திருப்பதாகச் சொல்வது அறியாமை.

அப்படியானுல் அந்தப் பழமொழிக்கு என்ன பொருள்? முருகன் தன்னுடைய அடியார்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற வேகம் உடையவன், எந்தச் சமயத்தில் எந்த அடியவன் அழைப்பானே என்று அவன் எப்பொழுதும் மயில் வாகனத்தில் அமர்ந்து உலவிக் கொண்டிருப்பான். சில பெரிய மனிதர்களால் ஒரு காரியம் ஆக வேண்டுமானுல் எளிதில் அவரை அழைத்து வர முடியாது, அவரை எழுப்ப வேண்டும், பின்பு அவர் காரைத் தயார் செய்யச் சொல்ல வேண்டும். அந்தச் சமயம் பார்த்து டிரைவர் எங்காவது போயிருப்பான். அவனைத் தேடிக் கண்டு பிடித்து வர வேண்டும். காருக்குப் பெட்ரோல் இராது, நமக்கோ அவசரத்தின் மேல் அவசரமாக இருக்கும், இருந்தும் அந்தச் செல்வரை அழைத்துவந்து நம்முடைய காரியத்தைச் சாதித்துக் கொள்வது எளிய காரியம் அன்று, முருகன் அப்படி இருக்க மாட்டான். தன் அடியாருக்கு அதிகச்சிரமம் வைக்கக் கூடாது என்று அவன் எப்போதும் அவர்களுக்கு அருள் செய்வதற்குத் தயாராக மயிலின் மேல் அமர்ந்து உலாவிக் கொண்டே இருக்கிருன். இதைத்தான், "சுப்பிரமணிய சுவாமி மயில் வாகனத்தில் இருக்கிற மாதிரி" என்ற பழமொழி குறிக்கிறது.

திருக் கோயிலில் மூலமூர்த்தி, உற்சவ மூர்த்தி என்று இரண்டு வகை மூர்த்திகள் உண்டு. மூல மூர்த்திகள் இருக்கிற இடத்தை விட்டு வெளிவருகிறதில்லை. உற்சவ மூர்த்திகளுக்குத்தான் புறப்பாடு வெவ்வேறு வாகானங்கள் இருக்கின்றன. அலங்காரங்களும் மேளதாளங்களும் ஆட்டபாட்டங்களும் உற்சவ மூர்த்திகளுக்குத்தான், வாகனச்சிறப்புடையவர் உற்சவமூர்த்தியே.

ஆண்டவன் இப்படிப் பவனிவருவது எதற்காக? கோயிலில் உள்ள மூர்த்தியை எல்லோரும் சென்று தொழுவதில்லை, அதற்கு ஏற்ற பக்தியும் ஊக்கமும் எல்லோருக்கும் இருப்பதில்லை. இதை அறிந்த இறைவன், உன்னுடைய ஊரில் எனக்கும் ஓர் இல்லை அமைத்துக் கொண்டு அங்கே வந்து தங்கியிருக்கிறேன். நீவருவாய் என்று காத்திருக்கிறேன், நீவரவில்லை, ஆனாலும் நான் உன்னை விடப் போவதில்லை. இவ்வளவு தூரம் வந்தவனுக்கு உன் வீட்டு வாசலுக்கு வரத் தெரியாதா?'' என்று சொல்லிக் கண்ணையும் காதையும் கவரும் வண்ணம் அலங்காரங்களுடனும் இன்னிசையுடனும், வந்து வாசலில் நிற்கிறான். இது பெரியகருணை அல்லவா? இறைவன் திருக்கோயிலுக்குச் சென்று பணிந்து உருகாதவர்களையும் தன்னைக் கண்டு உருகும்படி செய்ய வாகனத்தில் ஏறி உலாவருகிறான்.

''நையாத உளத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப் போந்த அன்று முதல்''

என்ற திருவிசைப்பாவில் இந்தக் கருத்தைக் காணலாம்.

நாம் வினைகளைச் செய்து தெருவிலே திரிந்து துன்புறுகிறோம். நம்முடைய அலைச்சலை நிறுத்தி நமக்கு அருளைத் தருவதற்காக இறைவனும் வாகனத்தில் ஏறிக் கொண்டு தெருவிலே வருகிறான். அது அவன் பெருங்கருணையுடையவன் என்பதைக் காட்டும் செயல்.

ஆகவே ''விடை ஏறி'' என்று சம்பந்தர் சொல்லும் போது இறைவனுடைய பெருங்கருணைத்திறத்தை நினைப்பூட்டுகிறார் என்று கொள்ள வேண்டும், தோடுடைய செவியனாகி, விடையேறி வருகிறான் இறைவன்.

மதி சூடி :

அடுத்தபடி, ''மதி சூடி'' என்று காடுடைய சுடலைப் பொடிபூசி'' என்றும் சொல்கிறார், இப்படியெல்லாம் வந்து உள்ளம் கவர்ந்தானும்.

அவன் தூவெண்மதி சூடியாக இருப்பதும் அவனுடைய கருணையைக் காட்டுகிறது, சந்திரனை ஆண்டவன் தன் தலையிலே வைத்திருக்கிறான். சந்திரன் குருத்துரோகம் செய்தவன்; சிவத்துரோகம் செய்தவன், அத்தகைய பாவியை அவன் தலையிலே வைத்துக் கொண்டிருக்கிறான்'' குருபத்தினியை விரும்பினமையால் குருத்துரோகம் செய்தான், தக்கயாகத்துக்குச் சென்று அவன் தந்த அவியுணவை உண்டதனாலே சிவத்துரோகம் செய்தவனானான்.

தக்கன் யாகம் செய்யப் புகுந்தான், அவனுக்குச் சிவபெருமானிடம் கோபம், ஆகையால் அவனை அழைக்கவில்லை, இறைவன் யக்ஞபதி; வேள்விக்குத் தலைவன். அவன் இல்லாமல் வேள்வி எவ்வாறு நடைபெறும்? அப்படி நடைபெற்றால் அது வேள்வி ஆகுமா? மணமகன் இல்லாமல் திருமணம் உண்டோ? தக்கன் மற்றத் தேவர்களையெல்லாம் அழைத்தான். அவியுணவின் மேல் வைத்த ஆசையால் எல்லோரும் போனார்கள். இறைவனாகிய தலைவன் இல்லாமல் செய்வது யாகமே ஆகாது, அங்கே போகக் கூடாது என்று யாரும் எண்ணவில்லை. யாவரும் போனார்கள்.

இதை அறிந்து இறைவன் வீரபத்திர வடிவில் சென்று தக்கயாகத்தைச் சங்காரம் செய்தான். இறைவன் செய்த வீரச் செயல்களில் ஒன்று அது. அப்போது யாகத்துக்கு வந்த அமரர்களுக்குத் தண்டனை கிடைத்தது. சூரியன் கண்ணை இழந்தான், தக்கன் தலையை இழந்தான். கலைமகள் மூக்கை இழந்தாள். சந்திரனை இறைவன் தன் தாளின் கீழ்த்தேய்த்தான். எல்லாருக்கும் கிடைத்த தண்டனை போலச் சந்திரனுக்குக் கிடைக்கவில்லை. அவனுக்குக் கிடைத்த தண்டனையால் அவனுக்கு ஒரு லாபம் உண்டாயிற்று. இறைவனுடைய திருவடி சம்பந்தம் அவனுக்குக் கிடைத்தது. இறைவனுடைய திருவடித் தொடர்புடையவர்கள் உயர்ந்த நிலையை அடைவார்கள். ஆகவே சந்திரனுக்கும் உயர்ந்தநிலை கிடைத்தது; இறைவன் தலையின் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டான். அவன் தண்டனையாகப் பெற்றாலும், பெற்றது திருவடிக் கீழ் இருக்கும் நிலை ஆதலின் அவன் அதனால் பயன் பெற்றான்.

ஒரு குரங்கு பழம் நிறைந்த மரத்தின் மேலே இருக்கிறது. அந்தப் பக்கமாகப் போன சிறுவன் ஒருவன் தானும் பழம் தின்ன வேண்டுமென்று ஆசைப்பட்டான், குரங்கைப்

புகழ்ந்து பேசினுல் அது பழந்தருமா? அவன் அறிவாளி, ஆகையால் ஒரு தந்திரம் செய்தான் கீழே கிடந்த ஒரு கல்லை எடுத்துக் குரங்கை நேர்க்கி வீசினுன். குரங்குக்குக் கோபம் வந்து விட்டது. தானும் அவன் மேலே எதையாவது வீச வேண்டு மென்று எண்ணியது. அங்கே ஏது கல்? ஒரு பழத்தைப் பறித்துக் கோபத் தோடு வீசியது. பையன் கல்லை வீசிக்கனியைப் பெற்ருன். கல்லுக்குப் பதிலாகக் கோபத் தோடு வீசினுலும் கனி கனிதானே? கல்லாகி விடுமா? அதுபோலக் குற்றத்துக்குத் தண்டனை யாகத் திருவடியால் தேய்த்தாலும் திருவடியின் தொடர்பு உண்டானது உண்டானது தானே? அதனுல் உயர்ந்தான் சந்திரன்.

இறைவன் மதி சூடியிருப்பது எதைக் காட்டுகிறது? எவ்வளவு பாவியாக இருந்தாலும் தன் திருவடியிலே விழுந்தால் கருணையை அவன் அருள்வான் என்ற உண்மையைக் காட்டுகிறது. "என் தாளிலே விழுந்தவன் உயர்ந்தநிலை அடைவான்" என்று இறைவனே சொல்லியிருக்கிருன். அந்த விதியை மாற்ற முடியாது, அதன்படி சந்திரனுக்கு நன்மை கிடைத்தது.

சுடலைப் பொடி :

அடுத்தபடி வருவது, "காடுடைய சுடலைப் பொடி பூசி" என்னும் தொடர். இறைவன் தன் திருமேனியில் சுடலைப் பொடியைப் பூசி யிருக்கிருன். அவன் நித்தியன் என்பதைக் காட்டும் அடையாளம் அது. சர்வப்பிரளய காலத்தில் எல்லாச் சீவர்களும் ஒடுங்க, இறைவன் மட்டும் தனி நின்று ஆடுவான், அவன் திருமேனியில உலகமெல்லாம் அழிந்து மிகுந்த திருநீறு இருக்கும். காடாக உள்ள சுடலையில் உள்ள திருநீற்றைப் பூசி விளங்கு வான். மற்றவர் யாவரும் இறந்து படவும் அவன் மாத்திரம் சாவாமூவாப் பேராளனுக இருப்பான். அந்தச் சுடலைப் பொடி, அவன் என்றும் பொன்ருத நித்திய மூர்த்தி என்பதைப் புலப்படுத்துகிறது.

கவர்ச்சிக்குக் காரணம் :

ஞானசம்பந்தர் தம் உள்ளத்தைக் கவர்ந் தனவாக நான்கு அடையாளங்களைச் சொன்னுர். தோடுடைய செவியனுக வந்து உள்ளம் கவர்ந்தான்; விடை ஏறி வந்து உள்ளம் கவர்ந்தான்; தூவெண்மதி சூடி உள்ளம் கவர்ந்தான்; சுடலைப் பொடி பூசி உள்ளம் கவர்ந்தான். உள்ளத்தைக்கவர இவற்றில் என்ன இருக்கிறது?

இறைவன் தன் ஒரு பாகத்தில் அம்பிகையை வைத்திருக்கிருன். அம்பிகை கருணையே வடிவானவள். தோடுடைய செவியன் என்பது அவனுடைய அர்த்த நாரீசுவர வடிவத்தைக் காட்டுகிறது. இறை வனிடம் கருணை எந்த அளவில் இருக்கிறது? சத்தனுகிய சிவனும் சத்தியாகிய அம்பிகையும் எடைக்கு எடை சரிசமம், ஆதாவது சிவபெரு மானிடம் நூற்றுக்கு நூறுபங்கு கருணை இருக் கிறது, அத்தகைய கருணையாளன் என்ருல் உள்ளம் ஈடுபடுவதில் என்ன வியப்பு?

விடை ஏறி வருதல் அவனுடைய பெருங் கருணையைக் காட்டுகிறது, தன்னுடைய அருளைப் பெற வேண்டியவர்கள் தன்பால் வந்து புகல் புகவேண்டுமென்று அவன் காத்திருக்கவில்லை, உலகத்தில் பணத்தால் பெரியவர்களும் பதவியால் பெரியவர்களும் தம்மைப் பிறர் நாடி வருவதை விரும்புவார் களே அல்லாமல் தம்மால் நன்மை பெறுபவர் களை நாடி அவர்கள் போவதில்லை, ஆண்டவனே எல்லாரினும் பெரிய செல்வன்; எல்லாரையும் விடப் பெரிய பதவியில் இருப் பவன். அப்படி இருந்தும் உயிர்க்கூட்டங் களைக் காப்பாற்றி உய்யக் கொள்ளும் பொருட்டு அவன் அவர்களை நாடி வருகிருன். அவன் விடை ஏறி வருவது அதையே காட்டுகிறது. அவனுல் ஆட்கொள்ளப் பெறவேண்டும் என்று நாம் கொள்ளும் ஆவலை விட நம்மை ஆட் கொள்ளப் பெறவேண்டும் என்ற ஆவல் அவனுக்கு அதிகமாக இருக்கிறது, இதை மாணிக்கவாசகர் சொல்கிருர்.

அடியார்களுக்கு ஆண்டவனிடத்தில் உள்ள அன்பு பெரிதா? ஆண்டவனுக்கு அடியார்களிடத்தில் உள்ள அன்பு பெரிதா? உலகத்திலே மிகச் சிறந்த அன்புடையவர் இவர் என்று ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவர் அன்பை அளந்து பார்க்கிறேம்; அவருக்கு ஆண்டவன் செய்யும் அருளையும் அளக்கிறேம் இறைவனுடைய அன்புதான் மிகுதியாக இருக்குமாம்.

"தீர்ந்த அன்பாய அன்பர்க் கவரினும் அன்பு போற்றி" என்பது திருவாசகம்.

ஆகவே அவன் விடையேறி வரும் கோலம் அவனுடைய பெருங்கருணையைக் குறிப்பிக் கிறது,

தூவெண்மதி சூடியுள்ள இயல்பு இறைவனுடைய மாபெருங் கருணையைக் காட்டுகிறது. பகைவருக்கும் அருள் செய்வது சிறப்பான கருணை. தனக்குத் துரோகம் செய்த சந்திரனை இறைவன் தன் காலின் கீழ் அகப்பட்டதற்காகத் தலையின் மேல் வைத்துக் கொண்டான். இது மாபெருங் கருணை.

இறைவன் எல்லாம் செய்யவல்லவன்; எல்லாம் அறிந்தவன்; ஐந்தொழிலை இயற்றுபவன்; எல்லோருக்கும் மேலானவன் இவ்வளவு இயல்புகளையும் நாம் அறியும் போது நமக்கு வியப்பு உண்டாகிறது. கும்பிட்டு நிற்கிறோம். அதற்கு மேல் ஒன்றும் விளைவதில்லை.

அமெரிக்காவில் ஒருவர் மாதத்துக்கு ஓராயிரம் டாலர் சம்பளம் வாங்குகிறார் என்ற செய்தியைப் பத்திரிகையில் கண்டால் வியப்படைகிறோம்; அன்பரிடம் சொல்லி ஆச்சரியப்படுகிறோம்; அவ்வளவோடு சரி, நமக்கும் அவருக்கும் என்ன தொடர்பு? அவர் சம்பாதித்தால் நமக்கு என்ன ஆயிற்று?

ஆனால், ''நாலு வீட்டுக்கு அடுத்த வீட்டில் ஒருவர் மாதம் முந்நூறு ரூபாய் சம்பாதிக்கிறார். வேண்டுமானால் நமக்கு ஐந்து, பத்துகடன் தருவார்'' என்று ஒருவர் சொன்னால், ''அப்படியா! எனக்கு அவரை அறிமுகம் செய்து வையுங்கள்'' என்போம் ஏன்? நமக்கு ஏதேனும் அவசியம் நேர்ந்தால் அவரிடம் உதவி பெறலாம் என்ற ஆசைதான் இது மனித இயல்பு.

ஒருவரால் நமக்கு ஏதேனும் லாபம் கிடைக்குமானால் அப்போது அவரைநாடும் மனப்பாங்கு நமக்கு உண்டாகும். இறைவனுடைய பேராற்றலும் பிற பெருமைகளும் வியப்பை மட்டும் தரும். அவனால் நமக்கு என்னலாபம் என்று தோன்றும். அவன் நமக்கு நலம் தருவான், கருணை வழங்குவான் என்றால் அவனை நாடுவோம். நம் உள்ளத்தைக் கவரும் இயல்பு அவனுடைய கருணைக்குத்தான் உண்டு.

ஆகவே, ஞானசம்பந்தருடைய உள்ளத்தை இறைவன் கவர்ந்ததற்குக் காரணம் அவன் கருணை உடையவனாக இருப்பதே, தோடுடைய செவியனென்பதனால் அவன் முழுக் கருணையாளன் என்பதும், விடை ஏறி என்பதனால் பெருங் கருணையாளன் என்பதும். தூவெண்மதி சூடி என்பதனால் மாபெருங் கருணையாளன் என்பதும் நினைவுக்கு வரவே உள்ளம் அவனிடம் ஈடுபட்டுவிட்டது.

சுடலைப் பொடி பூசியது எவ்வாறு உள்ளத்தைக் கவரும்? அது அச்சத்தைத் தருவதன்றோ என்று தோன்றும், உலகுயிர்களுக்கெல்லாம் கருணை நல்கும் ஆண்டவன் நித்தியன் என்பதை உணரும்போது அவன் எந்தக் காலத்திலும் எந்த இடத்திலும் எந்த உயிருக்கும் கருணையை வழங்குவான் என்ற உண்மை தெளிவாகும். சிலருக்குச் சில காலம் நன்மையை உண்டாக்குவதை விடப் பலருக்குச் சிலகாலமும், சிலருக்குப் பலகாலமும் நலந்தருதல் சிறந்தது. அதை விடப் பலருக்குப் பல காலம் நன்மை விளைத்தல் மிகச்சிறந்தது. எல்லாருக்கும் எல்லாக் காலத்திலும் நலம் தருதல் எல்லாவற்றிலும் சிறந்தது. அத்தகைய மாபெருஞ் சிறப்பை உடையவன் இறைவன் என்றால் உள்ளம் ஈடுபடுவதில் வியப்பு உண்டோ?

ஞானசம்பந்த நாயகி:

மற்றொன்று; 'உள்ளம் கவர் கள்வன்' என்பது காதல் உலகத்துப் பரிபாஷை, காதலி சொல்லும் வார்த்தை. ''கண்வழி உளம் புகும் கள்வனே கொலாம்'' என்று சீதை நினைப்பதாகக் கம்பன் பாடுவான்.

இங்கே உடம்பால் மூன்றாண்டே வளர்ந்த சம்பந்தர் உயிரால் பதினாறாண்டு மங்கையாகிச் சிவபெருமான் பால் காதல் கொண்ட ஞானசம்பந்த நாயகி ஆகிவிடுகிறார். அவருடைய பக்குவம் உயர்ந்து விட்டது. ஞானானுபவத்திற்குரிய பருவம் வந்துவிட்டது. சிவகாமம் நிரம்பிப் பேரின்ப அனுபவம் பெறும் பருவ மங்கை

யாகி விட்டார். ஆதலால், "உள்ளம் கவர் கள்வன்" என்றார். இந்தப் பாட்டில் இது குறிப்பாகப் பெறப்பட்டாலும் இந்தப் பதிகத்தின் மூன்றாவது பாசுரம். இந்தக் கருத்தைத் தெளிவாக விளக்குகிறது.

"நீர்பரந்தநிமிர் புன்சடை மேலோர்
நிலாவெண் மதிசூடி
ஏர்பரந்த அன வெள்வளை சோரஎன்
உள்ளம் கவர்கள்வன்"

என்று அந்தப் பாடலில் வருகிறது. காதலால் மெலிந்து வளைகள் கழன்ற நிலையில் உள்ள காதலி பாடும் பாங்கில் இருக்கிறது அந்தப் பாட்டு. இதுவும் அதே நிலையிற் பாடியது தான். ஆகவே ஞானசம்பந்த நாயகி பாடிய பாடல் இது என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

மங்கையர் அழகு நிறைந்த கணவரை விரும்புவார்கள்; வெறும் அழகு மட்டும் போதாது; இளமையும் இருக்க வேண்டும். அப்போதுதான் நெடுநாள் இன்பம் துய்க்கலாம். "யௌவனமும் அழகும் சான்ற, நலம் வேண்டும் என்றிருப்பார் நாறுகுழல் மங்கையர்" என்பது ஒரு பாட்டு.

ஞானசம்பந்த நாயகி இறைவனுடைய தோடணிந்த கோலத்தால் பெண்களிடம் அன்புடையவன் என்பதையும்,விடைஏறிவருவதனால் வாகன வளம் உடையவன் என்பதையும், மதி சூடியதால் அலங்காரம் உடையவன் என்பதையும் உணர்ந்தாள். சுடலைப் பொடி பூசியதனால் அவன் நித்திய யௌவனம் உடையவன் என்று அறிந்தாள். பிறகுதான் உள்ளத்தைப் பறிகொடுத்தாள்.

"நித்த மணாளர் நிரம்ப அழகியர்
சித்தத் திருப்பரால் அன்னே என்னும்"

என்று மாணிக்கவாசகர் பாடுவார்.

தந்தையார், "யார் பால் கொடுத்தார்?" என்று கேட்ட வினாவுக்கு விடையாக இந்தப் பாசுரம் எழுந்தது. இன்னார் கொடுத்தார் என்று சொல்லியிருந்தால் ஏற்ற விடையாக இருக்கும். அவர், கொடுத்தார் யார் என்று கேட்டதற்கு இவர் கொண்டார் இவர் என்கிறார். வேடிக்கையாக இருக்கிறதல்லவா?

உள்ளம் கவர்தல்

கவர்தல்-திருடுதல். திருடர்களில் இரு வகை உண்டு. இரவில் திருடுபவர்கள் உடையவர்கள் அறியாமல் உடைமையைத் திருடுவார்கள். பகல் கொள்ளைக்காரர்கள் உடையவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே உடைமையைப் பறித்துக் கொள்வார்கள். இங்கே நடந்தது பகற் கொள்ளை.

ஒரு கள்வன் ஒருபொருளைத் திருடி விட்டால் அதன் பின்பு அந்தப் பொருள் அவனுடையதாகி விடும்; பறிகொடுத்தவன் தன் விருப்பம் போல அதை அநுபவிக்க முடியாது. இங்கே ஞானசம்பந்தர் தம் உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டார். அந்த உள்ளம் இறைவனுக்குரியதாகி விட்டது. உள்ளம் என்பது அகக்கரணம். அது இங்கே உபலட்சணமாக நின்று எல்லாக் கரணங்களையும் 'கவர்ந்தான்' என்று கொள்ளும்படி இருக்கிறது. இறைவன் அருளால் மெய்ஞ்ஞானம் பெற்றவர்கள் சீவன் முக்தர்களாகிப் பசுகரணங்களெல்லாம் பதி கரணமாக மாறி விளங்குவார்கள் என்பது சாத்திரம், இங்கே ஞானசம்பந்தருடைய உள்ளமும் பிறகரணங்களும் பதிகரணங்களாகி விட்டன. இனி அவர் பழைய குழந்தையல்ல; ஞானக் குழந்தை; சிவமான குழந்தை. உள்ளம் என்பதே ஆன்மாவைக் குறிக்கும். சிவ ஞான போதத்தில் "காட்டும் உளம் போல்" என்ற இடத்தில் உளம் என்பது ஆன்மாவையே குறிக்கிறது. ஆதலால் இங்கே, 'என் ஆன்மாவையே தன்னதாக்கிக் கொண்டான்' என்றும் பொருள் கொள்ள வழி உண்டு.

கள்வன்

வேதங்கள் நான்கு என்பது ஒரு வழக்கு' அதர்வ வேதம் ஏனை மூன்று வேதங்களினின்றும் எடுத்த பகுதிகளைக் கொண்டது என்பது ஒரு கருத்து. அதனால் ருக், யஜுர், சாமம் என்ற மூன்றே இயல்பான வேதங்கள். அதனால் தான்வேதங்களை த்ரயீ என்றும்சொல்வதுண்டு. "மும்மறையாலும் வணங்கப்படும் முக்கப்பன்' என்று தமிழில் வருகிறது.

மூன்று வேதங்களின் இடையில் இருப்பது யஜுர் வேதம். அதன் நடுவில் விளங்குவது ஸ்ரீருத்திரம். இறைவனை ஓரிடத்தில் கள்வன் என்று ஸ்ரீருத்திரம் சொல்கிறது. கள்வர் தலைவன் என்றே சொல்கிறது; ''தஸ்கராணும் பதயே நமோ நம'' என்று அதில் வருகிறது. இறைவனைக் கள்வன் என்று வடமொழி மறை சொல்வது போலவே தமிழ் மறையாகிய தேவாரமும் சொல்கிறது. வேதத்தில் முதலில் நிற்பது ருக் வேதம்; அதன் முதலாகிய ஓங்காரம் இந்தப் பாசுரத்தின் முதலில் அமைந்திருக்கிறது என்பதைப் பார்த்தோம். அதனோடு வேதங்களின் இடைநிற்கும் யஜுர்வேதத்தின் இடையே வரும் கள்வன் என்னும் சொல் இந்தத் திருப்பாசுரத்தின் இடையே நிற்பதும் காணத்தக்கது.

இவ்வாறு என் உள்ளத்தைக் கவர்ந்த கள்வன் இன்னுர் என்று சுட்டிக் காண்பிக்கிருர்.

''ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்து ஏத்த
அருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான்
இவன் அன்றே!''

சீகாழியின் பீடு

ஏடுடைய மலரான்-பல இதழ்களையுடைய தாமரையில் வீற்றிருக்கும் பிரமன். அவன் இங்கே வழிபட்டதனுல் இதற்குப் பிரமபுரம் என்ற பெயர் வந்தது, பீடு என்பது பெருமை. எடுப்பான நடையைப் பீடுநடை என்பார்கள். இந்தத் தலத்துக்கு மற்றதலங்களுக்கு இல்லாத பீடுஇருக்கிறதாம், பிரமன் வழிபட அவனுக்கு இறைவன் அருள் செய்த இடம் இது. இதில் என்ன பீடு இருக்கிறது?

உலகமெல்லாம் பிரளய வெள்ளத்தில் அமிழ்ந்தபோது சீகாழி அந்த வெள்ளத்தில் தோணியைப் போல மிதந்தது. அதனுல் தோணிபுரம் என்றபெயர் உண்டாயிற்று. அந்தத் தோணியில் தோணியப்பராகிய உமாபாகர் எழுந்தருளியிருந்தார். பிரளயம் முடிந்து மீண்டும் சிருஷ்டி தொடங்கியது. திருமால் வந்தான்; பிரமன் வந்தான். உலகைப் படைக்க எண்ணினுன். இறைவனுடைய அருள் இல்லாமல் அவனுல் படைக்க முடியுமா? பிரளய காலத்தில் உலகத்தில் சீகாழியே மிஞ்சியது. கதவையெல்லாம் பூட்டி ஓரிடத்தில் சாவியை வைத்தது போல, இறைவன் இவ்வூரில் இருந்தான். அவனருளாகிய சாவியை வாங்க இங்கே வந்து பிரமன் தொழுது வழிபட்டு இறைவன் திருவருளைப் பெற்று மீட்டும் படைக்கத் தொடங்கினுன். அத்தகைய பீடுடைய தலம் இது. பிரமபுரம் என்பது பாட்டில் பிரமாபுரம் என்று நீண்டது. பெரியவர்கள் திருவாக்கில் இந்தத் தலத்தின் புகழ் நீள்வது போலப் பெயரும் நீண்டு விட்டது.

இவன்

இறைவனை வேதம் அது என்றும் அவன் என்றும் சுட்டும். அவை சேய்மைச் சுட்டுகள். தூரத்தில் இருப்பவரை அவர்என்று சுட்டுவதும் அருகில் இருப்பவரை இவர் என்று சுட்டுவதும் இயல்பு. வடமொழி வேதம் அவன் என்று சொல்லும் போது, தென்மொழி வேதம் இவன் என்று சொல்கிறது.]

''பெம்மான் இவன் அன்றே''

என்கிறது, 'உள்ளம் கவர்கள்வன் பிரமபுரத்தில் மேவிய இவன்' என்று இணைத்துப் பொருள் செய்ய வேண்டும்.

வேதம் இறைவனை அறியவில்லை என்று சொல்கிறது. அது அவனைத் தூரத்திலிருந்து சுட்டுகிறதாம், அவனை அடைய வழி காட்டுகிறதேயன்றி அதுவே அவனை அடையவில்லை, ஓர் ஊருக்குச் செல்லும் வழியைக் காட்டச் சாலையில் கைகாட்டி இருக்கும். அந்தக் கைகாட்டியின் நீளம் இரண்டு அல்லது மூன்று முழம் இருக்கலாம். அது அந்த ஊருக்குப் போக வழி காட்டுமேயன்றி அந்த ஊர் வரையில் அது நீண்டிருக்காது. அது போன்றதுதான் வேதம். அது இறைவனை அடைய வழி காட்டும், அதற்கு நெடுந்தூரத்தில் இறைவன் இருக்கிருன் என்பதை அவன் என்று சுட்டுவதால் தெரிந்து கொள்ளலாம்.

இந்தப்பாசுரம் இறைவனை இவன் என்று சுட்டுகிறது. ஞானசம்பந்தருக்கு அருகில் இறைவன் இருப்பதனுல் இவன் என்கிருர். அவன் பக்கத்தில் நிற்கிருனு? உள்ளத்தில் இருப்பதனுல் இவன் என்ருர்.

புறநானூற்றில் ஓர் அரசன் சபதம் செய்யும் போது, "நான் என் பகைவர்களை வெல்லாவிட்டால் என் மனைவியினின்றும் பிரிந்து வாழ்வேனாக ;" என்று கூறுகிறான். அப்போது அவள் அந்தப் புரத்தில் இருந்தாள், "இவளினும் பிரிக" என்று அண்மைச் சுட்டாக இவள் என்கிறான். அங்கே உரையாசிரியர், 'நெஞ்சிற்கு அணியளாதலின் இவள் என்றார்' என்று எழுதுகிறார். அதுபோல இங்கே ஞானசம்பந்தர் தம் நெஞ்சிற்கு அண்மையில் இருப்பதனால் இறைவனை இவன் என்று சொல்கிறார்.

வேத அடையாளம் :

அன்றே என்பதில் உள்ள அன்று, ஏ என்பன அசைகள். பாட்டு நிரம்புவதற்கு அவை பயன்படுகின்றன; அவற்றிற்குப் பொருள் இல்லை

பரிபாடலில் "ஏ இன கிளத்தலில்" என்ற ஒரு தொடர் வருகிறது. அங்கே ஏ என்பதற்குச் சாமவேதம் என்று பொருள் கூறுகிறார் பரிமேலழகர். இங்கும் ஏ என்பது சாமவேத கானத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

தோ என்பதிலுள்ள ஓ முதல் மறையாகிய ருக் வேதத்தின் முதலையும், கள்வன் என்பது நடுவில் உள்ள மறையாகிய யஜுர் வேதத்தின் இடையிலுள்ள மந்திரத்தையும், இறுதியிலுள்ள ஏ என்பது சாம வேதத்தையும் குறிப்பிக்கும் அடையாளமாக விளங்கித் தமிழ் வேதத்துக்கும் வடமொழி வேதத்துக்கும் உள்ள தொடர்பைக் காட்டுகின்றன.

ஐந்தொழில் :

இந்தப் பாசுரத்தில் இறைவன் ஐந்தொழிலையும் நடத்துகிறவன் என்ற குறிப்பும் இருக்கிறது. உலகத்தைப் படைக்கும் போது முதலில் இறைவன் அர்த்த நாரீசுவரனாகத் தோற்றுகிறான்.

"நீல மேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை உலகும் முகிழ்த்தன முறையே"

என்பது ஐங்குறு நூறு. இந்தக் கோலத்தைத் தொன்மைக் கோலம் என்று பாடுவார் மாணிக்கவாசகர். ஆகவே தோடுடைய செவியன் என்பது படைப்பைக் குறிக்கிறது. இறைவன் அடியாரைக்காத்து அல்லாரைத் திருத்தியாண்டு உலகுயிர்களைக் காத்து வருகிறான்.



12-7-72 அன்று தஞ்சை மாவட்டம் சீர்காழி தாலுக்கா நாங்கூர் கிராமத்தில் திரு. நம்புவார்க்கன்பர் சுவாமி கோயில் திருப்பணித் துவக்க விழா, கும்பகோணம் உதவி ஆணையர் திரு R. அர்ச்சுனன் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. உதவி ஆணையர் திரு. R. அர்ச்சுனன், திருப்பணிக் குழுத் தலைவர் திரு. E. S. கணபதி, B. E., திருப்பணிக் குழுச் செயலாளரும் நிர்வாக அறங்காவலருமான திரு. அ. ராஜமாணிக்கம் மற்றும் குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள்,

விடையேறித் தூவெண்மதி சூடும் கோலம் இதைத் தெரிவிக்கிறது; காப்புத் தொழிலுடையான் என்பதைக் குறிப்பிக்கிறது. காடுடைய சுடலைப் பொடி பூசுதல் அவன் சங்கார நாயகன் என்பதைச் சுட்டுகிறது. கள்வன் என்பது மறைத்தலாகிய திரோபவம் செய்கிறவன் என்பதைப் புலப்படுத்துகிறது. 'அருள் செய்த என்பது ஐந்தாவது தொழிலாகிய அருளலைச் செய்பவன் என்பதைத் தெரிவிக்கிறது. இவ்வாறு படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்து தொழில்களையும் ஆற்றுபவன் இறைவன் என்பதை இந்தப்பாசுரம் புலனுக்குகிறது.

மூன்று நிலை :

இறைவன் மூன்று வகையான பக்குவர்களுக்கு மூன்று வகையில் அருள் செய்வான். விஞ்ஞான கலருக்கு உள் நிறைந்த சோதியாக நின்று அருளுவான்; பிரளயா கலருக்கு விடைமேல் வந்து கோலம் காட்டி அருள் செய்வான்; சகலருக்குத் திருக்கோயிலில் உள்ள மூர்த்தியாக அருள் புரிவான். தோடுடைய செவியன், விடையேறி ஓர் தூவெண்மதி சூடி காடுடைய சுடலைப் பொடிபூசி என்பது பிரளயா கலருக்கு அருள் செய்ய வரும் கோலத்தைச் சொல்லியது. உள்ளம் கவர் கள்வன் என்பது விஞ்ஞானகலருக்கு அருள்புரியும் கோலத்தைச் சொல்லியது; பிரமாபுரம் மேவிய பெம்மான் என்பது சகலருக்கு அருளும் நிலை. சாத்திரமாக இருந்தால் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்ற முறையில் சொல்லியிருப்பார். இது தோத்திரமாகலின் முறைமாறி வந்தது.

இவ்வாறு தமிழ் வேதத்தின் முதற் பாசுரத்துள் புதைந்து கிடக்கும் கருத்துக்களை ஓரளவு சொன்னேன். பேரறிவுடையவர்கள் இன்னும் விரிவாகக் கூற இடம் உண்டு.

"தோடுடைய செவியன்விடை ஏறி ஓர்
தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப்பொடி பூசிஎன்
உள்ளம் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாள்பணிந்து
ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவன் அன்றே ;"



தஞ்சை மாவட்டம் சுந்தரப் பெருமாள் கோயில் திருமகள் நிலமகள் உடனுறை திருவார் திரு. சௌந்தரராஜப் பெருமாள்.

மதிப்புரை

வாழ்க்கை விளக்கு :

இந்நூல், தமிழ்நாடு மேலவை உறுப்பினரும், தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் தலைவரும் ஆகிய, தவத்திரு குன்றக்குடி அடிகளார், M.L.C., அவர்கள் அவ்வப்போது எழுதியருளிய சிறந்த பல கட்டுரைகளின் தொகுப்பாகும். மதமும் மன்பதையும், சமயமும் சமுதாயமும், என்ன செய்தோம்?, வள்ளுவரும் லெனினும், வள்ளுவத்தில் அறிவியல், வள்ளுவம் ஏன் பிறந்தது?, ஒரு குறளும் ஒருமைப்பாடும், வாழ்விக்க வந்த வள்ளுவம், சேக்கிழார் கண்ட திருநாவுக்கரசர், வரலாறு மன்னிக்காது, இதயம் இல்லையா?, கல்வி உலகத்திற்கு, அருளும் துறவும், காந்தியடிகளும் சோஷலிசமும், புதுமை கனியப் பூத்தபுரட்சி, சிவநெறியின் சிறப்பியல்புகள், திருக்கோயில், திருக்குறள் ஒழுக்கம், திருக்குறள் வளர்க்கும் முறை, உயிர்க்குறுதி, திருக்குறளும் தமிழினமும், நமது கடமைகள் என்னும் (25) கட்டுரைகள், இந்நூலில் தொகுக்கப் பெற்றுள்ளன. இவற்றுள் தமிழக அறங்காவலர் மாநாட்டு வாழ்த்துரை, சென்னைச் சைவ சித்தாந்த மகாசமாச மாநாட்டுத் திறப்புரை என்பனவும் அடங்கியிருக்கின்றன.

இக்கட்டுரைகள், நல்ல இனிய தெளிவான எளிய நடையிலும், விறு விறுப்பான சிறந்த முறையிலும் அமைந்துள்ளன. படிப்போர்களின் உள்ளங்களைச் சிந்திக்கத் தூண்டும் தகையனவாக மிளிர்கின்றன. அறிவும் தெளிவும் சிந்தனை வளமும் முற்போக்கு எண்ணங்களும் கொண்ட நல்ல நூல். அனைவரும் படித்துப் பயன்பெறத் தக்க சிறந்த நூல். விலை குறிக்கப்பெறவில்லை.
கிடைக்குமிடம்: கலைவாணி புத்தகாலயம், தியாகராயநகர், சென்னை–17.

800 009 148702

புதுமை புரட்சிமுற் போக்குநலம் தேற்றும் ;
இதுமெய்ந் நெறிஎன் றுணர்த்தும்;-மதிநலஞ்சால்
நம்அருமைக் குன்றக் குடி அடிகள் நன்களித்த
செம்மைமிகும் இந்நூல் சிறந்து.

வித்தகஞ்சேர் வாழ்க்கை விளக்கு எனும்சிறந்த
புத்தகத்தில், நற்பொருள்கள் போற்றிமிக-வைத்தார் ;
குணநலஞ்சால் குன்றக் குடி அடிகள், மக்கட்
பணிநலங்கள் ஓங்கப் பரிந்து.

— ந. ரா. முருகவேள்.

16-8-72 அன்று ஆற்காடு மணிவாசக நிலயத்தில் மணிவாசகர் குருபூசையன்று சொற்பொழிவாற்றிய திருவாசகமணி திரு. கே. எம். பாலசுப்பிரமணியம், B. A., B. L. அவர்கட்கு வடஆற்காடு மாவட்ட ஆட்சியாளர் திரு. ஆறுமுகம் I. A. S. அவர்கள் பொன்னுடை போர்த்திய போது எடுத்த படம்.

நாகப்பட்டினம் வட்டம் சிக்கல் திரு. நவநீதேசுவரர் கோயிலுக்குத் தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் திரு. பி. சபாநாயகம் I. A. S. அவர்கள் வருகை தந்தபோது, அறங்காவலர் பெருமக்களால் கோயில் மரியாதைகளுடன் வரவேற்கப் பெறுதல்.(11-8-72)



சிக்கல் திரு. நவநீதேசுவரர் கோயிலுக்குத் தமிழ்நாடு அரசு தலைமைச் செயலர் திரு. பி. சபாநாயகம் I. A. S. அவர்கள், தம் இல்லத்தரசியாருடன் வருகை தந்தபோது, அறங்காவலர்கள் திரு. கே. ஏ. அம்பலவாணன், திரு. க. தென்கோவன், திரு. என். மாரிமுத்து, உதவி ஆணையர் திரு. என். சீநிவாசன், கோட்டாட்சித் தலைவர் திரு. எஸ். பெரியசாமி ஆகியோர் வரவேற்றுச் சிறப்பித்தல் (11-8-72)

சேலம் சின்னக் கடை வீதி திரு. சின்ன மாரியம்மன் ஆலயத்தில், பால் அங்காடிக் கட்டிடத்திற்கு மாண்புமிகு அறநிலைய அமைச்சர் திரு. மு. கண்ணப்பர் அவர்கள் அடிக்கல் நாட்டுதல். (17—4—72).



தஞ்சை மாவட்டம், மாயூரம் வட்டம், திருமணஞ்சேரி திரு. அருள்வல்ல நாதர் திருக்கோயிலின் சார்பில், தமிழ்நாடு போக்குவரத்துத்துறை அமைச்சர் மாண்புமிகு. திரு. எஸ். இராமச்சந்திரன், B. E. Hons., அவர்கள், பூர்ண கும்ப மரியாதை செய்து வரவேற்கப் பெறுதல் (9-9-72)

Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras-34, Printed at Sivarts Printers. 119, Strahans Road, Madras-12. Editor. N.R. Murugavell, M.A., M.O.L.